உ

சிவமயம்



கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும்,
பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி.ஜமுனா குணநாயகம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# ஜமுனை

12.01.2014

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப்
பிறப்பிடமாகவும்,
பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி. ஜமுனா குணநாயகம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

12.01.2014

# சமர்ப்பணம்...

பாரதில் எம்மை மேலாய்

பாங்குற இனிதே போற்றி

நேரது நிறைவ தாக

நின்றதாம் உயிர தானோர்

ஓரது உலகு விட்டு

ஓழியோர் உயர்ந்தோர் தாளில்

சீரது மலரை வைத்து

சேர்ந்துமே வணாங்கு கின்றோம்.

*இவ்வண்ணம்*
*கணவரும், பிள்ளைகளும்.*

உ
சிவமயம்



மலர்வு
16.05.1961

உதிர்வு
11.12.2013

# அமரர் திருமதி.ஜமுனா குணநாயகம் (வவா)

அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

வேண்டவொரு விஜயமதில் விரிகுளிர்கார்த் திகைமாதம்
பூண்டதிதி புனிதவளர் நவமியதில் - ஈண்டறியோர்
ஏற்றகுண நாயகனார் இன்ஜமுனா நன்மனையார்
சாற்றவுயர் வீடுற்றார் சார்ந்து.



புன்னாலைக்கட்டுவன் ஆயககடவை சித்தி விநாயகர் ஆலயத்தில்
வைரவர் அடிக்கல் நாட்டி வைத்தபோது

# தோத்திரப் பாக்கள்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொழியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குளவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவது இனியே.

## திருவிசைப்பா

நீறணிபவனக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய்யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனை
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருசிற்றம்பலத்துள் நின்ற
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாழ்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## அபிராமி அந்தாதி

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளக்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*

மறைந்தும் மறையாத மாண்புயர் மாதரசி ஜமுனா

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஒத்ததாம் உயர்வொடு நித்தமே நிறைவதாய்ச் சத்தமே புரியும் இந்துசமுத்திர மாதாவின் மடியிடையில் முத்தாய் மிளிரும் ஈழவள நாட்டின் தலையென நிலைபெறும் யாழ் புகழ் பதியாம் யாழ்ப்பாணத் திலே, தாண்டிடும் அரிய தன்மையதாக வேண்டிடும் அரிய விரிவொடு பரந்த கோண்டாவில் வடக்கிடத்திலே, சொல்லிடும் அரிய செல்லத்துரை என்னும் சீராளருக்கும் பெருமைசேர் ருக்மணி அம்மை யாருக்கும் அருமைசேர் உயர்வொடு அவனிதனில் 16.05.1961 அன்று வந்துதித்தவர்தான் பேரழகியெனும் பேசும் பேறுபெற்ற ஜமுனா என்னும் பெண்ணனங்கு. இவரது உடன் பிறப்புக்களாக இன்றளவும், நன்றே இந் நிலவுலகிலே நிலைபெற்று நிற்கும் நிலையினராக, பிறேமராணி, றஞ்சன், ராதாம்பாள் (ஜேர்மனி), வசந்தன் (இலண்டன்), சுதர்சன் ஆகியோர் உள்ளனர்.

நல்லவர் போற்றும் நாயன்மார்கட்டிலே சின்னவி என்ற சீராளரின் இன்னுயர் மகனான மாணிக்கம் என்ற மாண்பாளர் மண மதை நயந்து, கோண்டாவில் ஊரில் குடிகொண்ட ருக்மணி என்ற மங்கை நல்லாரை மணம் முடித்த வகையிலே பாங்குயர் இல்ல வாழ்விலே அறுவரில் ஒருவராய் அவனி வந்த ஜமுனா நல்லோர் பெறுமதிமிக்க பெறவரும் பேறென மிளிர்ந்தாரென்றால் அதில் இரு வேறு கருத்துக்கள் இருந்துவிட முடியாது. துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தை அடைந்த ஜமுனா நல்லோர் வேண்டிடும் விதத்தில் கோண்டாவிலூர் இராமகிருஷ்ணா வித்தியாலயத்திலே ஆரம்ப இடை நிலைக் கல்விதனைப் பூர்த்தி செய்த வகையிலே பெற்றோருக்கேற்ற பிரிய மகளாக உற்றாரும், மற்றோரும் போற்றிப் புகழ நன்றே அன்று விளங்கி நின்றார்.

தன்னுயர் நிறைவொடு மென்மையின் தன்மையில் இன்னுற இலங்கிய ஜமுனா நல்லோர் பருவ மங்கை ஒருவராகப் பாரதில் உலவி நின்றபோது இல்லறம் என்னும் நல்லறம் அதனை, அல்லலும் தொல்லையும் அமைந்ததோர் நிலையில் அடைந்து கொண்ட பாங்க தனை உள்ளத்தால் உள்ளுதல் அவசியமொன்றாகின்றது.

சொன்னாரும் புகழ்சார் புன்னை மாநகரிலே பயிர்த்தொழில் அதனை உயிர்த்தொழிலாகக் கொண்ட கோயில் அமைப்பின் வாயிற் படிக்கல் வடிவமைக்கும் புகழாளர் மாதன் (பணக்கார மாதன்) பரம்பரையில் உதித்த சீனியர் என்னும் சீராளருக்கும் இலட்சுமி என்ற பண்புயர் பெண்மை நல்லோருக்கும் உதித்த அமரர் பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம் (கனடா), குணநாயகம், நவரட்ணம், புஸ்பமலர், பூமலர், இரத்தினம்மா, பவானி (பட்டதாரி – அமரர்), சந்திரசேகரன் (அமரர்), சிவசேகரன் என்ற பதின்மருள் மூன்றாமவரான குணநாயகம் என்ற குணக்குன்று கொள்கைசேர் உள்ளம் உள்ளவராக வாழ்ந்திருந் தார். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக ஓயாது ஓடி ஓடி உழைத்த குணநாயகம் அவர்கள் சாதியைச் சாடி, சமத்துவம் தேடி நீதியை நாடி நின்ற ஒருவர் அடக்கப்பட்டோருக்கெனத் திறக்கப்படாத ஆலயங்களையும், தேனீர்ச்சாலைகளையும் தட்டித் திறந்த தன்மை யாம் வன்மைபெற்ற இன்னருளாளர் அவர். போராட்ட வீரனான குணநாயகம் அவர்கள் அவசியநிலை குறித்து, கோண்டாவிற் பதியிலே குடிகொண்டிருந்த போதுதான் ஜமுனா நங்கையைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஒத்ததாம் பண்பை மெத்தவே கொண்டிருந்த நிலையிலே ஜமுனா அவர்களும் குணநாயகம் அவர் களும் காதலில் கலந்து இல்லறம் அதனை நல்லறமாக நடத்தும் விருப்பதைப் பெற்றிருந்தனர்.

பண்பாளர் குணநாயகத்தைத் தலைவராய் ஏற்று இல்லறம் நடத்திட ஜமுனா அவர்களின் பெற்றோர் தடையிட்ட போதும் காதலில் கலந்த கருத்தொருமித்த இருவரும் அல்லலும் தொல்லையும் கடந்து

சொல்லரும் திறத்தில் இல்லறம் அதனை நல்லறமாக நடத்திய வகையிலே மாக்சனா, வோறினா, கபேஸ், றொமினா என்ற பண்புயர் மக்களைப் பயந்ததாம் பாங்கு என்றும் நன்றே எண்ணத்தக்க தொன்றாகும்.

பண்புயர் கணவனின் பாங்குயர் பாவையாய் மிளிர்ந்த ஜமுனா அவர்கள் அன்புயர் மக்களை இன்புற அரவணைத்துப் போற்றி வளர்த்து நின்றார். அந்த வகையிலே பற்றுயர் மக்கள் கற்பனை கற்று நற்பெரு நிலையுறுதற்கு ஏற்றன ஆற்றிய பாங்கு என்றென்றும் உள்ளங் கொள்ளத்தக்கதாகும். மாக்சனா அவர்கள் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திலும், யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்று உயர்தர வகுப்பில் ஏற்றசித்தி பெறுதற்கும், புத்திரி வோறினா அவர்கள் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திலும், வேம்படி உயர்தரப் பாடசாலையிலும் கற்று உயர்தர வகுப்பில் ஏற்ற சித்தி பெற்றுத் தாதியொருவராக ஏற்றரும் பணியைப் போற்றிடும் திறத்தில் ஆற்றுதற்கும், புத்திரன் கபேஸ் அவர்கள் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திலும், சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் கற்று உயர்தர வகுப்பில் சித்திபெற்று ஊடகவியலாளர் ஒருவராக உயர்பணி புரிதற்கும், மகள் றொமினா அவர்கள் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திலும், யாழ்.சுண்டிக்குளி உயர்தரப் பாடசாலையிலும் கற்று உயர்தர வகுப்பில் தேறி பட்டப் படிப்பைத் தொடர்ந்து உயர்ந்து நிற்பதற்கும் அன்புயர் கணவரோடு இணைந்து ஏற்றதாம் பணிகளைப் போற்றிடும் திறத்தில் ஆற்றிய பாங்கு சாற்றுதற்குரியதொன்றாகும்.

மற்றவரை மதிக்கின்ற பற்றுயர் பண்பாளராகிய ஜமுனா அவர்கள் உற்ற நல்லுறவுகளை ஏற்றன நல்கிப் போற்றிடும் புகழாளராக மிளிர்ந்து நின்றார். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக் கும் நல்லரும் இல்லத் தலைவியாக இவர் இலங்கி நின்றார். ஆம்; இல்லம் வருவோர்க்கு பருகும் பானம், உண்ணும் உணவு

அத்தனையையும் மெத்தவே நல்கி நித்தமே மகிழும் நிலையினராக நின்றிருந்ததை என்றுமே மறந்துவிட முடியாது. நிறைவுடன் அனைவரையும் போற்றி நின்ற ஜமுனா அவர்களின் மூத்த மகளுக்கு நிம்மதி நல்கும் மணாளனாகக் கோகுலரமணன் என்ற குணாளன் வாய்ந்த பாங்கும் இவ்விடத்திலே எண்ணிக் கொள்ளத்தக்கதொன்றா கின்றது.

மனையறம் அதனில் மணாளனின் மனங்கவர்ந்த மனையா ளாக, தக்கதாம் திறத்தில் மக்களைப் போற்றிய மாதாவாக திருக் கோலம் புகழும் திருவாட்டியாகத் திகழ்ந்த ஜமுனா அவர்கள் தியாகச் சுடரெனத் திகழ்ந்தவராகும் காலமெல்லாம் கடமையே புரிந்த காசிகை உடனுள் நோயது வந்து நுழைந்ததாம் நிலையை நினைக்கும்போது தாங்கரும் துயரம் பொங்கி எழுகின்றது. ஏற்றமிக்க ஜமுனா நங்கையின் இதய வாயிலில் (வால்வு) ஏற்பட்ட சுருக்கநிலை 11.12.2013 அன்று அன்னாரது வாழ்வின் இறுதிக்கு வழிவகுத்துவிட்டது.

மறைந்தும் மறையாத பண்புயர் பாவையாம் ஜமுனாவின் மறைவு நிலை காலனைக் களிப்புற வைத்ததோ என்னவோ உற்றவர், உறவினர், மற்றவர், மக்கள், பற்றுயர் கணவர் அனைவரையும் பதை பதைக்கச் செய்துவிட்டது. ஏங்கிடும் நிலையில் தாங்கருள் துயரில் இவர்களெல்லாம் தவித்து நின்றனர். பாசம் அறியாத காலன் பண்பாளர் ஜமுனாவிற்கு மோசம் புரிந்து விட்டான். இந்நிலையிலே சாற்றரும் நிலையில், ஆற்றரும் துயரில் அவதிதனை அடைந்திடும் பண்புயர் கணவன், பற்றுயர் மக்கள், மற்றுயர் உறவுகள் அனைவருக்கும் ஆறுதலோடு தேறுதல் கூறி மாறுதல் மாற்ற மனமதாய் முயலும் அதே வேளை, பொன்னவரான இன்னரும் ஜமுனா அவர்களது சொன்னரும் ஆத்மா முன்னுயர் முதலாய், அன்னையின் பரிவாய் அமைந்த தன்மை யின் ஈசன் தன்னடி அடைய என்றென்றும் நன்றே பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

# மதிப்பிற்குரிய ஜமுனா குணநாயகம் அவர்களின் ஞாபகார்த்தமாக....

கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜமுனா குணநாயகம் அவர்கள் கடந்த 11.12.2013 அன்று இயற்கை எய்திய செய்தியைக் கேட்டு அதிர்ச்சி. 52 வயதுடைய நடுத்தர வயதுப் பெண்ணான அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் புரட்சிப் போராளியான குணநாயகத்துக்கு (குணசிங்கம்) பேருதவியாக இருந்திருப்பார் என நம்புகிறேன். அவரைப் பற்றி நினைக்கும் பொழுது பல விடயங்கள் எனது ஞாபகத்திற்கு வருகிறது.

அவர் குணநாயகத்தை விரும்பிய காலம் தொட்டு அவர் இறக்கும் வரை ஒரு போராளியின் உதவியாளராகத், தோழியாக, மனைவியாக வாழ்ந்து மறைந்துள்ளார். தாழ்த்தப்பட்ட மக்களின் மாபெரும் தலைவரும் புகழ்பெற்ற பஞ்சமர் நாவலாசிரியருமாகிய தோழர் K.டானியலின் வேலைத்தளத்திற்கு 1977ம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நான் சென்றபோது அங்கு திடகாத்திரமான கட்டுமஸ் தான உடலைக் கொண்ட ஒரு வாலிபன் முகத்தில் தீவிர சிந்தனையுடன் தோழர் டானியல் அவர்களுடன் ஒரு சிறிய கட்டிலில் பேசிக் கொண்டிருந்தார். அவர் என்னைக் கண்டதும் தனது பேச்சை அத்துடன் நிறுத்திக் கொண்டார். அவ்வேளை தோழர் டானியல் அவர்கள் என்னைக்காட்டி இவர் நமது ஆள்தான். நான் தான் இவரை வரச் சொன்னேன். இவர் தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச காரியதரிசி என என்னை அறிமுகப்படுத்தினார் இவர் பெயர் குணநாயகம். குணசிங்கம் என்று அழைக்கப்படுவார். இவர் கடந்த இரண்டு வருடமாகத் தனிப்பட்ட முறையில் சாதி அமைப்புக்கெதிராகப் போராடி வருகின்றார், நமது இயக்கத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு இன்று நமது இயக்கத்தில்

சேருவதற்கு வந்துள்ளார் என்றார். அன்று தொடக்கம் இன்றுவரை தோழர் குணசிங்கம் சாதி அமைப்பைத் தகர்த்தெறியும் ஒரு போராளி யாக வாழ்ந்து வருகிறார். 1966ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சாதி அமைப்பு தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும் என்ற அடிப்படையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் நடந்த நீண்ட போராட்டத்தின் காரணமாக மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், செல்வச்சந்நிதி கோவில் போன்ற பிரசித்தி பெற்ற கோவில்கள் எல்லாம் சகல மக்களும் சமமாக வழிபடுவதற்கு திறக்கப்பட்டது. அதேபோல் சங்கானை, சண்டிலிப்பாய், கொடிகாமம், சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, அச்சுவேலி ஆகிய இடங்களில் உள்ள தேநீர்க் கடைகளில் உள்ள கறல் பேணிகள் எல்லாம் தூக்கி வீசப்பட்டு அங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம உரிமை வென்றெடுக்கப்பட்டது. அதேபோல் அடக்கி ஒடுக்கப்பட்ட கிராமங்களான நிச்சாமம், கன்பொல்லை, நெல்லியடி, மட்டுவில் போன்ற பல கிராமங்கள் எல்லாம் சாதி வெறியர்களிடமிருந்து நான்கு வருடங்களில் விடுதலை பெற்றன.

ஆனால் தோழர் குணசிங்கம் வாழ்ந்த புன்னாலைக்கட்டுவன், ஈவினை, அச்செழு, சிறுப்பிட்டி, புத்தூர், கைதடி, மயிலங்காடு, குப்பிளான், ஏழாலை, சூராவத்தை, சுன்னாகம் போன்ற கிராமங்கள் விடுதலை பெறவில்லை.

அக் கிராமங்கள் சாதி வெறியர்களால் மிகப் பயங்கரமாக அடக்கி ஒடுக்கப்பட்டன. வீடெரிப்பு, ஆட்களுடன் சேர்ந்து வீடெரித்தல், பாலியல் கொடூரம் போன்றவை கேட்பாரற்று நிகழ்ந்தது. பாடசாலை யில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி மறுப்பு. ஆலயங்களில் வழிபடத் தடை. எனவேதான் 1977ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் உதவியை தோழர் குணசிங்கம் நாடினார்.

அவர் புன்னாலைக்கட்டுவன் பகுதியிலுள்ள கூலி விவசாயி களையும் சாதி பேதமற்ற முறையில் ஒன்று திரட்டினார். அடக்கி யொடுக்கப்பட்ட வாலிபர்களை ஸ்தாபனப்படுத்தினார். கூலி உயர்வுப் போராட்டத்தை ஆரம்பித்தார். அத்துடன் விவசாயிகளுக்கு சிரட்டை யில் தேனீர் கொடுப்பதையும், தட்டுவத்தில் உணவு வழங்குவதையும் எதிர்த்து குரல் கொடுத்தார். இதனால் சாதி வெறியர்களின் பெரும் கோபத்திற்கு ஆளானார். அவரை எப்படியாவது கொலை செய்ய வேண்டும் என சாதி வெறியர் கங்கணம் கட்டினார்கள். ஆனால் விவசாயிகளினதும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களினதும் பாதுகாப்பு இவருக்கு இருந்ததன் காரணமாக சாதி வெறியர்களின் முயற்சிகள் பயனளிக்கவில்லை. விவசாயிகளை சாதி வெறியர்கள் தாக்கினாலும், விவசாயிகள் உறுதியுடன் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். இறுதியில் கூலித் தொழிலாளர்களின் மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தார்கள். சிரட்டையில் தேநீர் வழங்குவதை நிறுத்தி கிளாசில் தேநீர் வழங்கினார்கள். தட்டுவத்தில் உணவு வழங்குவதை நிறுத்தி எவர்சில்வர் பாத்திரத்தில் உணவு வழங்க ஆரம்பித்தார்கள். இதன் மூலம் விவசாயிகளின் சம்பள உயர்வும், தாழ்த்தப்பட்ட மக்களின் சம உரிமைப் போராட்டமும் வெற்றி பெற்றது. அத்தோடு புன்னாலைக்கட்டுவன் தேநீர் கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம உரிமையும் கிடைத்தது. இதன்மூலம் குணசிங்கத்துக்கு மதிப்பும் மரியாதையும் கிடைத்தது. ஆனால் அவருக்கு அவரது ஊரில் பெண் கொடுக்கப் பயந்தார்கள். தமது பெண் பிள்ளை விரைவில் விதவை யாவதை அவர்கள் விரும்பவில்லை.

ஆனால் கோண்டாவிலைச் சேர்ந்த ஜமுனா என்ற பெண் குணசிங்கத்தின் வீரத்தையும் அவரது நல்ல இலட்சியத்தையும் அவரது கொள்கையையும், அவரது திடகாத்திரமான அழகிய உருவத்தையும்

விரும்பினார். தலைமறைவாகக் கோண்டாவிலில் குணசிங்கம் வாழ்ந்தபோது அவரைக் கண்டு பழகிக் காதலித்தார். தனது விருப்பத்தைத் தனது பெற்றோரிடம் அவர் கூறியபோது அவரது பெற்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமது பிள்ளை விரைவில் விதவையாவதை அவர்கள் விரும்பவில்லை. அப்படி இருந்தும் ஜமுனா பெரும் போராட்டத்தின் மத்தியில் குணசிங்கத்தை மண முடித்தார். ஜமுனா குணசிங்கம் தமது வீட்டாரின் எதிர்ப்பையும் சாதி வெறியர் களின் எதிர்ப்பையும் ஒரே நேரத்தில் சந்தித்தார்கள். அக்காலத்தில் இவர்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் கஷ்டங்கள் சகலதையும் இயக்கத் தோழர்களின் ஒத்துழைப்புடன் முறியடித்தார்கள்.

போராட்டத்தின் வெற்றிகள் குணசிங்கத்தின் பெயரை உயர்த்தியது. அவரது புகழ் எங்கும் பரவத் தொடங்கியது. குணசிங்கத்திற்கு உறுதுணையாக நின்ற ஜமுனா குணசிங்கத்தின் நற்பெயரையும் கஷ்டங்களைத் தாங்கிக் கொண்ட பண்பையும் போராளியை விரும்பித் திருமணம் செய்துகொண்ட துணிவையும் கோண்டாவில் மக்கள் எல்லோரும் புகழத் தொடங்கினார்கள். இவற்றை அறிந்த அவரது பெற்றோரும் மகளை ஏற்றுக் கொண்டார்கள். ஜமுனா எங்கள் மகள் என்று சொல்வதில் பெருமைப்பட்டார்கள். இப்போராட்டத்தின் மத்தியில் குணசிங்கம் தம்பதியினர் நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களை ஆளாக்குவதிலும் பின்னிற்கவில்லை. குணசிங்கம் இப் போராட்டங்களை தோழர்கள் K.டானியல், S.T.நாகரட்ணம், தங்கவடிவேல் மாஸ்டர், கிருஷ்ணபிள்ளை மாஸ்டர், லோகேஸ்வரன், திருப்பதி, தவனேசன், முருகையா போன்றோரின் ஒத்துழைப்புடனும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டலுடனும் நடத்தினார். போராட்டம் தொடர்ந்தது கும்பிளானில் ஆலயப் பிரவேசம் செய்யப்பட்டு அக்கோயிலைத் திறந்தார்கள். அத்துடன்

ஏழாலை, மயிலங்காடு, சூராவத்தை போன்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான சமூக ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போராடி உரிமைகளை அம்மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்கள்.

அண்மையில் உரும்பிராய் செல்வபுரத்தில் 30 வருடங்களுக்கு மேல் குடியிருந்த நிலத்தை அங்கு குடியிருந்த 19 குடும்பங்களுக்கு சொந்தமாக்கிக் கொடுப்பதில் குணசிங்கம் தலைமை தாங்கி அதிலும் வெற்றி பெற்றார். இவரது இத்தகைய போராட்டங்களுக்கெல்லாம் உறுதுணையாக இருந்ததோடு 1995 இல் ஏற்பட்ட பெரும் பிரச்சினையில் சகல மக்களும் இடம்பெயர்ந்த காலத்தில் ஏற்பட்ட மறக்க முடியாத கஷ்டங்களையும், தாங்க முடியாத துன்பங்களையும் தாங்கிக்கொண்டு தனது குடும்ப வாழ்க்கையை கணவருடன் இணைந்து சிறப்பான நிலைமைக்கு உயர்த்தினார். குடும்பம் பூத்துக்குலுங்கிய வேளையில் 11.12.2013 அன்று ஏற்பட்ட திடீர் சுகவீனத்தால் யாருமே எதிர்பாராத வேளையில் தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

தனது மனைவியாகிய ஜமுனா குணசிங்கத்தின் இழப்பு குணசிங்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். ஜமுனா குணசிங்கத்தின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

*புரட்சிகர போராளிகளின் சார்பில்*
**எம்.ஏ.சி.இக்பால்**
**17A ராகுல மாவத்தை,**
**பறராங்கரா றோட், தெகிவளை.**



# பெண்ணிருந்த பெருமை

"நான் பண்டிதருக்குப் பெண்ணிருந்தவள்"

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் தாயார் பிறர் மத்தியில் தனது முக்கியத்துவத்தை, பெருமையை எடுத்துச் சொல்ல வேண்டிய தருணங்களில் இறுமாப்புடன் இவ்வாறு கூறுவாரென, பேராசிரியர் என்னுடன் பேசிக் கொண்டிருந்த சமயம் ஒருநாட் சொல்லி மெல்லச் சிரித்தார். தனது கணவருக்குரிய பெருமைகள் யாவும் தனக்குரிய பெருமைகளாகக் கொள்ளும் பெண்மையின் உயர்ந்த மனப்பாங்கு, பேராசிரியரின் அன்னையின் குரலில் ஒலித்தமையை அப்பொழுது நான் உணர்ந்து கொண்டேன். நல்ல மனைவியாக வாழ்ந்த மேன்மை யான பெண்மைக்குரிய எங்கள் பாரம்பரியம் இத்தகையதுதான்.

கணவர் மீது வற்றாத அன்புப் பிணைப்பும் பெருமதிப்பும் கொண்டுள்ள பெண்கள் பலர் மனைவியராக வாழ்ந்து வரும் சமூக அமைப்பு இன்னமும் மாற்றமுறவில்லை. இவர்கள் கணவரின் வாழ்க்கைப் பயணத்தில் உற்றதுணையாக இருந்து தமது பங்களிப் பினை வாழங்கி வருகின்றார்கள். குடும்பத் தலைவனின் செயற்பாடு களின் சமபங்காளிகள் இவர்களே ஆவர்.

சீனியர் குணநாயகம் (குணசிங்கம்) அவர்களின் மனைவியார் தனது கணவனின் பொருட்டு பெருமைப்படுவதற்குரிய பல நியாயங் கள் இருக்கின்றன. குணநாயகம் அவர்கள் சராசரியான ஒரு மனிதனாகத் தமது வாழ்க்கையை சமூகத்தில் முன்னெடுக்கவில்லை. அவர் சமூக மனிதனாக, சமூகப் போராளியாக, வர்க்க சிந்தனை யாளனாக, ஒடுக்குதலுக்கெதிரான போராட்டக்காரனாகத் தமது வாழ்க்கையிற் செயற்பட்டு வந்த பெருமைக்குரியவர். குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் தமது வாழ்க்கையை முடக்கிக் கொள்ளாத

சமூகப் பொறுப்புள்ள ஒருவர். அதனால் சமூகத்து மத்தியில் அவர் உயர்ந்து அனைவர் பார்வைகளிலும் அவரது ஒளி தென்படுகிறது.

இந்தக் குணநாயகம் அவர்களுக்குரிய பெருமை, சமூக மதிப்பு அனைத்தும் அவருக்குப் "பெண்ணிருந்த" மனைவியாக வாழ்க்கைப் பட்ட அவர் மனைவிக்கும் உரியதல்லவா!

குணநாயகம் அவர்களை நினைக்கும் போது,

**"கட்டுறுதி யுள்ளவுடல் கண்ணிலே நல்லகுணம்**
**ஒட்டுறவே நன்றாக உரைத்திடுஞ்சொல் - ஈங்கிவற்றால்**
**தக்கவனென் றுள்ளத்தே சார்ந்த மகிழ்ச்சியுடன்"**

எனப் பாரதி கூறும் பாடல் நெஞ்சில் எழுகின்றது.

பாரதியின் பாடலுக்கு இலக்கணமாகத் திகழும் சமூகப் பணியாளன் குணநாயகம் அவர்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரியவர் அவர் மனைவி.

குணநாயகம் நான் மதிக்கும் அன்புக்குரிய ஒரு தம்பி. அவரது வாழ்க்கைத் துணை மறைந்த செய்தி மனதுக்குப் பெரும் சுமையாக வந்து வீழ்ந்தது. நான் மரணச் சடங்கிற் கலந்துகொள்ளும் வரை காலஞ் சென்றவரின் பெயர் எனக்குத் தெரிய வராது. அங்கு கிடைத்த அஞ்சலிப் பிரசுரம் ஒன்றினை வாங்கிப் பார்த்து குணநாயகம் அவர் களின் மனைவி பெயர் ஜமுனா என்பது கண்டு நான் உள்ளம் அதிர்ந்தேன். எனது மனைவி மேலும் அதிகமானது.

அகவை ஒன்று ஆவதற்கு முன்னர் மறைந்துபோன எனது குழந்தையின் பெயரும் ஜமுனாதான். பள்ளி முடிந்து நான் வீடு வந்து சேரும் வேளைகளில் அந்தப் பிஞ்சு நிலா தொட்டிலுள்ளே படுத்துக்

கிடப்பாள். அப்பொழுது தினதும் எனது பேனாவைத் தூக்கி அவள் கையில் கொடுப்பேன். அவள் வெகு ஆவலுடன் எனது பேனாவைப் பற்றிப் பிடித்துக் கொள்வாள். அவள் எதிர்காலம் பற்றி அப்பொழுது எனக்குள்ளே மகிழ்வான கற்பனை சிறகு விரித்தது. ஆனால் எங்களை விட்டு அவள் போன பின்னர், அவள் தூக்கிய பேனாவை நான் கீழே போட்டு விடவில்லை.

அவ்வாறே தம்பி குணநாயகம் அவர்களின் வாழ்வின் சரிபாதி யாக வாழ்ந்த ஜமுனா மறைந்து விட்டார். ஆனால் குணநாயகம் அவர் களின் பயணம் தொடர வேண்டும் என்பதற்காகவே, சமூகப் பொறுப்போடு குடும்பப் பொறுப்பினையும் சுமக்கும் வண்ணம் பிள்ளைச் செல்வங்களைத் தந்து போயிருக்கின்றார். குணநாயகம் கைப்பிடித்த ஜமுனாவுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை அதுவாகவே இருக்கும்.

**சாகித்திய ரத்தினா**
**மூத்த எழுத்தாளர்**
**தெணியான்**



## அமரர் ஜமுனா குணநாயகம் அவர்களுக்கான
# 31ம் நாள் இரங்கல் மலரிதழ்

"மனைத்தக்க மாண்புடையன் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்கான் வாழ்க்கைத் துணை"

என்பது தெய்வப்புலவருடைய வாக்கு. அதாவது குடும்பத்திற்கு ஏற்ற குணநலன்கள் உடையவளாகி, கொண்ட கணவன் செல்வ நிலை யறிந்து குடும்பம் நடாத்துபவளே உண்மையான வாழ்க்கைத் துணை யாவாள் என்பதற்கமைய அமரர் ஜமுனா குணநாயகம் அவர்கள் இப் பூமியில் வாழ்வாங்கு வாழ்ந்த ஓர் இல்லத்தரசி. அவர் பிறந்த ஊராகிய கோண்டாவிலிலேயே நானும் பிறந்து வாழ்கின்றவன். அதுவும் அவர் பிறந்த வீட்டிற்கு எதிராகவுள்ள இரு வீடுகள் தள்ளியிருக்கும் வீடே எனது பிறந்த வீடு. ஆதலால் அவர் பிறந்த, வாழ்ந்த குடும்பநிலை எனக்குத் தெரிந்த ஒன்றுதான்.

அமரர் ஜமுனா அவர்கள் சிறுவயதாக இருக்கும்போது அவரு க்கு இருந்த அழகும் கவர்ச்சியுந்தான் திருவாளர் குணசிங்கத்தை விரும்பச் செய்தது. குணசிங்கம் அவர்கள் ஒரு யதார்த்தவாதி, உரிமைக்காக குரல் கொடுத்தவர், திடகாத்திரமான உடற்கட்டும், தீவிர மான செயற்திட்டங்களும் உடைய குணசிங்கத்தை ஜமுனா அவர்கள் மானசீகமாகக் காதலித்தார். குணநாயகம் என்ற குணசிங்கத்தின் தீண்டாமைக்கெதிரான சாதி ஒழிப்புப் போராட்டம், ஆலயப் பிரவேசம், ஒடுக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுக்கும் குணநாயகத்தின் மனோதிடம் ஜமுனாவிற்குப் பிடித்துக் கொண்டது. ஜமுனாவின் தாய், தந்தையர், சுற்றத்தார் இவர்கள் இணைவதை எதிர்த்த போதிலும் குணநாயகமும் ஜமுனாவும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற பொய்யாமொழிப் புலவர் வாக்குப்படி குடும்ப வாழ்வின் புகழும் பெருமையும் அன்போடு நல்வழியில் செல்வதற்காக அமரர் ஜமுனா அவர்கள் தன்னை அர்ப்பணித்து குடும்பத்தின் ஒளி விளக்காக வாழ்ந்தவர். குணநாயகம் அவர்கள் யதார்த்த வாதியாகையால் வெகுஜன விரோதியாக வாழ்ந்தாலும் மனைவியின் அறன் எனப்பட்ட இல்வாழ்வும் பொறுமை எனும் அணிகலனும் குணநாயகத்திற்குப் பெருமையையும் சிறப்பையும் கொடுத்தது.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்பதற்கமைய திருவாளர் குணசிங்கத்திற்கு மங்கலமாக நல்ல மனைவியும் பெருமை போற்றுதற்குரிய நல்ல பிள்ளைகள் நான்கை யும் பெற்றுக் கொடுத்தது.

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை" என்ற பெருநோக்கில் பிள்ளைகளைக் கல்வி கற்பித்து இல்லறம் எனும் நல்லறத்தில் வாழ்ந்து வந்ததுடன், கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஶ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான வருடாந்த இலட்ச்சார்ச்சனைத் திருவிழாக்களில் முதல் நாள் திருவிழா உபயகாரர்களாக இருந்து தெய்வ வழிபாட்டிலும் இருவரும் ஈடுபட்டு வாழ்ந்ததுடன் இவர் மண் விற்பனைத் தொழிலில் ஈடுபட்டவராதலால் கோவில்களுக்கு இலவசமாக மண் அன்பளிப்புச் செய்கின்றமையையும் நான் அறிவேன்.

இவ்வகையில் புதிதாகக் காணியொன்றை வாங்கி அதில் நிரந்தர வீடொன்றைக் கட்டுவதற்குத் தற்காலிகமான ஒரு சிறுவீட்டை அமைத்து தன் வளர்ந்த சிரேஷ்ட புத்திரிக்கு வெளிநாட்டு மருமகனை

யும் திருமணம் கோலகலமாகச் செய்வித்து சந்தோஷகரமாக வாழ்ந்தவர்தான் ஜமுனா அவர்கள்.

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்க்கும்"** குணநலத்தையுடைய ஜமுனா அவர்களைத் துணையாகக் கொண்ட குணநாயகத்திற்கு என்ன குறை என்று கூறும் வகையில் வாழ்ந்தவர்கள். ஆயினும் **"வகுத்தான் வகுத்த வழியல்லால்"** எம்வாழ்வு அமைவதை யார் அறிவார்.

ஜமுனா அவர்களை யாரும் அறியாவண்ணம் உடனிருந்து கொல்லும் வியாதியொன்று பீடித்துக் கொண்டது. **"ஊழிற் பெருவலி யாவுள"** என்பதற்கமைய பாயின்றி, படுக்கையின்றி நேற்றிருந்தவர் இன்றில்லை என்று எல்லோரும் கவலைப்படும் அளவிற்கு எல்லோரது துன்பத்தையும் துடைக்க ஆறுதல் கூறுகின்ற குணநாயகத்தைத் தனிப் பறவையாகத் தவிக்கவிட்டும், தாயைப் பிரிந்த பசுக்கன்றுகள் போல பிள்ளைகளைத் தனியே விட்டும் பேரப்பிள்ளை முகம் காணும் பாக்கியம் இன்றியும் புதிதாக அமைக்கும் வீட்டின் விளக்கேற்றும் விதியின்றிச் சென்றுவிட்டாய். ஆயினும்

**"பிறப்பவர் இறப்பதும் இறப்பவர் பிறப்பதும்**
**மண்ணவர் விதியே"**

ஆதலால் அன்னாரின் இழப்பு குணநாயகம் அவர்களுக்கும், அவர் பிள்ளைகள், சுற்றத்தார் போன்றோருக்கும் பேரிழப்பாகும்.

***அன்னாரின் ஆத்மசாந்திக்கு எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.***

இஃது
சிவத்திரு. S.K.N தவராஜா (M.A)
சமாதான நீதிவான்,
சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# பண்புயர் கணவருக்கு ஏற்ற பாங்குயர் பாவை ஜமுனா

முட்டையுள் ஒட்டிக் கருவுயிராயிருந்து, பறப்பதை நயந்து, முட்டையை உடைத்துக்கொண்டு வெளியே வந்து, முட்டையை முட்டைக் கோதாக்கிப் பறந்து செல்லும் பறவைக்கும் முட்டைக் கோதிற்கும் உள்ள உறவானது ஒன்றாய் உடம்பொடு நன்றாய் இணைந்து நின்று, பின்னர் உடம்பதை வேறாக்கிப் பிரிந்து செல்லும் நிலையிலான உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவாக அமைகின்றது. இதனையே மெய்யுரை பகர்ந்த பொய்யில் புலவனும்,

"குடம்மை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

என்று அன்றொரு நாள் நன்றே நயம்படக் கூறிச் சென்றுள்ளான். இந்த அரும்பெரும் உண்மைக்கு விதிவிலக்காக மண்ணதில் உதித்த எந்த வோர் உயிரியும் அமைந்து விடுவதில்லை. அந்த வகையிலேதான் கோண்டாவில் தந்த குலமகளான ஜமுனா குணநாயகத்தின் வாழ்வும் அமைந்து விட்டது. மனையற வாழ்வுக்கான நற்குண நற்செய்கைகள் பொருந்தியிருந்த பூவையானவர், மண்ணகம் துறந்து விண்ணகம் புகுந்தது "நிலையாமை என்பதே நிலையானது" என்ற தலையாய உண்மையை நிலையான உண்மையாக்கினாலும், **"காலங் கணிக்கும் காலனுக்குப் பாசங் கணிக்கும் பக்குவமில்லாது போயிற்றே"** என்று பற்றுயர் கணவன், பாசமார் மக்கள், மற்றுயர் உறவுகள் மனங் கலங்கு வதைப் பார்க்கும்போது கண்கள் குளமாகின்றன. அன்பு நண்பர் குணநாயகம் அவர்களது நிலையை நினைந்து உள்ளம் உருகிய வகையில் பின்வரும் கவிகள் என் எண்ணத்திரையில் மிதந்து வந்தன.

**அன்புயர் நண்பர் எந்தன் அருங்குண நாய கந்தன்
பண்புயர் மனையாள் இங்கு பாரதைத் துறந்து கொண்டு
என்புடல் புவிக்கு விட்டு எங்குதான் ஓடி னாரோ
பின்புடன் கணவரிங்கு பேசரும் சோக முற்றார்**

கண்ட கோண் டாவில் தந்த காரிகை ஐமுனா இங்கு
கொண்டதன் கணவர் உள்ளம் கூடிய குணத்தி னாளர்
அண்டநின் றவருக் காக அருமையாய் வாழ்ந்த பாவை
விண்டுயர் வாழ்வோ கொண்டார் வேதனை தானோ தந்தார்?

முடிந்ததே வாழ்வ தென்று முற்றுற உணர்ந்த பின்னர்
விடிந்ததாம் பொழுது மன்று விடிந்திடாப் பொழுது மாச்சே
மடிந்திடல் இயல்ப தென்றால் மாய்ந்திடும் வயது தானோ
படிந்தவர் கணவர் மக்கள் பார்த்துமே பதைப்ப தாமோ!

சென்றனர் ஐமுன்னா என்றால் சொல்வதே முடிவ தென்றால்
இன்றுடன் சென்ற தந்த இறையடி என்ற போதும்
என்றுமே காணு கின்ற இயல்புமிங் கில்லை ஏதோ
நன்றுடன் சென்று வாரீர் நானுமஞ் சரியே தந்தேன்.

திருமணம் என்பது உண்மையிலே இறைவனால் நிச்சயிக்கப்படு கின்ற ஒன்றென்று கூறலாம். உண்மையிலே அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த சமுதாயம் ஒன்றின் விடிவிற்காக உயரிய உணர்வுடன் ஓயாது வாழ்வெல்லாம் உழைத்த, கண்ணியம் நிறைந்த புண்ணிய சீலராக மிளிர்பவர்தான் ஐமுனா அவர்களின் கணவரான குணநாயகம் அவர்கள். சுருங்கக்கூறின், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை வாழ்விக்க வந்த வன்மையான உண்மை மனிதர் குணநாயகம் அவர்கள் அநீதி கண்டு பொங்கியெழும் ஓர் எரிமலை எனலாம். குணக்குன்றெனும் அவர் சாதிதனைச் சாடி, சமத்துவத்தைத் தேடி, நீதிதனை நாடி, நிறை மனிதர் சிலரோடு கூடி ஓயாது ஓடிய வகையிலே உணவகங்களிலே, தொழிலகங்களிலே, ஆலயங்களிலே இடம்பெற்ற பாகுபாடானது பறந் தோட ஏற்றன ஆற்றிய பாங்கு போற்றுதற்குரியதாகும். குணநாயகம் அவர்கள் புரட்சி புரிந்த வயிலே தனது பிறந்தகமான புன்னாலைக்கட்டுவன் மயிலங்காட்டினைத் துறந்து கோண்டாவி லூரிலே தற்காலிகமாக வதிந்த போது, ஐமுனா என்ற பெண்ணனங் கோடு பழகுகின்ற பாக்கியம் அவருக்குக் கிட்டியது. வஞ்சமற்று,

அஞ்சா நெஞ்சுரமுற்று, மிஞ்சி மிளிரும் குணப்பண்போடு விஞ்சி விளங்கிய குணநாயகத்திற்கு, உண்மை உள்ளம் உள்ள வகையில், புனிதம் செறிந்த பூவையொடுவராய்ப் போற்றும் திறத்தில் இறைவன் வகுத்தமைத்த ஒருவர்தான் ஜமுனா அவர்கள். இல்லறம் என்னும் நல்லறம் அதனில், பல்லரும் பிறவாம் பொதுப்பணி அதனில் கணவரு க்கு ஏற்றதோர் துணையாகப் போற்றுமாறு இருந்து, ஆற்றலால் ஆற்றிய அரும்பணிகளோ அனேகம். கணவருற்ற சோதனைகளிலும் வேதனைகளிலும் பங்குகொண்டு உத்தம மனையாளாக இத்தரை மீது உலவிய ஜமுனா அவர்கள், இடர்கண்டு தளர்ந்திடாத திறத்திலே கணவரின் குணப்பண்பினையும் கொண்டிருந்தார் எனலாம். தலைவ னின் அத்தனை வெற்றியினும் தலைவி ஜமுனாவிற்குப் பங்கு இருந்த தென்றால் அதில் இருவேறு கருத்துக்கள் இருந்துவிட முடியாது. அந்த வகையிலே காதற் கணவனின் கருத்துரையின்படி

**"பெண்கொண்ட கோலத்தில் கண்கண்ட தெய்வம்**
**விண்கொண்ட விதமாக மண்கண்ட தெய்வம்**
**பண்கொண்ட பாடற்குப் பயனான தெய்வம்**
**விண்கொண்ட அளவற்ற விதமான மனையாள்"**

ஆக விளங்கிய தன்மைதனை உன்னும்போது, அன்னவர் திறத்தினை இன்னும் உரைத்திட என்னென்ன மொழிகளை இயம்பலாமென எண்ணித் தடுமாற வேண்டியுள்ளது.

நிறைவாக அன்னவர் பிரிவால் உன்னரும் நிலையில் இன்னலே எய்தும் இன்னருங் கணவருக்கு, சொன்னரும் பிள்ளைச் செல்வங்களு க்கு ஆறுதலோடு தேறுதல் கூறி சாவதன் கொடுமையைச் சாடிடும் வகையில் சாவே உனக்கொரு சாவு வராதா? என்ற முன்னவன் சொல்லுரையை உரக்கச் சொல்லி அன்னவர் ஆத்மா இன்னருள் எய்த பொன்னவனான என்னரும் ஈசன் தன்னடி அதனை ஏற்றிப் போற்றி துதிக்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**மு.பாலசுப்பிரமணியம்**
**ஓய்வுநிலை அதிபர்,**
**யாழ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்.**

**P.J.ANTONY J.P.U.M**
ATTORNEY-AT.LAW & NOTARY PUBLIC
COMMISSIONER FOR OATHS.

TELE. NO :- 021 222 8079 / 021 321 9309

37, PALALY ROAD,
JAFFNA.
27.12.2013

---

மக்களால் நன்கு அறியப்பட்டவரும் தீவிர சமூக விடுதலைப் போராளியுமான தோழர் குணசிங்கத்தின் அன்பு மனைவி குணசிங்கம் ஜமுனா அவர்களின் மறைவு எமது சமூகத்திற்கு பேரிழப்பாகும். அன்னார் வாழும் காலத்தில் தமது கணவருடன் சேர்ந்து சமூகப் பணிகளில் செயற்பட்டு வந்தார். அத்துடன் தமது இல்லத்துக்கு உதவி நாடி வருபவரை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்குத் தம்மாலான உதவிகளையும் செய்து வந்தார். அவர்களின் திடீர் மறைவு எம்மைத் தீரா சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அவர்களின் நாமம் வாழ்க. அன்னாரை இழந்து துன்பத்தினால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பி.ஜே. அன்ரனி
சட்டத்தரணி

**P. J. ANTONY, J.P.U.M.**
**Attorney-at-Law & Notary Public**
**Commissioner for Oaths**
**37, Palaly Road, Jaffna**



# அமரர் திருமதி.ஜமுனா குணநாயகம் நினைவாக...

மனிதர்கள் இந்த மண்ணை முதன் முதலில் எட்டிப் பார்க்கின்ற போதே அவர்களது இறுதிப் பயணமும் தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இந்த உலகில் தோன்றிய உயிரினம் எதுவுமே நிலைத்து நின்றதாக வரலாறு இல்லை. மனித வாழ்க்கையானது பல அத்தியாயங்களைக் கொண்டதொரு புத்தகமாகும். அதில் மகிழ்ச்சியும், கவலையும், வேதனைகளும், சோதனைகளும் கலந்து காணப்படுகிறது. இந்த வகையிலே திருமதி. ஜமுனா அவர்களும் கணவனுக்குச் சிறந்த இல்லத் தரசியாகவும் பிள்ளைகளுக்குச் சிறந்த தாயாகவும் அயலவர்களைத் தன்பால் அரவணைக்கும் நண்பியாகவும் தன்பால் ஈர்க்கக் கூடிய ஈர மனம் கொண்டவராகக் காணப்பட்டார்.

இவருடைய கணவர் திரு.குணநாயகம் அவர்கள் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்து சமூக அடக்குமுறைக்கு எதிராகப் பல போராட்டங்களை நடாத்தி சமூக விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருகிறார். இவருடைய மனைவியை கால்மாக்ஸ்சினுடைய மனைவி ஜென்னி யாகவும் இவரை ஈழத்து கால்மாக்ஸ்சாகவும் நான் பார்க்கிறேன். எனக்கு அண்ணன் குணநாயகத்தின் நட்புக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். அண்ணன் குணநாயகம் அடக்கப்பட்ட ஒடுக்கப் பட்ட மக்கள் சமூகத்தின் கலங்கரை விளக்கு. அந்த விளக்கை அணையாது பாதுகாத்து வந்தவர் அமரர் திருமதி.ஜமுனா அவர்கள். வெற்றிபெற்ற ஒவ்வொரு ஆணின் வாழ்க்கைக்குப் பின்னே ஒரு பெண் இருந்தாள் என்பதுபோல அண்ணனின் வெற்றிக்குப் பின்னே ஜமுனா அவர்கள் உறுதியாக இருந்தார் என்பதை நாம் அறிவோம்.

**"சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்"** என்ற தனது கணவனுடைய தாரக மந்திரத்தைத் தானும் இறுதிமூச்சு வரை உச்சரித்துக் கொண்டே சென்றுள்ளார். **"தீயே உனக்கொரு நாள் தீ மூட்டிப் பாராயோ. சாவே உன்கொருநாள் சாவு வந்து சேராதோ"** இந்த வீடு உன் பிரிவெனும் துயரத்தால் இருள் அடைந்து விட்டாலும் உன் சமாதியில் இரவும் பகல் போல் ஒளி பொருந்தியிருக்க வேண்டுமென்று ஆசீர்வதிக்கிறேன்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

திரு.சி.தவநாயகம்
அதிபர்
யா/சண்டிலிப்பாய் அ.த.பாடசாலை.



# மனைத்தக்க மாண்புடையா மங்கையர் திலகம்

வையகத்திலே வாழ்வது என்பது முக்கியமல்ல. வாழ்நாளிலே தனக்காகவும் தான் சார்ந்தவர்களுக்காகவும் எது சாதிக்கப்பட்டது என்பதுதான் முக்கியமானது. அதுவே வாழ்வின் இலட்சியமும் ஆகின்றது. இந்த வகையிலே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்திலே வைக்கப்பட்டவர் வற்றாத வள நதியாக என்றும் அன்பையும் மனிதநேயப் பாங்கினையும் பிறர் மீது பிரவாகித்தவர் அமரர் திருமதி.ஜமுனா குணசிங்கம் அவர்கள்.

இவர் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு இல்வாழ்க்கைக்கு ஏற்ற தலைசிறந்த பண்பாளராகத் திகழ்ந்தார். தனது குடும்பத்தினரதும் உறவினரதும் சமூக செல் நெறிகளுக்கும் ஏற்ப சிறந்த வாழ்க்கைத் துணைவியானார்.

தமது பிள்ளைச் செல்வங்களைக் கண்ணை இமை காப்பது போல பாதுகாத்து சிறந்த கல்வியறிவு மற்றும் நற்பழக்க வழக்கங்களை ஊட்டினார். அவர்களை எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித் தான் வாழ வேண்டும் என தான் வாழ்ந்து காட்டியதுடன் தமது பிள்ளைகளையும் இலட்சிய வாழ்வு வாழ வழிகாட்டினார். இவற்றின் அறுவடைகளில் ஒன்றான இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்டப் பிரதிநிதியாக இவர்களுடைய தவப்புதல்வன் செல்வன் கு.கபேஸ் அவர்களை எமது சமூகம் மட்டுமல்ல தமிழ் கூறும் நல்லுலகே பார்க்கிறது.

அத்துடன், எப்பொழுதுமே சமூகத்தின் விடிவை, அதன் உயர்விற்கான மார்க்கங்களை நினைத்துப் பார்க்கின்ற சமூக சிந்தனையாளன் அண்ணன் குணசிங்கம் அவர்கள். அவர்களை தாய்க்குப் பின் தாரம்

என்ற நிலையிலே மேலும் புடம்போட்ட தங்கமாக, ஜனரஞ்சகமான சேவையாளனாக, ஊக்கியாகவும், உந்துசக்தியாகவும் விளங்கியவர் அமரர் திருமதி.ஜமுனா குணசிங்கம் என்றால் அது மிகையாகாது.

நாங்கள் அண்ணன் குணசிங்கம் அவர்களைச் சந்திக்கப் போகின்ற பொழுதெல்லாம், செல்விருந்தோம்பி வரவிருந்து பார்த்தி ருந்து வரவேற்று முகமலர்ச்சியுடன் உபசரிப்பதே தனித்துவமானது. இவ்வாறாக குடும்பத்திற்கும் உறவினர்களுக்கும் சமூகத்திற்கும் கொடுத்ததெல்லாம் கொடுத்த கோமகனாக அமரர் திருமதி.ஜமுனா குணசிங்கம் அவர்களை சமூகம் பெருமையுடன் பார்க்கின்றது.

அமரர் அவர்கள் தமது அதீத உழைப்பினால் தம்மை மெழுகு வர்த்தியாக உருக்கி பிறரை ஒளியூட்டி வாழ வைத்து இளம் வயதி லேயே அமரத்துவம் அடைந்தார். அன்னாருடைய செயற்கருஞ் செயல் களை வள்ளுவரின் வைர வரிகளிலே **"மனைத்தக்க மாண்புடைய மங்கையர் திலகம்"** எனக் கூறிக்கொள்ளலாம். அவரை நன்கறிந்த நெஞ்சங்கள் இருக்கும் வரை அவருடைய நினைவிருக்கும்.

அவருடைய இறுதித் தினத்தன்று கொட்டும் மழையிலும், குளிர் காற்று வீசி வாட்டிய போதும் கூடிய பல ஆயிரக்கணக்கான மக்கள் மயானம் வரை வந்து காத்திருந்து கண்ணீர் சொரிந்து அஞ்சலி செலுத்தியமையானது அவருடைய சிறப்பையும் செல்வாக்கையும் சான்று பகருவதாக உள்ளது.

**கி.கமலேஸ்வரன்**
(B.A, M.pill.Q,English .Diploma)
**பதவிநிலை தொழில்நுட்ப அலுவலர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# இடதுசாரித் தோழருக்கு வலுவான ஒரு தோழி

இடதுசாரி இயக்கத்தின் மூத்த தோழர் குணநாயகத்தின் துணைவியார் திருமதி.ஜமுனா குணநாயகம் தனது 52வது வயதில் அமரராகியிருக்கின்றார். சுமார் 31 வருடகாலம் இடதுசாரித் தோழருக்கு உற்றதுணையாகயிருந்து பங்களிப்புச் செய்திருக்கின் றார். ஒரு அரசியல் போராளிக்கு அதுவும் இடதுசாரி அரசியல் போராளிக்குத் துணைவியாக இருப்பது என்பது இலகுவான காரியமல்ல. ஆனால் அமரர் ஜமுனா அதனைச் சிறப்பாகவே செய்து முடித்திருக்கின்றார். கணவரையும், பிள்ளைகளையும் எந்தக் குறையு மில்லாது கவனித்திருக்கின்றார். யாழ்ப்பாணச் சமூகப் பெண்ணுக்கே யுரிய இயல்பான உச்ச ஆளுமை அவரிடம் நிறையவே இருந்திருக் கின்றது.

**"யாழ்ப்பாணச் சமூகப் பெற்றோர் பிள்ளைகளை வெறும் உடலால் வளர்ப்பதில்லை. நெஞ்சினால் வளர்க்கின்றனர்"** என்பார் பேராசிரியர் சிவத்தம்பி. பிள்ளைகள் பிறந்த பின்னர் பிள்ளைகளை ஆளாக்குவதே பெற்றோரது ஒரே இலக்காக இருக்கும் என்ற காரணத்தினாலேயே அவர் அவ்வாறு கூறியிருந்திருக்கிறார். தங்கள் தேவைகளை ஒறுத்து பிள்ளைகளை ஆளாக்குவதிலேயே பெற்றோரின் கவனம் குவிந்திருக் கும். பனை மரம் வளர்ந்து பயன்தரும் வரை காத்திருப்பது போல பிள்ளைகள் ஆளாகும் வரை பொறுமையோடு பெற்றோர் காத்திருப் பர். திருமணத்தின் பின்னர் பிள்ளைகளே அவர்களது உலகமாகிவிடும்.

பிள்ளைகளை இவ்வாறு ஆளாக்குவதில் துணைவிமாரின் பாத்திரம் அதிஉயர்ந்தது. திருமணம் செய்வதற்கு முன்னர் பெரிய ஆளுமை இல்லாமல் இருந்த பெண்கள் எல்லாம் திருமணத்துக்குப் பின்னர் சிறந்த ஆளுமை படைத்தவர்களாகி விடுவர். யாழ்ப்பாணச் சமூக அமைப்பு அந்த ஆளுமையை இயல்பாகவே பெற்றுக் கொடுத்து விடுகின்றது. குடும்பத்திற்குத் தனித்து தலைமையேற்கும் ஆற்றலையும்

பெற்று விடுகின்றனர். இந்த ஆற்றல் யாழ் சமூக அமைப்பு மரபு ரீதியாக அவர்களிடம் கையளித்த மாபெரும் கொடையாகும்.

பேராசிரியர் சிவத்தம்பி நகைச்சுவையாக யாழ் சமூகத்தில் குடும்ப அதிகாரம் திருமணம் செய்து மூன்று நான்கு வருடங்களுக்குத் தான் கணவர்மாரிடம் இருக்கும். பின்னர் அது மனைவிமார்களின் கைகளுக்கு மாறிவிடும் என்பார்.

யாழ்ப்பாணச் சமூகம் கடின உழைப்பை வேண்டி நிற்கின்ற சமூகம். பிள்ளைகளை ஆளாக்குவது அவர்களது இலக்காக இருக்கின் றமையினால் அந்நிலை ஏற்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் நில அமைப்பும் கடின உழைப்பை வேண்டி நிற்கின்றது. கடுமையாக உழைத்தால்தான் நிலத்திலிருந்து பயன்கள் ஏதாவது கிடைக்கும். யாழ்ப்பாணத்தின் கடல் பொருளாதாரமும் அப்படிப்பட்டதுதான். அங்கும் கடின உழைப்புத் தேவையாக இருந்தது.

இக்கடின உழைப்பிற்கு கூட்டுச் செயற்பாடு மிக, மிக அவசியம். கணவன், மனைவி இருவரும் ஒருமித்து கூட்டாகச் செயற்பட்டால்தான் இவ்விரு பொருளாதாரங்களிலிருந்தும் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். விவசாயக் குடும்பங்களில் பெண்கள், வீட்டுப் பணிக ளோடு விவசாயத்திலும் கணவன்மாருக்கு உதவி புரிவர். சில குடும்பங் களில் கணவன்மார்களை விடவே சிறந்த விவசாயிகளாக மனைவி மார் இருந்திருக்கின்றனர்.

கடற்றொழிலும் கடலுணவை விற்பனை செய்வதிலும், அதனைப் பதப்படுத்துவதிலும் மனைவிமார்களின் பங்கு அதிகமாக இருக்கின் றது. இவ்விரண்டு பொருளாதாரங்களையும் தவிர்த்தால் அரச உத்தியோகமே இன்னோர் பொருளாதார மூலமாகும். இங்கும் மனைவிமார்களின் பாத்திரம் மிகவும் முக்கியமானதாகும். கணவன் மார் வெளிமாவட்டங்களில் பணி புரியும் போது மனைவிமார் சொந்த ஊர்களில் குடும்பத்தைத் தலைமையேற்று நடாத்துவர். கணவன் தனது

செலவு போக மீதியாக சிறிதளவு பணத்தினை ஊருக்கு அனுப்பி வைப்பார். அந்த சிறுதொகைப் பணத்தினை வைத்துக்கொண்டு, வீட்டு வளவிற்குள்ளும் வருமான மார்க்கங்களைத் தேடி மிகச் சிறப்பாகவே அவர்கள் குடும்பத்தினை நடாத்துவர். கணவன் அனுப்பும் பணத்தில் கணவனுக்குத் தெரியாமலே சீட்டுப் பிடித்து பணம் சேமிக்கும் கெட்டித்தனமும் நமது பெண்களுக்கு உண்டு.

யாழ்ப்பாணப் பெண்களுடைய இந்த ஆளுமை வளர்ச்சிதான் போர்க் காலத்திலும் சமாளிக்கக் கூடிய ஆற்றலை அவர்களுக்குக் கொடுத்தது. போரினால் உறவுகள் இழப்பு என்ற வகையிலும், பொருளாதாரச் சுமை என்ற வகையிலும் பல துன்பங்களுக்கு அவர்கள் முகங் கொடுத்தனர். பல குடும்பங்கள் தனித்த பெண் தலைமைக் குடும்பங்களாகவும் மாறியுள்ளன. இந்நிலை ஏற்பட்ட போதும், தனித்து நின்று அதற்கெல்லாம் முகம் கொடுத்தனர்.

யாழ்ப்பாணத்துச் சமூகம் பெற்றெடுத்த ஆளுமைப் பெண்களில் ஒருவர்தான் திருமதி.ஜமுனா குணநாயகம். அவரது கணவர் ஒரு இடதுசாரி அரசியல் போராளியாக இருந்தமையினால் அவருக்கு இரட்டிப்புச் சுமையே ஏற்பட்டது. இந்தச் சுமைகளையெல்லாம் முகஞ் சுழிக்காமல் பொறுமையோடு அவர் பொறுப்பேற்றார்.

அரசியல் போராளிகளை கணவர்மார்களாகக் கொண்ட மனைவிமார்கள் ஒரே நேரத்தில் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டும்.

அதில் ஒன்று அவர்களின் வருமானம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதாகும். கணவன்மாரின் நேரங்களை அரசியல் வாழ்வு பறித்தெடுப்பதால் குடும்பத்திற்கான உழைப்பில் அவர்களால் பெரியள

வில் ஈடுபட முடியாது. இதைவிட அரசியல் வாழ்வு அவர்களுக்குச் சில பிரத்தியேக செலவுகளையும் உருவாக்கும். அந்தச் செலவுகள் போக மீதியைத்தான் அவர்கள் மனைவிமாரிடம் ஒப்படைப்பர். மனைவிமார் அந்தச் சிறிய வருமானத்தில் குடும்பத்தை நடாத்த வேண்டும்.

இரண்டாவது அரசியல் போராளிகளுக்கு அவர்களைத் தேடி வருபவர்கள் அதிகமாக இருப்பர். அரசியல் தோழர்கள், ஊடக வியலாளர்கள், பொதுமக்கள் என அந்தத் தொகை எண்ணிக்கையில் அடங்காது. அவர்களையெல்லாம் முகங்கோணாமல் உபசரிக்க வேண்டும். இந்த உபசரிப்பு இல்லாவிட்டால் அரசியல் போராளிகளின் அரசியல் வாழ்வு பாதிப்படையும். அவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகுவர். தாங்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகினாலும், கணவர் மார் மன அழுத்தத்திற்கு உள்ளாகுவதை நமது பெண்கள் பெரிதளவி ற்கு விரும்புவதில்லை.

மூன்றாவது தனித்து குடும்பப்பாரத்தை சுமக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகும். வீட்டு வேலைகளுடன் பிள்ளைகள் கல்வியென எல்லாப் பொறுப்புகளுமே மனைவிமாரின் தலையில் விழுந்து விடுகிறது. கணவர்மாருக்கு இவற்றையெல்லாம் பார்ப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை.

நான்காவது சமூக அழுத்தத்திற்கு மனைவிமார் அதிகளவில் உள்ளாகுவதாகும். சாதாரண மக்கள் வாழுகின்ற மரபுரீதியான வாழ்க்கை முறையினை அரசியல் வாழ்க்கை வாழும் குடும்பங்களி னால் மேற்கொள்ள முடியாது. மரபுரீதியான வாழ்க்கை முறையில் சொத்தினைத் தேடுவது முக்கிய குறிக்கோளாக இருக்கும். ஆனால் அரசியல் வாழ்க்கையில் அதுவும் புரட்சிகரமான அரசியல் வாழ்க்கை யில் சொத்தினைத் தேடுவது என்பது குறிக்கோளாக இருக்க முடியாது.

அங்கு பரந்துபட்ட மக்களின் விடுதலையே குறிக்கோளாக இருக்கும். தனது குடும்பம் என்ற சிந்தனையை விட சமூகம் பற்றிய சிந்தனையே அதிகமாக இருக்கும். இதனால் மரபுரீதியற்ற ஒரு வாழ்க்கை முறையை தேர்ந்தெடுத்து வாழ அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுவர்.

ஆனால் மரபுரீதியான சமூகத்துக்குள்ளேயே அவர்கள் வாழ வேண்டிய நிலை இருப்பதனால் சமூகத்தின் அழுத்தம் அவர்களுக்குத் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கும். கணவன்மார் அரசியல் வாழ்வு வாழ்வதனால் அவர்களுக்கென தனித்த உறவுகள் இருக்கும். அவர்கள் எப்படியாவது இந்த அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பர். ஆனால் மனைவிமாருக்குத்தான் முகங்கொடுப்பது கடினமாக இருக்கும்.

ஐந்தாவது இதுதான் மிகப்பெரிய நெருக்கடி. அதாவது உயிர் ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவதாகும். மக்களின் விடுதலைக்காக செயற்படும் அரசியல் போராளிகளுக்கு உயிராபத்துக் கள் தினந்தோறும் துரத்திக் கொண்டிருக்கும். பாதுகாப்பாக ஒருநாள் கழிவது கூட கடினமாக இருக்கும். படையினரின் கெடுபிடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். இந்தப் பாதுகாப்புப் பிரச்சினை ஒரு கட்டத்தில் கணவன்மார்களுக்கு மட்டுமல்ல முழுக்குடும்பத்திற் குமே ஏற்படும். இந்த நெருக்கடிகளின் சுமைகளையும் மனைவிமார் களே அதிகம் சுமக்க வேண்டிவரும்.

அமரர் ஜமுனா குணநாயகம் இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் முகங்கொடுத்து வாழ்ந்திருக்கிறார். இதனால் அரசியல் போராளி களினால் மட்டுமல்ல, அனைவரினாலும் மதிக்கப்படுகின்ற உத்திமி யாக எழுச்சி கண்டிருக்கிறார்.

கடவுள் இருக்கின்றாரோ, இல்லையோ அரசியல் போராளி களைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர்களது மனைவிமார்தான் கடவுள்.

அன்னை ஜமுனாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாயின் அரசியல் போராளிகளின் குடும்பங்களில் பெண்களின் சுமைகளைக் குறைக்க நாம் ஏதாவது செய்தாக வேண்டும். கூட்டுவாழ்க்கைதான் இதற்கு ஒரே வழியாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். அரசியல் போராளிகள் இப்போதே கூட்டாக வாழ்வதற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்வது நல்லது.

தோழர் குணநாயகத்துடன் இணைந்து நானும் சில போராட்டங் களில் பங்கு பற்றியிருக்கின்றேன். குப்பிளானில் இடம்பெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டத்திலும், குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களை இணைப்பதி லும், தோழர் குணநாயகத்தின் பங்கு அளப்பரியது. துணைவியாரின் இழப்பு அவரைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய இழப்புத்தான். தந்தையாக மட்டுமல்ல, தாயாகவும் பிள்ளைகள் தொடர்பாக செயற்பட வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு மத்தியிலும், அவருடைய மக்கள் சேவை தொடர்ந்தும் வளர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். அவரும் நானும் இருக்கின்ற அரசியல் தளம் வேறாக இருந்தாலும், எமது நட்பை அது என்றும் பாதிக்கவில்லை.

***அன்னை ஜமுனாவின் ஆத்மா சாந்தியடைவதாக!***

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**சி.அ. யோதிலிங்கம்**
**அரசியல் ஆய்வாளர்**
Attorney - at - Low & Notary Public
Kuppilan.

# கருணையின் வடிவம் ஜமுனா

இவ்வுலகில் அவதரித்த உயிரினங்கள் யாவற்றுக்கும் மரணம் நிச்சயம். பிறப்புண்டேல் இறப்புண்டு. இதற்கு எவரும் விதிவிலக்கல்ல. இது என்றோ எழுதப்பட்டு விட்டது. இது இயற்கையின் நியதி. ஆனால் இந்த மனிதப்பிறவியின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு வாழ்பவர்கள் சிலரே ஆகும். "நீ வாழ்ந்தாலும் மறைந்தாலும் இந்த உலகம் பெயர் சொல்ல வேண்டும். இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற கவிஞனின் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர்தான் அமரர் திருமதி.ஜமுனா குணநாயகம் ஆவார்.

தானுண்டு தன் குடும்பமுண்டு என்று குறுகிய வட்டத்தில் வாழ்பவர்கள் மத்தியிலே, இந்த வட்டத்திற்கு வெளியில் வந்து தனது சமூகத்திற்கு சேவை செய்வதற்காக தன் ஒளி பரப்பி அந்த ஒளியிலே தனது கணவரைச் சரியான பாதையில் இட்டுச்சென்று, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க செயலாளராக சுமார் ஏழு வருடங்களுக்கு மேல் சேவையாற்ற உதவியதுடன் தனது பிறந்த ஊருக்கான சமூக சேவைகளிலும் ஈடுபட வைத்தவர் என்பது டன், தன் கணவரின் தொழில் முயற்சி மேம்பாட்டிற்கு அயராத ஒத்துழைத்து குடும்பத்தையும் கட்டிக்காத்து பிள்ளைகளை ஊர் உலகம் போற்ற, நல்ல முறையிலே வளர்த்தெடுத்த அன்னையுமாவார். இவரு டைய வழிகாட்டலில் செயற்பட்ட கணவரினால் பயன் பெற்றோர் பலர். அவரைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்திய உள்ளங்கள் பல. இன்று ஜமுனா அவர்கள் தனது பிறவிப் பயனை அடைந்ததன் பெறுபேறாக, இறைவனடி சேர்ந்துள்ளார். அவருடைய பூதவுடல், இன்று எம்மை விட்டு மறைந்தாலும் புகழுடல் என்றென்றும் எல்லோர் மனதிலும் நிலை கொண்டேயிருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத் திற்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, இறைவனை பிரார்த்தித்து, கோண்டாவில் தில்லையம்பதி அம்பாளையும் இறைஞ்சி நிற்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சி.கிருஷ்ணானந்தன்
ஓய்வுநிலை ஆசிரியர்

# MESSAGE OF CONDOLENCE FROM THE LANKA SAMA SAMAJA PARTY

On behalf of the Lanka Sama Samaja Party (LSSP) I extend our deepest sympathies to Senior Kunanayagam and other members of the family of late Yamuna Kunanayagam who died on 11th December 2013 at the age of 52 years.

Her husband Senior Kunanayagam became an active political worker in the Communist Party led by Mr.Shanmugadasan from 1966 and later became his Private Secretary. In This capacity he worked hard for the poor and downtrodden people of the North. He has always been associated with the Left movement in this country and now with the LSSP.

Mrs.Yamuna Kunanayagam actively supported her husband in all these activities. She was particularly supportive in various social service activities and always greeted the poor people with a smile. During the troubled period when racist politics engulfed the country, she gave full support to her husband to fight against the racial division of our country. Both husband and wife always upheld the need for nation unity of all communities as one Sri Lankan nation. They also opposed caste oppression.

Despite her illness she supported her husband when he actively supported Mr.Tamil Alagan, the candidate of our party in

the Northern Provincial Council Election. Throughout her married life she had been ready to sacrifice her time and money to help in the struggle for the liberation of the oppressed people of Jaffna and the Northern Province. The LSSP and all the Left mourne the loss of Yamuna Kunanayagam at this relatively young age. If not for her illness she would have been able to do much more for the struggle of the oppressed people of the North. We hope that other women in the North will follow her example to fight against all forms of oppression based on race, caste or sex.

*Prof.Tissa Vitarana*
*General Secretary of the*
*Lanka Sama Samaja Party & the*
*Senior Minister for Scientific Affairs.*

*02nd January 2014 .*



# ஆற்றொணாத் துயருள் ஆழ்ந்துவிட்டோம்...

திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்களின் திடீர் மறைவு அவருடைய துணைவன் திரு.குணநாயகத்துக்கும் (குணசிங்கம்) பிள்ளைகளுக்கும் அவர்களது குடும்ப உறவுகளுக்கு மட்டுமன்றி அவர் களுடன் தொடர்புகளைப் பேணிவரும் பரந்துபட்ட மக்கட் கூட்டத்திற் கும் குறிப்பாக அவர் நேசிக்கின்ற சமூகத்துக்குமே ஒட்டு மொத்தமான சோகமாகும். இப்பேற்பட்ட சோகத்துக்கு அமரர் அவர்கள் அந்தக் குடும்பத் தலைவியாக இருந்து கணவனின் செயற்பாடுகளுக்கெல்லாம் நல்லதோர் துணைவியாகவும், பிள்ளைகளின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமான ஓர் அன்னையாகவும், உற்றார், உறவினர்கள் மத்தியில் ஒரு பரோபகாரியாகவும், கணவனின் தோழர்கள் மற்றும் தொடர் பாளர்களுக்கெல்லாம் அனுசரணைகள் வழங்கும் உன்னதமான குடும்பப் பெண்ணாகவும் விளங்கியமையால் எதிர்பாராத அவரு டைய மரணம் எல்லோரையும் அதிர்வுக்குள்ளாக்கியது. இப்பேற்பட்ட ஒரு நல்ல பெண்மணியின் திடீர் இழப்பு சராசரியான மனித மறைவுக் குரிய துன்பத்தைவிட, காத்திரமான மானுட சமூகத்திற்குரிய கையறு நிலையான சோகத்துக்கும் வெற்றிடத்துக்கும் உரியதென்றால் அதில் பொய்யில்லை.

வாழ்க்கை என்பது எமது மத்தியில் ஓர் ஆணும் பெண்ணும் இணைவதும், அந்த இணைவின்பால் ஒரு குடும்பமாகப் பர்ணமித்து காலவோட்டத்தில் பிள்ளைகளைப் பெற்றெடுத்து இல்லற வாழ்வைக் கட்டியெழுப்பி வாழ்வதே வாழ்வாகும். அந்த வகையில் திரு.சீ.குணநாயகம் அவர்களின் வாழ்விலும் இணைந்து கொண்ட ஜமுனா அவர்களும் தமது குடும்ப ரீதியான செயற்பாடுகளுக்குத் தன்னை அர்ப்பணித்து கணவனுடைய பொதுச் சேவைகளுக்கெல்லாம் எந்தவித பிணக்குமில்லாமல் ஒத்தாசையாக இருந்து வந்துள்ளார்

என்பதற்கு அன்னாருடைய இளமைக்கால மரணமே சான்று பகரு கின்றது. தாய்மை என்ற சொல்லுக்கமைவாக தனது சொந்தச் சுகம் பேணாமல் இரவு, பகல் பாராமல் பிள்ளைகள் நலம் பேணி வாழ்பவள் தான் அன்னையாவாள். அவ்வாறான அன்னையின் ஸ்தானத்தில் தமது பிள்ளைகளை வளர்த்தெடுத்ததுடன், அவர்களைச் சமூகத்துக்கு உகந்தவர்களாகவும் உருவாக்கியதுடன் கணவனை இந்தச் சமூகத்தின் முழுநேரத் தொண்டனாக்கியவள் இவளன்றோ. அதனாலேதான் திரு.குணநாயகம் அவர்களின் சமூக சேவைகள் முழு நேரமாக மக்கள் மத்தியில் வேரூன்றி நிலைத்து நிற்கின்றது.

குணநாயகம் அவர்களை பெரும்பாலான மக்கள் மத்தியில் குணசிங்கம் என்ற பெயரில்தான் நன்கு அறியப்பட்டவர் என்பதுதான் எனது கணிப்பாகும். உலக வரலாற்றில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகங்கள், வர்க்க வேறுபாட்டால் சீரழிந்த தேசங்கள், ஆண்டான் அடிமை என்ற நிலையில் உழலும் அடிமட்டச் சமூகங்கள், நிற பேதங்கள் தலை விரித்தாடும் மேலாதிக்க வாதிகள் என விரிந்து கொண்டே போகும். அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிய சிந்தனைவாதிகள், தலைவர்கள் வரிசையில் பின்பற்றப்பட்ட மாக்ஸிய (கார்ல்மாக்ஸ்) சிந்தனையில் வயப்பட்டவர்களில் திருவாளர் குணசிங்கமும் ஒருவர். எமது மத்தியிலும் எமது சமூக விடுதலைக்காக கருக்கொண்ட பல்வேறு வெகுசனத் தாபனங்களில் அங்கம் வகித்து மேலாதிக்க வாதிகளால் உரிமை மறுக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக இரவு பகலெனப் பாராது தோழர்களுடன் நின்று போராடிய ஒருவர். அவருடைய தோழமையில் பொய்மை யில்லை, புறக்கணிப்புக்கள் இராது. கிராமங்களில் ஏற்படும் பிரச்சனை களில் எல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்று சமரசம் செய்யும் பொதுவுடமை வாதியுமாவார். இப்படியான நிலைகள் ஏற்படும் காலத்தில் வீட்டுப் பக்கமே தலைகாட்ட மாட்டார். இப்படியான

நிலையில் ஒரு குடும்பத் தலைவியான அமரர் ஜமுனா குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் தன் தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டு கணவர் கொள்கை வழியில் நின்று அனுசரணை வழங்கி, வீடு தேடி வருகின்ற தோழர்கள், நண்பர்கள் எனப் பல தரப்பினருடனும் அவர் களை இன்முகங்காட்டி வரவேற்று உபசரிக்கும் பாங்குடையவர். அமரர் அவர்களுடைய இறுதிக் கிரியையின் போது கொட்டும் மழையிலும் குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் திரண்டுவந்த மக்கட் கூட்டம் சான்று பகரும். இவ்வாறான பொறுப்புக்கள் வாய்ந்த குடும்பத் தலைவி ஜமுனா அவர்களின் பிரிவுத்துயர் அன்னாரது குடும்ப மட்டத்தில், உற்றார், உறவினர் மட்டத்தில் மட்டுமன்றி அவர்களை நன்று அறிந்து கொண்ட அனைவரையுமே ஆற்றவொண்ணாத் துயரில் ஆழ்த்திச் சென்றார் என்பது மிகையாகாது.

"ராஜ்பவன்"
அல்வாய்

செ.சதானந்தன் (J.P)
(ஓய்வுநிலை அதிபர்)



# திண்ணிய நெஞ்சுடன் தீர்க்க சுமங்கலியானவர்

அமரர் ஜமுனா குணநாயகம் அவர்கள் இந்த மண்ணின் சொத்தாக 52 வருடங்கள் நிறைவான வாழ்வை வாழ்ந்து கழித்தவர். பாசமிகு குடும்பத்தின் தலைவியாக நல்ல மகளாக, நல்ல மருமகளாக, நல்ல மனைவியாக, நல்ல தாயாக தனது வாழ்வியல் நகர்வில் ஏற்ற பொறுப்புதனை செம்மையாகச் செய்துவரும் காலமதில் மேலும் செய்ய வேண்டிய பொறுப்புதனை நினைத்தவாறே குடும்பத்திலிருந்து நீங்கி விட்டார். குடும்பத்தில் நல்ல தாம்பத்தியத்தின் எச்சங்களான பிள்ளைகள் மூலமான கல்விப் பெறுமானங்களை அறிந்து மகிழ்ந்தி ருந்தும் அவர்களின் எதிர்கால வாழ்வின் சிறப்பான நகர்வுதனைக் காணாது ஏக்கம் கலந்த நினைப்புடன் தனது வாழ்வியலை முடித்துக் கொண்டார்.

அன்னாரது கணவரான குணநாயகம் அவர்கள் முற்போக்குச் சிந்தனையாளராக, பொதுவுடமைவாதியாக நின்று தான் சார்ந்த சமூகத்தையும், அம்மக்களையும் நேசித்தவர். ஆரம்பத்தில் இடதுசாரிப் போக்குடையவராகி கம்யூனிஸ்ட் இயக்கத்தை நேசித்தவர். அதன்பால் தான் சார்ந்த சமூகத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்தவர். அதுசார்ந்த சமூகவிடுதலைப் போராட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டு பல சோதனைகளையும், வேதனைகளையும் சுகமாக்கிக் கொண்டு பல சாதனைகளைப் படைத்தவர். இவரது தீரமிகு பல்துறைச் செயற்பாடுகளுக்கும் திடமான சிந்தனையுடன் இணைந்து முகங் கொடுத்து செயலாற்றியவர் அமரர் ஜமுனா என்றால் அது மிகையல்ல. இத்தகைய நல்லாளின் பிரிவு என்பது குடும்பத்தில் பாரிய இழப்பாகும். இதை எவருமே இலகுவில் ஜீரணித்துக் கொள்ள முடியாது. அமரர்

ஜமுனா அவர்கள் கணவரோடு சேர்ந்து எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு அதை வெற்றியாக நகர்த்திய பெருமைக்குரியவர்.

அன்னாருக்கு இத்தகைய மனோதைரியத்தையும், பற்றுறுதியையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது அவர்களின் தீர்க்கமான இணைந்த வாழ்வே என்று கூறிக்கொள்வது சாலப் பொருத்தமாகும். இத்தகைய குடும்பத் தலைவியான அமரர் ஜமுனா குணநாயகம் அவர்கள் தீர்க்க சுமங்கலியாக இந்த மண்ணுலகை வாழ்வை முடித்துக் கொண்டது இயற்கையின் நியதியே என ஆறுதல் அடைவோமாக.

"பிறப்பு என்பது இயற்கையின் நியதியானால்
இறப்பு என்பதும் இயற்கையின் நியதியே"

"பொதிகை"
அல்வாய் வடமத்தி,
அல்வாய்.

கி.கணேசன் (J.P)
(ஓய்வுநிலை அதிபர்)

## மறுபிறப்பெடுத்து வா மதியே!

குணநாயகத்தின் குணவதி!
ஜமுனாவின் ஞாலம் முடிந்தது!
31ம் நாளும் முற்றிற்று!
கத்திக்குளறி சக்தி இழந்த உறவுகள்!
தாயைத் தேடித் தவிக்கின்ற முத்துக்கள்!
தாரம் இழந்து துடிக்கின்ற கணவன்!
ஊரெலாம் பேரெடுத்த சமூக சேவையாளன்!
உன் திடீர் மரணத்தால் இழந்து போனான்
அவன் சேவைகட்கு; முன்நின்ற உத்தமியே!
பெருவிதையாய் பெற்றெடுத்த முத்துக்களுக்கு
உன் பிரிவு பெருநெரிவாய் போச்சு!
பேரப்பிள்ளையைக் காணவென்று
கற்பனைகள் பல எண்ணியிருந்தாய்
நேசக் கரம் நீட்டி நித்திலமே!
எல்லோரையும் வரவேற்பாய்!
ஆசைகாட்டி அன்போடு அரவணைப்பாய் இன்று
தேசம் மறந்து! வீசும் காற்றில் கலந்து!
அந்தியேட்டி கிரிகைக்கு ஆளானாய்!
52 வயதில் ஆவியாவாய் என்று
கொஞ்சமும் நாம் எண்ணவில்லை! உன்
பூமுகத்துப் புன்சிரிப்பும் அன்பான வேண்டுதலும்
ஆழமாய் எம் நெஞ்சை தொட்டு நிக்குது
வேண்டு மென்றோ காலன் தொட்டுவிட்டான்
ஆண்டுதான் பல கடந்தாலும்
அடி மனதில் குடிபுகுந்த உன்னை ஒரு

நொடியும் மறவோம்.

காணத் துடிக்கிறோம் கண்மணியே!

மறுப்பிறப்பெடுத்து ஜமுனா நதியே வந்திடு!

***அண்ணாரின் அந்தியேட்டி ஆத்மா சாந்திக் கிரியையில் என் நெஞ்சார்ந்த அஞ்சலியைத் தந்தேன்.***

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

மயில்வாகனம் (J.P)
தலைவர், கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபை
தலைவர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
வலிகிழக்கு பிரிவு
தலைவர், கோப்பாய் பிரதேச முதியோர் பேரவை.



# அம்மா ஜமுனா ஜெகசோதி ஆகிவிட்டாய்

பக்தியுடன் கணவனுக்கு பணி செய்தாய்
பக்குவமாய் பிள்ளைகளை வளர்த்து வந்தாய்
ஐக்கியமாய் அனைவரையும் அணைத்து நின்றாய் – விதிஉனை
தாக்கியபோது நாம் எல்லோம் கதிகலங்கி நின்றோம்.

இலட்சியக் கணவனுக்கு இனிதாக வாழ்ந்தவளே
இடர் பல வந்தபோது இணைந்து நின்றவளே
அலட்சியம் செய்யாது அறவழியில் சென்றவளே
ஆறாத துயரில் எமை மூழ்கவிட்டு எங்கு சென்றாய் – உன்முக
மலர்ச்சி கண்டு உனை மணத்தான் குணத்தில் நாயகன் – இன்று
இலட்சுமியை இழந்ததினால் இழைத்துப்போய் நிற்கின்றான்.

சமூக விடுதலைக்காய் சலிக்காது உழைத்து நின்றான் – பிற
சமூகம் அவனை வெறுத்த போதும் துணிந்து நின்றான்
சத்திய வேள்வியில் சரித்திரம் படைத்து நின்றான் – அன்று
பத்தினியை இழந்தபோது பலர்கூடி கதறக் கண்டான்.

சோதனை வந்தபோதும் சோகம்பல சேர்ந்த போதும்
கணவனுக்கு சொத்தாக நீ இருந்தாய்
வேதனை பல வந்தபோதும் வெந்து துடித்த போதும்
கணவனுக்கு வெற்றிக்கு வித்திட்டாய்.

போதனை பல சொல்லி கணவனுக்கு
பொக்கிஷமாய் நீ இருந்தாய்
சாதனை படைக்கும் காலம் வரும்போது – நீ
இறைவன் அடி சேர்ந்து விட்டாய்.

உன்னை நினைத்து இன்று ஊரும் உறங்கவில்லை
உன்னை நினைத்து இன்று உறவுகளும் உறங்கவில்லை
உன்னை பிரிந்து வாடும் உறவுகளுடன் சேர்ந்து – நாமும்
உன் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**வீரபத்திரர் வீதி,**
**கோண்டாவில்.**

**வயிரமுத்து சந்திரசேகரம் (J.P)**
**ஓய்வுபெற்ற நிர்வாக கிராம அலுவலர்**

# தீரனின் தீஞ்சுடர்

"புத்திசாலியான மனைவி, தன் கணவனது வாழ்க்கைமுறையும் பழக்கவழக்கங்களுமே தான் பின்பற்றுவதற்கானவை என்றும், அது தான் அவளது வாழ்வு விதிக்கும் சட்டமென்றும், உணர்ந்து கொள்ளு வாள். ஏனெனில் தன் கணவனுடைய வாழ்க்கைமுறையைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டால் குடும்பப் பொறுப்புக்களை நிர்வகிப்பது அவளுக்கு எளிதாக இருக்கும். இல்லாவிடில் இருக்காது".

*-அரிஸ்ரோட்டில்*

கிரேக்கத் தத்துவஞானியின் இக்கூற்றுக்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டியவர் திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்கள்.

அஞ்சாத நெஞ்சுரம் கொண்ட சமூக விடுதலைப் போராளியாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் மிடுக்குடன் களமாடியவர் தளபதி சீனியர் குணநாயகம் அவர்கள்.

1977ஆம் ஆண்டிலிருந்தே திரு.சீனியர் குணநாயகம் அவர் களை நான் அறிவேன். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவராக எனது தந்தை திரு.க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் செயற் பட்ட காலங்களில் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருகைதரும் திரு.சீனியர் குணநாயகம் அவர்கள் நீண்டநேரம் கலந்துரையாடிச் செல்வார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முக்கியமான சில பொதுக்கூட்டங்கள் எங்கள் வீட்டில் நடைபெற்றுள்ளன. இக்கூட்டங் களில் கே.டானியல், கே.தங்கவடிவேல், M.A.C.இக்பால் ஆகியோர் களுடன் சீனியர் குணநாயகம் அவர்களும் கூடவே வந்து கலந்து கொள்வார். 1982இல் சாதி வெறியர்களுக்கெதிரான தாக்குதலில்

ஈடுபட்டுத் தலைமறைவாக இருந்த காலகட்டங்களில் சீனியர் குணநாயகம் அவர்கள் எங்கள் வீட்டிலும் சிலபொழுதுகள் தங்கி யுள்ளார்.

சீனியர் குணநாயகத்தை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முக்கியமான தளபதிகளில் ஒருவர் என்று என் தந்தை கூறுவார்.

இத்தகைய போராளியின் மனைவி, எதிர்வந்து சூழ்கின்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளத்தக்க ஆற்றல் நிரம்பியவராக இருக்க வேண்டும். பொறுமை, சகிப்புத்தன்மை, சூழ்நிலைகளைப் புரிந்து செயற்படும் ஆற்றல் என்பவற்றைப் பெற்றிருக்க வேண்டும். எல்லா வற்றுக்கும் மேலாக நேர்எண்ணங்களும், தியாக சிந்தையும் உடைய வராதல் வேண்டும். திருமதி.ஜமுனா குணநாயகத்திடம் பிரக்ஞை பூர்வமாக இவ்வியல்புகள் குடிகொண்டிருந்தன.

இதனாற்றான் திருமணத்தின் பின்பு இன்றளவும் சமூக விடுதலைக்கான அவாவும், துணிவும் திரு.சீனியர் குணநாயகத்திடம் கூர்மையோடிருக்கின்றன.

**"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்றே**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

என்ற குறளுக்கேற்ப வாழ்ந்து சிறப்பெய்தியவர் திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்கள். அன்னாரின் சீரிய செயற்பாடுகள் எஞ்ஞான்றும் எல்லோர் உள்ளங்களிலும் அழியாத நினைவுகளாக நிலைத்திருக்கும்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**கி.நவநீதன் (ஆசிரியர்)**
**தொண்டைமானாறு**

# யாழ் ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி மாணவர்கள் இதயத்திலிருந்து....

பிறப்பும் இறப்பும் இயற்கை நியதி
இரண்டுக்கும் நடுவே அமைந்ததுதான் வாழ்வு
மரணம் இயற்கைதான் என்றாலும் மரணத்திற்கு
பின்னும் சிலர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்
இந்த வகையிலே அமரர் ஜமுனா குணநாயகம்
வாழ்ந்த வாழ்க்கை ஒரு வரலாறு. உத்தம மனைவியாக
உன்னத தாயாக உயர்ந்த உள்ளம் கொண்டவராக
வாழ்ந்த வாழ்க்கை ஒரு வரலாறுதான்.

நல்லவர்கள் பலகாலம் நாட்டினிலே வாழ்வதில்லை
வல்லவர்கள் வாழ்வுதொடர் வையமதில் கண்டதில்லை
என்ற வாக்குக்கு இணங்க தனது வாழ்வை முடித்துக்
கொண்ட அமரர் ஜமுனா அம்மா அவர்கள்
இறைவனுக்குக் கீழ் நித்திய இளைப்பாறுதலும்
நிலையான பேரின்பமும் நிரந்தரமான
சாந்தியும் பெறுவாராக.

*அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது அன்பான கணவர், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது அனுதாபங்களை சமர்ப்பிக்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாணவர் சமூகம்
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம்.

# தெய்வத்துள் வைக்கப்படுவாள்

திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்கள் அடிசிற்கினியவளாய் அன்புடைய மாதாவாக படிசொல் மீறா மனையாளாய் பின் தூங்கி முன்னெழும்பும் பெண்ணின் பண்பினளாய் அம்மா என்கின்ற தெய்வத் திற்கொப்பனவளாய் தெய்வமே என்னும் உறவினர்க்குரியவளாய் இன்ப துன்பங்களில் கணவனுக்கு அர்த்தநாரீஸ்வரியாய், அழகில் ஓவியமாய், பொறுமையின் இருப்பிடமாய் என்றும் பூரித்து நிற்கும் பெண்ணாக என்றும் அவரைக் கண்டேன்.

திரு.குணநாயகம் அவர்கள் சாதியால் ஒடுக்கப்படும் என் போன்ற நம்மவர்க்காய் கண் தூங்காது, செலவு நோக்காது, குடும்பம் நோக்காது உரிய களத்தில் நின்று பணியாற்ற தன் வலக்கரத்தை ஈய்ந்த வீரப் பெண்ணாய் தன்னை அர்ப்பணித்தமையை நோக்கினேன்.

தான் பெற்ற மூன்று பெண் பிள்ளைகளையும் கல்வி, ஒழுக்கம், பொறுமை போன்ற அணிகலன்களால் அலங்கரித்துப் பார்த்த பெருமைக்குரியவர்.

நோயுற்ற நிலையில்கூட தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தான் செய்யும் கடமையிலிருந்து சற்றும் ஒதுங்காது தன்னை அர்ப்பணித்தவர்.

தான் செய்யும் கடமையை சீராகச் செய்த ஜமுனா தெய்வத்துள் வைக்கப்படுவாள்.

**"அவனே படைத்தான் அவனே தந்தான் அவனே எடுத்தான்"**

எப்படி ஆறுதல் கூறினும் ஜமுனாவின் பிரிவு தாங்க முடியாதது அவர் குடும்பத்தினருக்கு இருப்பினும் தெய்வத்திற்குள் வைக்கப்படும் ஜமுனாவிற்கு தேவசாம்ராஜ்ஜியத்தில் நிம்மதி கிடைக்க இறப்பின் கவலையை ஒதுக்கி அவரின் பேரின்ப வாழ்க்கைக்காகப் பிரார்த்திப் போமாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**
SLEAS II

**மலர் சின்னையா** (J.P)
**ஓய்வுநிலை அதிபர்**

## சந்திரசேகரம் அவர்களின் உள்ளத்திலிருந்து...

அமரர் குணநாயகம் ஜமுனா அவர்களின் மரணச்செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தோம். அன்பு, அறிவு, அடக்கம் ஆகிய மூன்று தகுதிகளும் மனிதனிடத்து அமைந்துள்ள தெய்வீக இயல்புகள் ஆகும். பேரன்பு படைத்தவர் பெருவாழ்விற்கு தகுதியுடைவராகின்றார். அந்த அன்பு, மன உறுதியையும், செயல்வன்மையையும் உண்டுபண்ண வல்லதாகின்றது. வாழ்வுக்கு இனிமை தருவது அன்பு. அந்த வகையில் அமரர் ஜமுனா அவர்கள் தன் மனம் போல நல்வாழ்க்கைத் துணையை அமைத்து தன் கணவனின் பொதுநல சேவைகளிற்கு தானும் உந்து சக்தியாக செயற்பட்டுள்ளார். இதனைவிட தன் பிள்ளைகளையும் அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து சமுதாயத்தில் நற்பிரஜை களாக உருவாக்கியுள்ளார்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்"

இருப்பினும் அன்னார் எம்மைவிட்டுப் பிரிந்தது எமக்கும் அவரது குடும்பத்திற்கும் ஓர் பேரிழப்பாகும்.

திரு. கு. சந்திரசேகரம்
திரு. A. பன்னீர்ச்செல்வம்
பொது சேவையாளர்கள்
கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.

# உத்தமிக்கு ஓர் உதாரணம்

கோண்டாவில் வடக்கில் கோயில்கள் பலவுண்டு
ஆண்டாள் வாஹீஸ்வரிக்கும் அங்கே கோயிலுண்டு
அவள் அருளால் அடியார்கள் பலர் அன்பைப் பெற்றுள்ளனர்
அவர்களுள் ஒருத்திதான் அன்னை ஜமுனா.

அழகு அவளுக்கு இயற்கை கொடுத்த வரம்
எளிமை அவளுக்கு அவள் இதயம் அளித்த வரம்
பழகுவதற்குரிய பண்பு அவள் பெற்றோர் இட்ட வரம்
பாரினை தெரிந்ததற்கு கிடைத்ததோ அவள் கணவர் குணம்.

குணத்தின் இயல்புகள் கொஞ்ச நஞ்சமல்ல
நண்பர்களுக்கு தன் உயிரையும் கொடுக்கும் நல்லவர்
வீணர்களுக்கு விடையளிப்பதில் வல்லவர்
கோணாத மனம் படைத்த கொடைவள்ளல் .

குணநாயகம் என்ற பெயர் கொண்ட குணசிங்கம்
பணம் வரும், போம், ஒன்றும் குணம் மாறாத தங்கம்
துணை நிற்க பலபேர் நின்றாலும் துயர் துடைக்க
பணி செய்யும் தனியாள் இவர் ஒருவர்.

ஏழை எளிய மக்கள் இன்னல் அடைந்த போதெல்லாம்
வாழ வழி தெரியாத மக்கள் ஒடுக்கப்பட்ட போதெல்லாம்
கோழைகளாக இருக்கக் கூடாது என்று களம் கண்ட
வேளைகள் பலப்பல என்னென்று சொன்னால்

ஆயிரத்து தொள்ளாயிருத்து எழுபத்தேழில்
பயிர் செய்யும் தோட்டத் தொழில் கூலிகள்
உயிர் கொடுத்து வேலை செய்யும் தொழிலாளிகள்
பயிர் விளைவிக்கும் பாட்டாளி பெருமக்கள்

கைதடியில் கூலிப் போராட்டம் நடத்திய போது
பலன் எதிர்பாராது போராட்டத்துக்கு வலுச் சேர்த்த போராளி
அதே கிராமத்தில் அண்மையிலே ஆலயத்தில்
மனித உரிமை மறுக்கப்பட்ட தகவல் கேட்டு
மனித உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காக
முன்னின்று பாடுபட்ட முற்போக்கான மனிதாபிமானி
இனியும் இவை பற்றி சொல்வதென்றால்
தனியாக ஒரு புத்தகம் தான் எழுத வேண்டும்.

இவரின் பண்புகளும், இவர் சேர்த்த நட்புகளும்
இவர் மகளின் திருமணத்தில் தெரிய வந்தது எல்லோருக்கும்
இவரின் மனைவியும் இதனைப் புரிந்து கொண்டார்
இவர் செய்யும் சேவைகளின் மகத்துவம்
இவரின் மனைவியை மேலும் பக்குவமடையச் செய்தது.

உத்தமிக்கு இன்னுமொரு உத்வேகம்
உயர்ந்த கொள்கை கொண்ட கணவருக்கு
உதவி செய்வதுடன் தடை போடாது நிறுத்திக் கொண்டார்.
உயிர் கொடுத்த பிள்ளைகளுக்கு வழிகாட்டினார்
உறவுக்கு உதவுவதும் உற்றாரைப் பேணுவதும்
பிற விருந்தினரை வரவேற்பதும் தன் கடமை என வாழ்ந்திருந்தார்
பிள்ளைகளைப் பண்புடன் வளர்த்து படிப்பித்தார்
உள்ளப் பூரிப்புடன் உறவுகளைப் பேணி வந்தார்
அத்தனை பேருக்கும் இனியவளாய் அவரால் வாழ முடிந்தது
இத்தனையும் இழந்ததால் இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது
எத்தனை வைரம் பாய்ந்த இவர் கணவர் கூட இடிந்து விட்டார்
"உத்தமிக்கு ஓர் உதாரணம்" என்பதையும் அவர் உணர்ந்து கொள்வார்.

Lion P.செல்லத்துரை
ஓய்வுநிலை அதிபர்,
கைதடி மேற்கு, கைதடி.

# உன் முகவரியிலிருந்து முகவரி தெரியாவுலகிற்கு இன்னுமோர் மடல்

ஏற்றம் மிகு உலகம் கண்டீர் – உன் குடி
ஏற்றம் காணுமுன் எங்கு சென்றீர்?
இங்கு நீர் எண்ணியவை அப்படியே இருக்கின்றன
எங்குதான் நீர் சென்று மறைந்தீர்?

தாதியப் பட்டம் வாங்கச் சென்ற உம் பிள்ளைக்கு
தாயில்லாப் பிள்ளை என்ற பட்டமும் சேர்த்து வழங்கினரோ?
நீர் கண்ட கனவு மனையில்
உன்னாட்சி தான் காண
உன் மைந்தன் போராடுகிறான்
அதைக் காணும் காலம் உமக்கில்லை யென்று
யமனும் எண்ணி முடித்தானோ?

இரு மாதம் உள்ளதுவே உன் கையால்
பேத்தியை அள்ளி மகிழ.....
இருவாரந்தான் உள்ளதென்றெண்ணியோ
கணினியில் பார்த்து கண் மகிழ்ந்தீர்.

நீர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை
உமை மீளெழுப்ப இன மதம் பாராது
எத்தனை பேர் எத்தனை கோயில்!
இறைவனிடம் மன்றாடினர்
இரக்கம் காட்டும்படி இறைஞ்சினர்
இத்தனைக்கும் இறைவனும் ஆழ்ந்த
உறக்கத்தில்தான் இருந்தானோ?

தில்லையம்பதியாளின் திருவாசலில் நின்று
உன் மகன் கதறியழ ஊரவர் கூடினர்
உன் காதில் மட்டும் விழலையோ தாயே!
மருத்துவச் சான்று பெற மகளோடு சென்ற உனக்கு
மரணச் சான்று தந்து தனியாக அனுப்பினரோ?

இளையவளின் அழுகுரலால் – உன்
இறுதிச் சடங்கில் கலந்தவர்களின்
இதயம் நொருங்கியதே! உனக்கு
இரக்கம் வரவில்லையோ – இறைவா?

கடமை செய்த கைகளை – மயானத்தில்
கழுவ மறுத்தானே உன் கணவன்.....
இடை வழியில் உன் குடியை கைகழுவ
எப்படி மனம் வந்தது அண்ணி உங்களுக்கு?

சாஸ்திரம் பொய்யா?
இறை நம்பிக்கை பொய்யா? – இல்லை
உன் மரணம்தான் பொய்யா?

மைத்துனர் சேகர்
அல்வாய் வடமத்தி.



# ஒரு விடுதலைப் போராளியின் நல் மனைவி

பொதுநலன் கருதி பொதுச் சேவையில் ஈடுபடுவதென்பது இம் மண்ணில் பிறந்த எல்லோரிடமும் காண்பது அரிது! அந்த வகையில் இவ் வையகத்தில் பிறந்த சமூக சேவையாளர்கள் படித்து, பட்டங்கள் பெற்றுத்தான் இச்சேவையில் ஈடுபாடுடையவர்களாக இருக்கின் றார்களா? என்றால் அதுவும் ஒருசிலரைத் தவிர அவ்வாறானவர் களைக் காண்பது மிகவும் கடினமான விடயமாயுள்ளது. ஒருவன் பிறப்பில் தனது குடும்பம் சார்பான பற்றுதல்களிலும் குறிப்பாக திருமணத்தின் பின் தனது மனைவி, பிள்ளைகள் என்ற சிறிய வட்டத்தை விட்டு தனிக் குடும்பம் மற்றும் திருமணப் பந்தத்தில் ஏற்பட்ட மனைவியின் குடும்பத்தவர் யாவருடைய நலன்களிலும் தமது பொருளையும் கொடுத்து உதவி புரிந்து அவர்களையும் சமூகத்தில் உயர்வடைய எண்ணுகின்ற உள்ளம் படைத்தவர்கள் தான் இவ்வாறான சமூக சேவையில் ஈடுபாடுடையவர்களாக அதாவது தனது குடும்பம், அடுத்து தனது இனம் சார்ந்த சேவைகளை வழங்குவதும் எம்மில் ஒரு சிலரே. அந்த வகையில் திரு.குணநாயகம் அவர்களும் தமது குடும்பம் சார்ந்த முன்னேற்றப் பாதைகட்கும், அடுத்து எமது பாதிக்கப்பட்ட சமூகம் சார்ந்த சமூக இயக்கங்களுடன் இணைந்து! இன்றுவரை அதாவது தமது இளம் பருவத்தில் இருந்து சோர்வடையாது முற்போக் குச் சிந்தனைகளுடன் இன்றும் ஈடுபட்டு வருகின்றமை எவராலும் மறுக்க முடியாது.

இப்பேற்பட்ட இவருக்குக் கிடைத்த மனைவி திருமதி.யமுனா அவர்கள் இல்லறத்திற்கேற்ப நற்குணங்கள் யாவும் பெற்ற பெருந்தகை. ஒரு தாய்தான் ஆரம்பக் கல்வியின் அத்திவாரம் என்ற இலக்கணத்திற் கமைய தமது நான்கு பிள்ளைகட்கும் சிறந்த கல்வியை வழங்க ஏதுவாய் இருந்துள்ளார். இருந்தாலும் இவரது இலட்சிய வேட்கையை

சோதிக்க இறைவனும் விட்டு ல்வக்கவில்லை. மாறாக நோயினைக் கொடுத்து வைத்தியசாலை வீடு என்ற அலைவு, பிறருக்கு மனதாலும் தீங்கு செய்யாது வாழ்ந்தவர்க்கு பிணி, துன்பங்கள், பாவங்கள் நாடா என்ற உண்மை பொய்யாகிப் போய் விட்டதே என இயற்கையெய்திய இவரைப் பற்றி எண்ணத் தோன்றுகின்றது. துறவு என்பது காவியுடை தரிப்பது மட்டும் துறவு இல்லை. தன்னலம் சார்ந்தவர்களை விட்டு அடுத்தவர் விருப்புக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளல். அந்த வகையில் தமது கணவன், பிள்ளைகளது உயர்வுக்காக வாழ்ந்து காட்டிய இவரது அர்ப்பணிப்புக்கள் என்றும் இம் மண்ணுள்ள வரை நிலைத்து நிற்கும். இவரின் இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியாது. எனினும் பிறப்பவர் இறப்பது இயற்கையின் நியதி என்று ஆறுதலடைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

க.சிவயோகநாதன்
சமூக தீபம்
(சாமஸ்ரீ தேசகீர்த்தி)
"செல்வமகால்",
துன்னாலை மத்தி,
கரவெட்டி.



# வலி தந்த நினைவுகளில் அமரர் ஜமுனா குணநாயகம்

அமரர் ஜமுனா குணநாயகம் அவர்களது சடுதியான மரணம் ஒரு கணம் எமக்கு அதிர்வைத் தந்தது. அதுபோல அவரை அறிந்த உறவுகள் அயலவர்களிடத்தும் ஆறாக் கவலையை ஏற்படுத்தி விட்டது. காரணம் அவர் நீண்ட நாட்கள் படுக்கையில் இருக்கவில்லை. அன்று காலையில் பஸ்சில் ஏறி வைத்தியசாலைக்குப் போனவர் அன்றே இறந்து போனதான துயரச் செய்தி தாங்க முடியாத சோகத்தைத் தந்தது.

அமரர் ஜமுனா குணநாயகத்தைப் பொறுத்தவரை எமது சமூக மட்டத்தில் என்றும் மதிக்கப்பட வேண்டியவர். தனது கணவனின் சமூக விடுதலை நோக்கிய பயணத்தில் கடைசிவரை துணை நின்றவர். கணவனது செயற்பாடுகளுக்கெல்லாம் ஊக்கியாகச் செயற்பட்ட பெருமைக்குரியவர். சதா சமூக விடுதலை மேம்பாடு பற்றிய உணர்வுடன் பொது வாழ்வில் இயங்கும் ஒருவருக்கு மனைவியாக இருப்பது என்பது சுலபமானதல்ல. அவர் சந்தித்திருக்கக் கூடிய இன்னல்கள், துன்பங்கள், இழப்புக்கள் எண்ணிப் பார்க்க முடியாதவை.

அமரர் ஒரு குடும்பப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தவர். அத்துடன் தன்னம்பிக்கை, உறுதி, துணிவு என்பவற்றை சமூகத்தின் மேம்பாட்டுக்காகவும் வாழ்வில் கடைப்பிடித்த வர். தனது கணவன், பிள்ளைகளின் குறிப்பறிந்து வாழ்ந்து காட்டியவர்.

தோழர் குணநாயகத்தின் சிறப்பு யாதெனில் சமூக விடுதலைக் காக குரலெழுப்பும் ஆவேச மனிதாயவாதியாக என்றும் இருப்பது தான். இன்றும் அந்தக் குரல் தளர்வுறாது ஒலிக்க அமரத்துவமடைந்த அவரது மனைவியே துணையாக இருந்து வந்துள்ளார் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

வடபுலத்து தமிழர் வாழ்வியலில் சாதியம் ஆழமாக வேரோடிக் கிடக்கும் ஒரு விடயமாகும். யாழ்ப்பாண மனோநிலை அல்லது யாழ்ப்பாண சிந்தனைமுறை என்று கூறப்படுவதன் சாராம்சமாக விளங்குவது சாதியமே. இக் கொடுமைக்கு எதிராக தீண்டாமை ஒழிப்பு, வெகுஜன இயக்கமும் பொதுவுடமைக் கட்சியும் தலைமை யேற்று முன்னெடுத்த தளர்வில்லாத போராட்டங்களில் களத்தில் நின்று போராடியவர் தோழர் குணநாயகம் ஆவார். குறிப்பாக புன்னாலைக்கட்டுவன், வசாவிளான் பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களில் நேரடியாகப் பங்கெடுத்தவர். உயிராபத்தை எதிர் கொண்டு சிலகாலம் தலைமறைவு வாழ்வையும் மேற்கொண்டவர். இதனால் எழுத்தாளர் கே.டானியலின் நேசிப்புக்குரியவராகி அவரது பஞ்சகோணம் என்ற நாவலில் முக்கிய பாத்திரமாகவும் இடம் பிடித்தவர் என்பது பலருக்குத் தெரியாத விடயம். இங்கு நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில் தனது கணவருடன் அமரர் ஜமுனா குணநாயகமும் தலைமறைவாக இருக்க நேர்ந்தது என்பது தான் இறுதியில் இருவரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு ஒன்றாகவே நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்பது அவர்களது தாம்பத்திய வாழ்வின் வரலாற்றில் ஒரு பகுதியாகும்.

இத்தகைய போராட்டங்களே சமூகத்தில் விழிப்புணர்வையும், விடுதலை உணர்வையும் வளர்த்தன. அதற்காக சிறு பொறியைத் தன்னும் மூட்டிய பெருமை திருமதி.ஜமுனா குணநாயகத்துக்கு உண்டு. இக் கடினமான பணியில் கணவனுடன் சேர்ந்தியங்கிய அமரரின் பங்களிப்பு மகத்தானது.

இப் போராட்டங்களில் பங்கெடுத்த ஒவ்வொருவரையும் எமது சமூக வரலாறு என்றும் நினைவில் வைத்திருக்கும். அத்தகைய வர்களில் தோழர் குணநாயகத்துடன் அமரர் ஜமுனா குணநாயகமும் நினைவில் கொள்ளப்படுவார்.

**மு.இராசநாயகம்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ் கல்வி வலயம்.**

## போதனாசிரியரின் உள்ளத்திலிருந்து....

இறைவன் தரைக்குத் தான் அடிக்கடி வர இயலாது என்பதால் தாயைப் படைத்தான் என்பார்கள் ஆன்றோர். ஒரு தாய் என்பவள் தெய்வத்துக்கு சமனானவள். **இதனால் "தாயிற் சிறந்த கோயிலு மில்லை...."** என்கிறது நீதி நூல். அந்த வகையில் திருமதி.ஜமுனா குணநாயகம் அம்மா அவர்கள் தரணி போற்ற நன்மக்களைப் பெற்று, அவர்களின் வாழ்வு சிறக்க உழைத்து, சமூகத்தின் மீது கொண்ட அக்கறையால் தனது மகளைத் தாதியக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். இவர் தனது கல்வியை நிறைவு செய்து சமூகத்திற்கு சேவை யாற்றத் தயாரான நேரத்தில் அதன் பலனைத் தான் பெற்றுக்கொள்ள முன்னர் இப்பூவுலகை விட்டு இறைவனடி சேர்ந்த செய்தி அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி எம் தாதிய சமூகத்திற்கும் பெரும் துயராக அமைந்தது. மனிதன் இறப்பதும் பிறப்பதும் சம்பவமே. அவர்கள் தரணிக்கு விட்டுச் சென்றவையே சரித்திரமாகும். எனவே ஆறாத் துயரில் தவித்துக் கொண்டிருக்கும் குடும்பத்தினர் மேன்மை பெறவும்

***அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை இறைஞ்சுவோமாக.***

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



திரு. S.ஜெயக்குமார்
போதனாசிரியர்,
தாதிய பயிற்சி கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# சிறகொடிந்த பறவையாய்...

சிறகொடிந்த பறவைபோல் கதறினான் என்ற இலக்கிய கூற்றை நேரில் சகலரும் கண்டு கலங்கிய நாள் கடந்த மார்கழி 12ம் திகதி வியாழன் நாள். இயற்கையும் தன் பங்கிற்கு மழையாக அன்று நாள் முழுதும் கொட்டிக் குமுற நாடறிந்த உலகறிந்த அவன் சார்ந்த சமூகம் நன்கறிந்த "குணசிங்கம்" என அனைவராலும் அழைக்கப்படும் குணநாயகம் என்ற சமூகப் போராளியின் ஆருயிர் துணைவி வவா – ஜமுனா அக்னியில் கரைந்த நாளாகும் அது.

"குணசிங்கம்" என்ற சமூக விடுதலை விரும்பி உருவான காலத்திலும் பார்க்க ஜமுனாவைக் கரம் பற்றிய பின்னர் ஆற்றிய தொண்டின் பெருமையை அன்று கொட்டும் மழையிலும் நிற்க இடமில்லாதும் நின்று அஞ்சலித்த அன்பு நெஞ்சங்களின் பிரசன்னத்தி லிருந்து நன்கு பிரதிபலித்தது.

தான் சார்ந்த சமூகத்தின், அயலின் சமூகக் குறைபாடுகளை அழித்தொழிக்கப்படாத பாடுபட்டு துன்பங்களை அனுபவித்தவர் குணசிங்கம். அவற்றினால் சோர்ந்து துவண்டு விடாமல் தோளோடு தோள் நின்று தாங்கிப் பிடித்து வழிநடாத்திச் சென்றவர் துணைவியார் ஜமுனா என்பது யாவரும் அறிந்த உண்மை.

இன்றுவரை தான் கொண்ட கொள்கையில் மிகத் தெளிவாக மாறாத கொள்கைவாதியான குணசிங்கத்தின் தன்மையை தெளிவாக உணர்ந்து விரும்பி கை பிடித்தவர் ஜமுனா. குணசிங்கத்தின் உயிரா பத்தான வாழ்க்கை முறையை நன்கறிந்தும் விரும்பிக் கை பிடித்த துணிச்சல்காரி ஜமுனா.

திருமணபந்தத்திற்கு முன்னிருந்த வேகத்தில் சிறிதும் குறை யாதும் குறைக்காதும் மேலும் வீச்சாக செயற்பட்ட குணசிங்கத்தினை வழிப்படுத்தியவர் ஜமுனா. ஜமுனா போன்ற துணைவிகள் குணசிங்கம் அவர்களுக்கு வாய்த்தது போன்று எமது சமூக விடுதலை விரும்பி

களுக்கு வாய்த்திருப்பின் என்றோ எமது சமூகம் பூரண விடுதலை பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

குணசிங்கத்தின் பெருமை சிறப்பின் பின்னால் நின்ற பெருந் தூண் ஜமுனாதான். இதனை குணசிங்கம் சொல்லாத நண்பர் களில்லை. பொதுக்கூட்டங்களில் உரையாற்றும் போதும்கூட துணைவியாரை தனது வளர்ச்சிக்கு பின்நின்றவள் எனக் கூறுபவர். ஏன் இப்படி சொல்கிறீர் என்றால் என்னை நம்பி வந்த அவளுக்காக நான் எந்த சுகத்தையும் கொடுக்கவில்லை. அதற்காக அவளும் எதனையும் எதிர்பார்க்கவில்லை. எனது சமூகப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அவளே பின்நின்று ஊக்குவித்தவள். ஆகவே அவளை நன்றியோடு நினைவு கூராமல் நான் எதனையும் சொல்ல முடியாதென்பார்.

குணசிங்கம் அன்று எம்மையெல்லாம் கட்டிக் கதறி, எத்தனை பேரெல்லாம் என்னை என்னென்ன மாதிரியெல்லாம் தண்டிக்கத் தெண்டித்தாங்கள். நான் இவள்பாவி தந்த துணிச்சலால் அதெல்லாம் துச்சமாக மதித்திருந்தேன். இவள் பாவி என்னை இப்படிப் பெரிதாகத் தண்டித்துவிட்டு நின்மதியாகப் போய்விட்டாளே என்று சொல்லிச் சொல்லி கதறியபோது நாமெல்லாம் சுக்குநூறாகச் சிதறி விட்டோம்.

இது உண்மையிலும் உண்மை. ஜமுனா இல்லாத குணசிங்கத் தின் எதிர்காலம். இவனெடுத்த சமூகப் பணியின் எதிர்காலபோக்கு என்னாகுமோ தெளிவில்லை?

வழமைபோல் உலக வழமைபோல் ஜமுனாவின் இழப்பால் மாறாத் துயருற்றிருக்கும் எம்மினிய குணசிங்கத்திற்கும் அவர்தம் பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிப்பதோடு அமரர் ஜமுனா வானிருந்து அவர் சார்ந்த அன்பு உள்ளங்களையும் துணைவரின், பிள்ளைகளின் உறவுகளின் அவர்தம் உள்நின்று ஆறுதல்படுத்தி நல்வழி நடத்துவாரென நம்புகிறோம்.

Palam Rd, Arukalmadam,
Anaikkoddai, Jaffna.

*அளவிலாத் துயருடன்*
**க.கமலசேகரம்** (J.P)
Rtd. Bank Snr Manager (NSB)

உ
சிவமயம்

சேவைக்காக வளர்ச்சி! சேவையில் வளர்ச்சி! சேவையினூடாக வளர்ச்சி!

சாமஸ்ரீ சமூகத்திலகம் நாவற்குழியூர்
திரு.வைரமுத்து – நடராசா J.P
(அகில இலங்கைக்குமான சமாதானநீதிவான்)

No.14 WINSTON WALK
ACTON GREEN, CHISWICK
LONDON, W4 5SW
UNITED KINGDOM
Tel : 020-899 478 33

SAMASRI SAMOOGA THILAGAM, NAVATKULIYOOR,
MR.VAIRAMUTHU – NADARAJAH.J.P
(JUSTICE OF THE PEACE, WHOLE ISLAND,SRILANKA)

.................................20

# உள்நின்று ஆறுதல்படுத்தி நல்வழி நடத்துவாரென....

அரசியல் வாழ்க்கையில் காலடி எடுத்து வைத்த எனது காலத்திலிருந்து இன்றுவரை எத்தனையோ சமூக அரசியல் போராளிகளைச் சந்தித்திருக்கிறேன். பேர், புகழ் எதிர்பார்ப்பற்ற தனது சமூகத்திற்காக உயிரையே துச்சமாக மதிக்கின்ற ஒரு சிறந்த தனது சமூகப் பற்றாளன் தம்பி "குணசிங்கத்தை" போல் இதுவரை எவரையுமே சந்தித்ததில்லை.

அன்றிலிருந்து இன்றுவரை கொண்ட கொள்கையில் மிகத் தெளிவாக மாறாத கொள்கைவாதி குணசிங்கம். அவரின் கொள்கையைத் தெளிவாக உணர்ந்து விரும்பிக் கை பிடித்தவர் இவர் துணைவி. திருமணபந்தத்திற்கு முன்னிருந்த வேகத்தில் சிறிதும் குறையாதும் குறைக்காதும் மேலும் வீச்சாக செயற்பட்ட அவரை வியர்ந்து பார்த்திருக்கிறேன்.

இதற்கு காரண காரிகையான குணசிங்கத்திற்கு வாய்த்த துணைவி "வவா" ஜமுனாவை சந்திக்க முன்னும் சந்தித்த பின்னும் பாராட்டி வாழ்த்தியிருக்கிறேன். குணசிங்கத்தின் உயிராபத்தான வாழ்க்கை முறையை நன்கறிந்தும் விரும்பிக் கைப்பிடித்த துணிச்சலை அவரைக் காணும் பொதெல்லாம் நான் பாராட்டாத நாளில்லை.

தொடர்ந்தும் துணைவரின் செயற்பாடுகளை இமையளவும் குறையவிடாது செயற்படுத்த ஊக்குவித்தமை ஜமுனாவின் தனித் தன்மையின் உச்ச சிறப்பாகும். இவரைப் போன்ற துணைவிகள் எமது சமூக விடுதலை விரும்பிகளுக்கு வாய்த்திருப்பின் என்றோ எமது சமூகம் பூரண விடுதலை பெற்றிருக்குமென நான் நினைப்பதுண்டு. பலரிடம் சொல்லியதுண்டு.

ஜமுனாவின் மறைவை இற்றைவரை என்னால் நம்ப முடிய வில்லை. ஜீரணிக்க முடியவில்லை. தனது தலைவரை, பிள்ளைகளை மட்டுமல்ல என்போன்ற உடன்பிறவா உறவுகளை பரிதவிக்கவிட்டு மறைந்துள்ளார்.

நான் விட்டு வந்த அரசியல் பாதையை எனது மகன் தொடர விழைந்தபோது அரசியலில் எனது மூத்த வாரிசாக கணித்த குணசிங்கத்தின் குடும்பம் இருக்கும்போது எனக்கென்ன பயமென்ப தென்ன என்றிருந்தேன். அதனை அவர்களும் உண்மையென நிரூபித்துக் காட்டினார்கள். கடந்த தேர்தல் காலங்களின் குணசிங்கத் தின் பங்களிப்பை வரையிட்டுச் சொல்ல முடியாது. தான் தேர்தலில் நின்றிருந்தால் கூட இவ்வளவுக்கு பாடுபட்டிருப்பாரோ தெரியாது. அதைவிட எனது மகளுக்கு நிகரான "ஜமுனா" தனது இயலாமையிலும் தனது துணைவரை விரட்டி விரட்டி எமது கட்சி வேலைக்காக அனுப்பிக் கொண்டிருந்ததை என்னால் மறக்க முடியாது.

எம்மைக் கண்டதும் வருகிறோமென அறிந்ததும் தனது வேலை களை போட்ட போட்டபடி விட்டுவிட்டு துணைவரை எம்முடன் விரட்டி யதை என்னால் மறக்க முடியாது. அவையெல்லாம் இன்று என் கண் முன் நிழலாடுகிறது. துன்பம் துயராகத் தொண்டையை அடைக்கிறது. அயலிருந்து மகன் குணசிங்கத்திற்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்.

எத்தனை பேரெல்லாம் என்னை என்னென்ன மாதிரியெல்லாம் தண்டிக்கத் தெண்டித்தாங்கள். நான் இவள் பாவி தந்த துணிச்சலால் அதெல்லாம் துச்சமாக மதித்திருந்தேன். இவள் பாவி என்னை இப்படி தண்டித்துவிட்டு நின்மதியாகப் போய்விட்டாளே என்று சொல்லிச் சொல்லி அழுதானெனக் கேட்டு என்னெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. இது உண்மையிலும் உண்மை. ஜமுனா இல்லாத குணசிங்கத்தின் எதிர்காலம் இவனெடுத்த சமூகப் பணியின் எதிர்கால போக்கு என்னாகுமோ தெரியவில்லை?

என்னவானாலும் வழமைபோல் உலக வழமைபோல் ஜமுனாவின் இழப்பால் மாறாத் துயருற்றிருக்கும் எம்மினிய குடும்ப மகன் குணசிங்கத்திற்கும் அவர்தம் பிள்ளைகளுக்கும் குடும்பத்தி னருக்கும் எனதும் குடும்பத்தினரதும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்ப தோடு அமரர் மகள் ஜமுனா வானிருந்து அவர் சார்ந்த அன்பு உள்ளங்களையும் துணைவரின், பிள்ளைகளின், உறவுகளின் அவர்தம் உள்நின்று ஆறுதல்படுத்தி நல்வழி நடத்துவாரென நம்புகிறேன்.

*இலண்டனிலிருந்து* **வைரமுத்து நடராசா குடும்பத்தினர்**

**"மலர் வாசா"**

**உரும்பிராய் வடக்கு,**

**உரும்பிராய். 40180**

லங்கா சம சமாஜக் கட்சி – யாழ்ப்பாணம்
ලංකා සම සමාජ පක්ෂය - යාපනය
LANKA SAMA SAMAJA PARTY - JAFFNA

# சமூகப் போராளியின் கரம்

ஒரு போராளியின் கரங்கள் வலுவிழந்தால் எப்படியிருக்கும்?.... அதனை அவன் நிலைமையை அப்படியான ஒருவனின் அருகிலிருந்து பார்த்து அறிந்தேன். நாடறிந்த உலகறிந்த அவன் சார்ந்த சமூகம் நன்கறிந்த "குணசிங்கம்" என அழைக்கப்படும் குணநாயகம் என்ற சமூகப் போராளியின் ஆருயிர் துணைவி ஜமுனா (வவா) வின் திடீர் இழப்பால் துடித்த போதும் இன்றும் துடித்துக் கொண்டிருக்கின்ற போதும் அவரைத் தேற்ற வார்த்தைகளில்லாது நானும் சேர்ந்து அவருடன் துடிக்கிறேன்.

அமரர் ஜமுனாவின் செயற்பாடுகளை கடந்தகால நிகழ்வுகளை சொல்லிச் சொல்லி கலங்கும்போது நானும் கலங்குவதைத் தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர் சொல்வதெல்லாம் நானும் நேரில் கண்டவைகள், அனுபவித்தவைகள்.

நான் எனது அரசியல் வாழ்வில் நுழைந்தபோது எனது தந்தையாரின் நட்பால் கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம் குணசிங்கம் குடும்பத்தின் உறவும் நட்பும் தான். சகோதரி ஜமுனா இல்லை அவரை அக்காவென்ற வழமைபோல் அழைக்கிறேன். அவரின் செயற்பாடுகளை துணைவருக்கான புத்திமதிகளை நேரில் கேட்டிருக்கிறேன். ஒரு ஆணின் வளர்ச்சிக்கு பின்னே ஒரு பெண்ணிருப்பாளென்பது ஆன்றோர் கூற்று. நிச்சயமாக அக்கூற்றிற்கு அக்கா அமரர் ஜமுனா அவர்கள் சிறந்த உதாரணமாவார்கள்.

துணைவரின் உயிராபத்தான வாழ்க்கைமுறை தெரிந்தும் துணிந்து அவரைக் கைபிடித்தவர். அந்த நிகழ்வை இவரின் தன்மேல் கொண்ட அளப்பரிய அன்பை நண்பர்களிடம் மாத்திரமின்றி பொதுச் சபைகளிலும் சொல்லி மகிழ்ந்து கொண்டிருப்பார். ஏனப்பா "பெண் சாதியை" புகழ்ந்து கொண்டிருக்கிறாயே என்றால் என்னை நம்பி வந்த அவளுக்கு நான் வாழ்க்கையில் என்ன சுகத்தைக் கொடுத்தேன்?.. இப்படிச் சொல்லியாவது மன ஆறுதல் பட்டுக்கொள்கிறேன் என்பார். அத்தகைய ஒரு துணை வழியில் கைவிட்டுப் போகுமென அண்ணன் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

குறுகிய கால நட்பாக அதிலும் அரசியல், தேர்தல் செயற்பாடு களுக்காக ஒன்றிணைந்த போதும் அதற்கு மேலாக உறவு பாராட்டி நான் செயற்பட அன்புச் சகோதரி அக்கா அமரர் ஜமுனாவின் அன்பராக உபசரித்த வரவேற்பு என் கண்முன்னே நிற்கிறது. எந்த நேரத்திலும், எந்த சாமத்திலும் அண்ணனை வீட்டுக்குச் ஏற்றிச் சென்றிருக்கிறேன். நேரங்கெட்ட நேரங்களில் கொண்டுவந்து இறக்கி விட்டிருக்கிறேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் முகம் சுழித்ததைக் காணவில்லை. பல நேரங்களில் அண்ணரிடம் கேட்டதுண்டு இப்படித் திரிந்தால் "அவ" ஒன்றும் சொல்ல மாட்டாவோ என்று?... அண்ணர் ஒரு பதிலும் சொல்ல மாட்டார். ஆனால் வாகனச் சத்தம் கேட்க முன்னே கதவு திறந்து இன்முகத்தோடு வரவேற்கும் பாணி "அக்கா" எப்படிப்பட்டவர் எனப் பதில் சொல்லும்.

அக்காவைப் பற்றி நினைவு கூரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அண்ணர் பற்றிச் சொல்லித்தான் தொடர வேண்டியுள்ளது. ஏனெனில் அண்ணரின் சகல செயற்பாடுகளிலும் "அக்காவின்" நினைவுகள் பரந்திருக்கிறது.

அக்கா நோய்வாய்ப்பட்டிருக்கும் நேரங்களிலும் எனது அரசியல் வேலைகளுக்காக இணைந்திருப்பார். "அக்காவின்" நினை வால் சில நேரங்களில் தடுமாறினாலும், தான் எடுத்த காரியத்தை முடித்தே வெளியேறுவார்.

காணும் அண்ணர் போங்கள் அக்காவை போய் கவனியுங்கள் என்றால் சீ சீ போனால் "அவள்பாவி" ஏன் அரைகுறையில் விட்டுட்டு வந்தனீங்களெனத் திட்டுவாள் எனச் சொல்லி தான் எடுத்த பொறுப்பை முடித்தே வெளியேறுவார். ஏனெனில் தனது செயற்பாடுகள் யாவும் "அக்காவின்" செயலாக அவரைத் திருப்திப்படுத்தும் செயலாகக் கொண்டிருந்தார் என்பது உண்மை.

அமரர் ஜமுனா அக்காவின் இழப்பு "குணசிங்கம்" குடும்பத்தின் இழப்பு மட்டுமல்ல. ஒரு சமூகத்தின் அத்திவாரத்தை அசைத்த இழப்பு.

சமூகப் பிரச்சனைகள் நவீன முறைகளால் ஒடுக்கப்பட்டு மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது அதனைத் தெளிவாக இனங் கண்டு வெளிக்கொணரக்கூடிய "குணசிங்கம்" போன்றவர்களின் குடும்பத் துணையின் வழிகாட்டல்களின் குடும்ப சக்தியின் இழப்பு எமது சமூகத்தின் பேரிழப்பாகும்.

ஜமுனா அக்காவின் இழப்பால் மாறாத் துயருற்றிருக்கும் எம்மினிய குடும்ப நண்பர் குணசிங்கத்திற்கும் அவர்தம் பிள்ளை களுக்கும் குடும்பத்தினருக்கும் என் குடும்பத்தினரதும் கட்சி சார்பிலும் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிப்பதோடு அமரர் ஜமுனா அக்கா வானிருந்து அவர் சார்ந்த அன்பு உள்ளங்களை அவர்தம் உள்நின்று நல்வழி நடத்துவாரென நம்புகிறேன்.

ந.தமிழ்அழகன்
பொதுச் செயலாளர்,
யாழ்ப்பாணம்.

### தெங்கு பனம்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் – சுன்னாகம்

## சமூகப் போராளியின் உயிர்த்துணை.....

சமூகத்தின் கலை கலாச்சார சமூக பொருளாதார எழுச்சியின தும் வளர்ச்சியினதும் தாக்கத்தையும் ஏற்ற இறக்கத்தையும் நிர்ணயிப் பதும் வழிப்படுத்துவதும் காலத்திற்கு காலம் தோன்றி மறையும் சமூக, சமய, அரசியல், பொருளாதார பெரியவர்கள், முதன்மையான வர்களின் கையில் தங்கியிருந்தது. தங்கியுள்ளது. அதிலும் எமது நிறுவன சமூக வட்டத்தில் சொல்லவே வேண்டாம். கற்றறிந்த பெரியவர்களென, அனுபவசாலிகளெனச் சொல்லி எம்மில் இருந்த நல்லதையும் கெடுத்தவர்களே அதிகம். எம்மிடையே சமூக உணர் வோடு, அர்ப்பணிப்போடு, தூரப் பார்வையோடு இருப்பவர்களும் இல்லாமல் இல்லை.

அப்படிப்பட்ட எமது சமூகத்துக்காக உயிரைச் துச்சமாக மதித்துச் செயற்பட்ட, படுகின்ற சமூகப் போர்ராளியொருவன் எமது சங்கத்தின் ஊன்றுகோலாயிருந்தவன் தன் சகல செயற்பாட்டுக்கும் தூணாக தோன்றாத் துணையாக நின்ற துணையை இழந்து சிறகொடிந்த பறவையாக கத்திக் குளறியதை, துயரால் துடித்ததைக் கண்ட நாம் அனைவரும் கண்ணீர் சிந்தியதையும் இயற்கையும் பொறுக்காது . தன் பங்குக்கு நாள் முழுதும் வானிலிருந்து அழுது தீர்த்ததும் மார்கழி 12ம் திகதி துன்பகர நிகழ்வான நாளாகும்.

எமது சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவரும், நிர்வாக உறுப்பி னருமான குணசிங்மெனப் பலரால் அறியப்பட்ட சீனியர் குணநாயகத் தின் அருந்துணைவியார் "வவா" ஜமுனா வின் திடீர் மறைவே எம்மையெல்லாம் பதறி அழ வைத்த அந்த நாளாகும். "குணசிங்கம்" அவர்களின் சிறப்புப் பற்றி எது சொன்னாலும் அதில் சகோதரி

"ஜமுனா" அவர்களின் பின் தூண்டல் அல்லது அறிவுரை இல்லாமல் இருக்காது. அண்ணரும் வெட்கப்படாமல் எது கதைத்தாலும் எதுபற்றிப் பேசினாலும் அண்ணி பற்றி ஒரு வார்த்தை சொல்லியே முடிப்பதுண்டு. ஏனெனில் தெளிவாக சொல்வதானால் ஓர் உயிரும் ஈருடலுமென வாழ்ந்தவர்கள் அவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏன் இப்படி மனைவி புகழ் பாடுகிறீர்களெனக் கேட்டவர்களுக்கு இவர் கூறும் பதில் எங்களின் பலருக்கு சிரசில் பலமாக அடித்ததுண்டு. அவர் சொல்லும் பதில் இதுதான். எதுவித அடிப்படைத் தகைமையுமற்ற என்னை எதுவித எதிர்பார்ப்புமின்றி விரும்பி கை பிடித்தாள் இவள். நானோ எதுவித சுகத்தையும் அவளுக்குக் கொடுக்கவில்லை. ஆனால் தனது கஸ்டம் துயரத்தை உள்ளடக்கி எனது போக்கில் என்னை வழிநடத்தி அவளைக் கை பிடிக்க முன்னிருந்ததைவிட பலமடங்கு, உயிராபத்துக்கள் உட்பட்ட சமூக சேவைகளுக்கு ஊக்கப்படுத்தி வழிவிட்டிருக்கிறாள். வழிநடத்தி யிருக்கிறாள். அவளை இப்படி நினைவு கூர்ந்தாவது எனது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்கிறேன் என்பார்.

அப்படிப்பட்ட "ஜமுனா" சகோதரியை இழந்து பிள்ளைகளோடு அன்று அவர் கத்திக் குழறி சொன்ன வார்த்தைகளில் எல்லோர் மனதை யும் குத்திக் கிழித்த வார்த்தைகள் பலதில் "எத்தனை பேரெல்லாம் என்னை என்னென்ன மாதிரியெல்லாம் தண்டிக்க தெண்டித்தாங்கள். நான் இவள் பாவி தந்த துணிச்சலால் அதெல்லாம் துச்சமாக மதித்திருந்தேன். இவள் பாவி என்னை இப்படி ஒரேயடியாகத் தண்டித்து விட்டு நின்மதியாகப் போய்விட்டாளே" என்று சொல்லிச் சொல்லிக் கதறியபோது எல்லோரும் உடைந்து சுக்கு நூறாக சிதறி விட்டோம்.

சங்கத்தின் ஆரம்பகால செயற்பாடுகள் பலதிற்கு குணசிங்கம் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. இன்றும் பல அங்கத்தவர்கள்

அவர்களின் வாரிசுகளும் இவர் முன்னின்று உழைத்து செயற்படுத்திய அங்கத்தவர் விபத்து ஓய்வூதிதித் திட்டத்தையும் அதனை அப்போதைய பிரதமர் உயர்திரு.பிரேமதாசா அவர்களை அழைத்து யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக விழாவெடுத்து பிரதமர் கையாலே ஆரம்பித்து வைத்தமையை நினைவு கூறுகிறார்கள். இவர் எமது சங்கத்தின் ஆரம்ப கால அங்கத்தவரும் 1980ம் ஆண்டின் நிர்வாக சபையின் அங்கத்தவராயுமிருந்தார். எமது அங்கத்தவர்கள் அன்று மரண வீட்டில் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். ஜமுனா சகோதரியின் இழப்பால் வேதனைப்பட்டார்கள்.

எமது சங்கத்தின் அங்கத்தினர் பலரது தனிப்பட்ட பிரச்சனை களை, சமூக அச்சுறுதல்களை, பொருளாதார நெருக்கடிகள் பலதை தீர்த்தவர். தீர்த்து வருபவர் குணசிங்கம் அவர்கள். சகோதரி ஜமுனா வின் இழப்புக்கும் இவற்றிற்கும் என்ன தொடர்பென இதனை வாசிப்ப வர்கள் நினைக்கலாம். நிறைய உண்டு. அவற்றையெல்லாம் எழுத்தில் வடிக்கப் போனால் நூறு பக்கம் போதாது.

சங்கப் பிரச்சனையானாலும் சரி தனிப்பட்ட அங்கத்தவர் பிரச்சனை என்றாலும் சரி, வீட்டை வாங்கோ ஆறுதலாகக் கதைத்து முடிவெடுப்போமென்பார். சகோதரி ஜமுனாவின் முன் எப்படிக் கதைக்கலாமென்று தயங்கி தயங்கி உள்நுழைந்தால் வாங்கண்ணை வாங்க தம்பி என அழைக்கும் குரல் சகோதரி ஜமுனாவின் குரலாகத் தானிருக்கும். முகம் கோணாது தேனீர், சிற்றுண்டி உபசாரத்தோடு "ஒன்றுக்கும் யோசியாதீங்கள்" "இப்படி இப்படி யோசியுங்கோவன்.... பிரச்சனைக்கு வழி கிடைக்கும்" என்பார். நாம் செல்லு முன்பேயே நாம் முன்பே சொன்ன தகவலடிப்படையில் இருவரும் கலந்து பேசியிருப் பார்கள் அதன்பின் குணசிங்கம் அவர்கள் வந்தால் பெரிசாக எதுவும் மினக்கெடத் தேவையிராது. இந்த அற்புத ஜோடிகள் இருவரும் மன

மொத்து கதைத்து பேசி தீர்த்த விடயங்கள் ஏராளம் ஏராளம். அதன் பலனை அனுபவித்தவர்கள் பலர்.

சகோதரி ஜமுனாவின் இழப்பு குணசிங்கம் குடும்பத்திற்கு மட்டு மல்ல அவர் சார்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்திற்கு விசேடமாக எமது சங்க அங்கத்தவர், உறுப்பினர், ஊழியர்கள் எல்லோருக்கும் பேரிழப்பாகும். உதவியென்று கூசாமல் சென்று கேட்க இவரைப்போல் ஒருவர் இனி பிறந்துதான் வரவேண்டும்.

ஜமுனாவின் இழப்பால் மாறாத் துயருற்றிருக்கும் எம்மினிய குணசிங்கத்திற்கும் அவர்தம் பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் உலக வழமைபோல் எனது ஆழ்ந்த வருத்தத்தை சுன்னாகம் தெங்கு பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் சார்பில் தெரிவிப்ப தோடு அமரர் ஜமுனா வானிருந்து அவர்சார்ந்த அன்பு உள்ளங்களை யும் துணைவரின், பிள்ளைகளின் உறவுகளின் அவர் தம் உள்நின்று ஆறுதல்படுத்தி நல்வழி நடத்துவாரென நம்புகிறோம்.

**மின்சார நிலைய வீதி,**
**சுன்னாகம்.**

**தி.சுரேஸ்**
**முகாமையாளர்,**
**சுன்னாகம் பனை தென் வள**
**அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்.**

# மனையறங் காத்த மாண்புயர் மாதரசி

சொற்றிறம்பாத கற்புயர் பண்பால் தன்னையும் காத்து, மற்றுயர் கணவன் மாண்புயர் துணையாய்ப் பெற்றுடன் கொண்ட பிரியமார் கணவனையும் காத்து, பற்றுடன் இருமனம் ஒருமனமாகிப் பெருமன முற்று இனிதே நடத்தும் இல்வாழ்க்கையின் நலம் நிறைந்த புகழையும் காத்து, சோர்வென்பது இல்லாத நிலையில் வாழ்கின்றவளே பெண் என்றான் பெருளாவலன். ஆம்,

**"தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

என்ற குறளின் மூலம் இதனை உலகறிய அன்றே நன்றாய் உரைத்துச் சென்றுள்ளான் அந்த அறவிலோன்.

வான்மறை வள்ளுவன் குறித்த தற்காத்தலைச் செய்த வகையிலே தனக்கெனவோர் தலையாய தானத்தில் நிற்பவராக ஜமுனா என்ற மாதரசி விளங்குகின்றார். இலட்சியவாதியொருவரான கணவரோடு வாழ்ந்த வகையிலே சொல்லிலும் செயலிலும் கலங்கா வுறுதி பெற்ற வகையிலே **"துருவ நட்சத்திரம்"** எனச் சொல்லத்தக்க வகையில் என்றும் நன்றே நின்று சென்றுள்ளார். அந்த வகையிலே கணவருக்கு அருந்துணை புரிந்த ஒருவராக உள்ளார். வாழ்விலே பல்வேறு வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்த கணவர் குணநாயகத்தினை உண்டி முதலியவற்றால் உபசரித்து நின்றதோடு, அவரது துன்பங்களிலும் பங்கெடுத்த வகையிலும் அவரைப் பேணி நின்றுள்ளார். ஏற்றதாம் ஆலோசனைகளை நல்கிய வகையிலும், அவரது நோக்கையும் போக்கையும் ஆக்கம் நிறைந்த பாதையிலே இட்டு வைக்கின்ற வகையிலும் அவரைப் பேணிக் காத்துள்ளார். மொத்தத்திலே, சீரிய தலைவனின் நேரிய வழிநின்று, பாரிய

பணிகளுக்கு உடலால், உள்ளத்தால், உத்தம குணத்தால் அத்தனை விடயங்களையும் ஆற்றிப் போற்றிப் பேணிய வகையிலே உயரிய மனையறங் காத்த மாதரசியாக மிளிர்கின்றார். அது மாத்திரமல்ல, மணாளனோடு மாறாத காதல் கொண்ட வகையிலே; இரு மனங்கள் ஒருமனமாய் ஒன்றிய வகையிலே இல்லற வாழ்க்கையின் நலம் நிறைந்த புகழினைக் காப்பதுதான் மனையறங் காப்பதில் தலையாய தொன்றாகத் திகழ்கின்றது. இந்நிலையிலெல்லாம் சோர்விலாது ஆர்வத் துடிப்பொடு செயற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. அந்த வகையிலே ஜமுனா என்ற மாதரசிக்கு நிகராக எவருமே இருந்துவிட முடியாது.

கோண்டாவில் தந்த குலமகளான ஜமுனா அவர்கள், புன்னாலைக்கட்டுவன், மயிலங்காடு தந்த மகோன்னதமான மாறாத காதலால் ஏற்று இல்லறம் அதனை நல்லறம் ஆக்கிய காலை, கடமை முடிந்ததென்ற நிலையிலோ, அல்லது தனது பற்றுயர் பணிகளை மற்றுயர் மக்களும் பிறரும் ஆற்றுவரென்ற நிலையிலோ மண்ணகம் விடுத்து விண்ணகம் ஏகிவிட்டார். நிலையானது என்று நினைத்திருந்த வாழ்வை நிலையாததென்று அனைவருக்கும் அறிவுறுத்திவிட்டு அகன்று சென்று விட்டாள். அதனை அறியாதிருப்பது கடைநிலை என்பதனை வான்மறை வள்ளுவன்

"நில்ல தவற்றை நிலையின என்றுணரும்

புல்லறி வாண்மை கடை"

என்கின்றான். இந்த உண்மையினை அனைவருக்கும் அறிவுறுத்தி விட்டு மாதரசி அவர்கள் இறைபதம் எய்திவிட்டார். எது எவ்வாறா யினும் மனையறங் காத்த அன்னவர் மாண்பு என்றும் நன்றே நின்று நிலைத்திடும். அதேநேரத்தில் பற்றுயர் கணவர், பாசமார் மக்கள் மற்றும் உறவுகள் எல்லாம் பிரிவாற்றாது பெருந்துயருறுகின்றனர்.

துயருறும் உறவுகளுக்கு ஏற்ற ஆறுதலும் தேறுதலும் கூறுவதுடன் அன்னவர் ஆத்மா இறைபதம் உறைய, பொன்னுயர் மேனி மின்னுயர் சடையான் மன்னுயர் இறையோன் தன்னுயர் அடிமேல் என்னுயர் தலையை இணைந்திட வைத்து ஏற்றிப் போற்றித் துதிக்கின்றேன்.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!***

***"அடிசிற்கினியவளாய் அன்புடைய மாதாய்***
***படிசொற் தவறாத பவாயாய்***
***அடிவருடிப் பின்தூங்கி முன்னெழும் பேதாய்***
***வாழ்ந்தவள் அரனடி சேர்ந்தாளே!***

திரு.ஐ.பாலசிங்கம்
ஓய்வுபெற்ற அதிபரும்,
சமாதான நீதிவானும்,
உடுவில் மத்தியஸ்தர் சபை உறுப்பினரும்,
உடுவில் விவசாய சம்மேளன உபதலைவர்
சுன்னாகம், மயிலணி வடக்கு.
அண்ண மகேஸ்வரர் ஆலய முன்னாள் தலைவரும்,
தற்போதைய நிர்வாக சபை உறுப்பினரும்,
மயிலங்காடு அனுமன் பதி ஞானவைரவர் ஆலய
பரிபாலன சபைச் செயலாளர்.



மூத்த மகளின் 1வது பிறந்ததின (07.07.1985) நிகழ்வின் போது

## மறைந்த திருமதி குணநாயகம் அவர்களிற்கு
## சமர்ப்பணம்

கோண்டாவில் பதியில் வசித்து வருகின்ற எல்லோராலும் அறியப்பட்டவரும், அஞ்சா நெஞ்சமும், அயரா உழைப்பும் தன்னம்பிக் கையும் சமூகப்பற்றாளருமான மதிப்பிற்குரிய திரு.குணநாயகம் அவர் களின் மனைவியான திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்களின் மறைவு சிறுபான்மைச் சமூகத்தினருக்கு பேரிழப்பாகும்.

செம்புலப் பெயர் நீர் போல அன்புடை நெஞ்சங்கள் இணைந்து இல்லற வாழ்வினை நல்லறமாக்கிய காலஞ் சென்ற திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்கள் கணவரின் இலட்சியத்திற்கு, சமூக விடுதலைப் போராட்டத்திற்கு வலது கரம் போலமைந்து துணை நின்று ஒத்தாசை வழங்கிய உத்தமி.

சமூக விடுதலைக்காகப் போராடிய செம்மல்களுள் திரு.குணநாயகம் அவர்களின் பங்களிப்புக் காத்திரமானது. வாழ்வைத் துச்சமென மதித்து பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து தாழ்த்தப் பட்ட மக்களின் விடியலிற்காக வீரத்தோடு போராடிய உத்தம செயல் வீரன்தான், தான் சார்ந்த குடும்பம் என்றில்லாமல் அதற்கப்பால் சமூகத்தை ஆழ அகலமாக நேசித்த பேராளன். அரசியல் வாழ்வில் ஈடுபாடு கொண்டு சமூகத் தொண்டாற்றிய பெருந்தகையின் துணைவி யாரின் இழப்பு அவருக்கு பேரிழப்பாகும் என்பதை அவரது விழிநீர் சொல்லும். வாழ்வு காலத்தின் நியதி. காலத்தின் கட்டளையை ஏற்றுத் தான் ஆக வேண்டும். மறைந்த திருமதி.ஜமுனா குணநாயகம் அவர் களினுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம். மதிப்பார்ந்த திரு. குணநாயகம் ஐயா அவர்களின் பணியும் பாரியாரின் மறைவினால் சிதைந்து விடாது தொடர்ந்து முன்னெடுக்க வும் இறைவனை வேண்டுகின்றோம்.

**நட்புரிமையோடு, :- அ.சிவரூபன்**
**செயற்றிட்ட அலுவலர், வலிகாமம் கல்வி வலயம்.**

# அன்பு என்ற வார்த்தைக்கு.....

அன்பு என்ற வார்த்தைக்கு
உயிர் கொடுத்த தெய்வமே
பாசத்திற்கு கட்டுப்பட்ட பிள்ளைகளை – விட்டு
மனசுக்கு பிடித்த மணவாளனைப் பிரிந்து
சுமங்கலி என்ற பெருமையோடு
உறைவிடம் தேடிச் சென்றீரோ!
ஆறுதல் வார்த்தைகள் ஆயிரம் சொன்னாலும்
அருவியாய்க் கொட்டும் இவர்கள் விழிகளுக்கு
அணை என்பதை யாராலம்மா கட்ட முடியும்?

தம் வயிற்றில் பிறந்தால்த்தான்
தமக்கு பிள்ளையா? எனக்கு
தாங்களும் ஓர் தாயாரே
தம் கரங்களால் பசியாறிய – ஆறுதல்
எனக்கிருந்தாலும் கூட
மறுபடியும் உமைக்காண முடியாத
கண்கள் கசிகின்றதம்மா!

என் நெஞ்சில் உள்ள வலிகளை
இறக்கி வைக்க – பேனா
முனை ஒன்று போதாதம்மா
தாங்கள் ஆத்மா சாந்தியடைய – இன்று
தெய்வமாகிய தங்களையே பிரார்த்திகின்றோம்.
இன்றும் என்றும் தம் நினைவுகளை
மறக்க மறுக்கும் நெஞ்சம்

கபேஷின் ஆருயிர் நண்பன்
ஜதீஸ்
பேர்ன் (சுவிஸ்லாந்து)

### அமரர் திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்கள்

## மறைவு குறித்த இரங்கற் செய்திகள்

தம்பி குணநாயகமே
        தாங்க முடியாத் துயரச்
செய்தி யொன்று இன்றெனக்குச்
        சீமையிலே சொன்னார்கள்
நம்ப முடியவில்லை என்னால்
        நடந்த தென்ன வென்றறியேன்
கேட்பதற்கும் வாய்ப்பாகக்
        கிடைக்கவில்லை வேறெவரும் சொல்லவில்லை
டிசம்பர் பதினோராம் நாள்
        நடந்த இந்தச் சம்பவத்தை
பேரழிவாகிக் கேட்ட நெஞ்சம்
        பெருந்துயரில் வீழ்ந்ததுவே
ஜமுனா நதிப்பெருக்கு
        நடுவழியில் அழிந்த தென்று
புதுவருடம் இரண்டாம் நாள்
        பின்னிரவில் நானறிந்தேன்
என்ன நடந்திருக்கும்
        ஏது இதற்குக் காரணமோ?
எதுவும் புரியவில்லை ஏக்கம் பெரிதாச்சு
        ஏழாலை தெற்கிலுள்ள
என்னுறவுக் காரர்களும்
        ஒன்றும் விபரித்து ஒழுங்காகக் கூறவில்லை
இன்னும் பல ஆண்டு ஏற்றமுற வாழ்வதற்கு
        எண்ணற்ற வாய்ப்பிருந்த இல்லத்தரசிக்கு

என்ன இடையூறு எங்கே எதற்காக
என்று பலவாறாய் எண்ணி அவஸ்தையுற்றேன்
நாலும் தெரிந்து வைத்த தம்பி குணநாயகமும்
ஏதும் உரைக்கவில்லை என்மனதில் சங்கடந்தான்
நல்ல வழிமுறைகள் நயமாகக் கூறுகின்ற
நாயகத்தின் வேதனைகள் மெல்ல உணர்ந்து கொண்டேன்
அவரை காலம் எங்கோ நீண்டிருக்க காலன் குறுக்கிட்டான்
உற்றார் உறவினர்கள் உரத்துக் கதறியழ
நற்றாய் மறைந்ததனால் மக்கள் புலம்பி நின்றார்
என்னுயிரே என்எழிலே என்வாழ்வின் ஒளிவிளக்கே
இருளில் என்னைத் தள்ளிவிட்டு
எங்கு ஓடி மறைந்தனை நீ
மங்கலநாள் வருமென்றும் மகிழ்ச்சி பெருகுமென்றும்
எண்ணியிருந்த கனாஎல்லாம் அழிந்ததம்மா
உந்தன் குணநலமும் உனது நிறைபேரழகும்
இன்றுடனே முடியுமென்று என்றும் நினைக்கவில்லை
கண்ணே மணியே என் கருத்திலுறை பெருவிளக்கே
என்ன நினைத்தாயோ எனை மறந்து போனாயே
சொன்ன சொல் தவறாத சோபன நன்மக்களையும்
உன்னை மறவாத உன்னுறவு அன்பரையும்
என்ன சொல்லி தேற்றிடலாம் என்றறியேன் சொல்வாயோ
நல்லவழிமுறைகள் நாடுவதில் முன்னிற்கும் அன்பர் குணசிங்கம்
அலறும் ஒலி கேட்கிறது சீரான வழிநடக்கும்
சிறந்தவர்கள் நண்பர் அவர்
நேர்மை நிதானவழி
நெஞ்சுறுதி அஞ்சாமை
வாய்மை என நற்குணங்கள்
வாய்ந்த மனிதர் அவர்

காதல் மனையாளை
கற்பகமாம் ஜமுனாவை
பாதிவழிதெனிலே பறிகொடுத்தால்
என்ன செய்வார்
எப்படி நாம் அமைதி சொல்வோம்
ஏங்கி மனம் நொந்து
நிர்க்கதியாய் நிற்கின்றோம்
நெஞ்சம் கலங்குகின்றோம்
நிலைகுலைந்து போகின்றோம்
வாழ்க்கைத் துணைவியென
வாய்த்த ஒரு பெண்ணரசை
பூட்கை நிறை மந்திரியாய்
புரிந்து உதவி தந்தவளை
ஆக்கை வலி அழகு
ஆரோக்கியம் நல்வாழ்க்கை
சேர்த்து வளர்த்த தாயை
திடீரென்று விழுங்குதல்போல்
காலன் சதிசெய்தான்
கதையும் முடிந்ததம்மா
விஞ்ஞானம் கற்று விட்டோம்
விண்ணெங்கும் ஆட்சி செய்வோம்
இஞ்ஞால நோய்களை நாம்
இமைப்பொழுதில் துடைத்தெறிவோம்
விண்ணுலகக் கோள்களிலே
வீடு மனை செய்திடுவோம்
என்று புளுகுகின்ற எங்கள் வைத்தியர்கள்
இப்படியா உயிர் காப்பர்
நோயை நோயாளிகளை

நுண்கிருமிக் கூட்டத்தை

வேரோடழிக்கின்ற விண்ணர் திருச்செயலை

ஆருயிரைக் காக்கின்ற அரிய உடலுள்ளுறுப்பை

திருடி வியாபாரத் திருத்தொழில்கள் செய்பவரை

நிபுணரென நாவாலே நிறுத்துவதை என் செய்வோம்

தாங்க முடியாத் துயரில் தவிக்கின்ற

நான்கு பிள்ளை ஏங்கி அழுதுஇனி

என்ன செய்யப் போகின்றார்

உற்றார் உறவினர் உயிரான தந்தையெல்லாம்

பற்றியெரிகின்ற பாரிய தீக்கங்குகளாய்

வெந்து உயிர் பதைத்து வீழ்கின்றார் காண்ரோ.

திரு. தங்கவடிவேல்
ஆசிரியர்
லண்டன்.





மூத்த மகளின் திருமணத்தின் போது (06.04.2012)

## தாயார் திருமதி.செல்லத்துரை ருக்மணி பிரலாயம்

தந்தையார் இறந்தபின்பு தவித்திருந்த நானும்
தாயாக தந்தையுமாய் தாங்கி மனம் சுமந்தேனே
சிந்தை தளராது சொத்தாக உனையும்
சிறகினிகள் வைத்து சிறப்புற வளர்த்தேனே
விந்தைமிகு வவாவே சாவுனையே பற்றியதாய்
விழியிரண்டும் சுருங்கிவிட வாழ்வோர நிலையினிலே
குந்தியிங்கு நானிருக்க கனியமுன் கதைமுடித்தாய்
காலனையே துதிக்கின்றேன் காத்திரு என் மகளே.

## சகோதாரர்கள் : பிரேமராணி, ரஞ்சன், சுதர்சன் பிரலாயம்

திடமான உளமும் தளர்விலாநடையும்
துணிவான செயலும் தகமையுள சோதரியே
புடமிட்ட தங்கமதாய் புலத்தினிலே நீ ஒளிர
பாடமதாய் ஏணிப் படியேறி நின் றோமே
சுடரொளியாய் நாம்மூவர் சுற்றினோம் உனைத்தினமும்
சொத்தான நீயுமோ சுடுதணலில் சாம்பரானாய்
இடர்வந்த போதும் அரவணைத்து நிற்பாயே
எம்முடனே நீயில்லை ஏங்கித் தவிக்கின்றோம்.

## சோதரர் வெளிநாடு : ராதா (ஜேர்மனி) வசந்தன் (லண்டன்)

ஒரு வயிற்றில் கருவாகி ஒருமடியில் அமுதுண்டு
அரும்பிய நாமும் ஈர்மூவர் ஆனோம்
தெருவோரம் செல்லாது தயாவுள்ள பெற்றோரின்
திருவாய் மலரவே தரணியிலே வளர்ந்தோமே

வருந்தும் நோயோடு வினைதானும் தீராது
வரும் நோயகல விருந்தாக மருந்துண்டாய்
அரும்பாடு பட்டோமே உனையே காப்பாற்ற
ஆண்டவனடி சென்றால் வளமிருத்தி வருந்துகின்றோம்.

## சகலி ரதிப்பிரியா பிரலாபம்

அன்பான அக்காவே அருந்தவ பேறே
என்றும் எனையே ஏற்றமாய் அணைப்பாயே
துன்பமது வந்தாலே தேடிவந்து துணை புரிவாய்
தங்கமான சகலியே தவிக்கின்றேன் நானே
பன்முக ஆளுமையும் பண்பும் பணிவும்
புன்னகையும் பென்னகையும் ஒளிரும் வவாக்கா
உன்னிரு விழிமூடி உறவுகளை விட்டகன்றாய்
உமைசிவனை தொழுதாய் அவ்வுலகம் சென்றாயே.

## மருமகன் கோகுலரமணன் (லண்டன்) புலம்பல்

அன்பெனும் மழைநீரில் எம்மை தோய்த்து
ஆதரவாய் அரவணைத்து வாழ்வு காட்டி
துன்பங்கள் துயரங்கள் அணுகா வண்ணம்
திடமிகவே திசைகாட்டி காத்து நின்றாய்
உன் கையால் உணவுண்டு இன்பம் கண்டோம்
உன் உருவம் காண்பதற்கு என் பிள்ளைக்கு ஆசை கட்டினேன்
என் பிள்ளை உருவம் காண முன் ஏன் விட்டு நீ மறைந்தாய்
எம் குடும்ப விளக்கே அணைந்து போனாயே.

## நாகராசா குடும்பத்தினர் புலம்பல்

என் மகன் உன் மகளைக் கரம்பிடித்த நாள்முதலாய்
நானிலத்தில் சம்பந்தி ஆகிவிட்ட எங்களுக்கு
கற்றவர்கள் மதித்து பாராட்டும் மகளைத் தந்து
காசினியில் எங்களுக்கு புகழ் சேர்த்த வவாவே
அற்புத சம்பந்தியே அருந்தவமே பெரும்பேறே
ஆசையாய் நீ கொஞ்சும் பேரச்செல்வம் உனையிழந்து
நிற்கின்றார் மழைபோலக் கண்ணீர் சிந்தி நித்தம்
நானிலத்தில் நீ மறைந்த துயரத்தால் தேம்புகின்றோம்.
சொல்வதற்கரிய சோதரனாம் துணையான் உள்ளார்
துயர் கண்டால் பொறுக்காது துடித்தும் போவாய்
நல்லவழி நாம் நாட வழிகள் செய்வாய்
நண்ணீரைக் காப்பதுபோல் தருமம் என்பாய்
புல்லியர்தம் சகவாசம் பொருந்தவெட்டாய்
பூமியிலே தருமபொன்றுடே என்பாய்
நல்லவளே நாமிங்கு துடிக்க விட்டு
நீ எங்கு சென்றாய் வவாவே!

## எவ்வுலகம் சென்றீர்கள் அம்மா...!

அம்மா எங்கே எனை
மறந்து சென்றுவிட்டீர்கள்
ஆயிரம் உறவுகள் ஆறுதல் சொல்ல
இருந்தாலும் உங்களைப் போல் வருமா

உங்களை காப்பாற்ற நாம்
கோயில்களில் கதறிய கதறல்கள்
தெய்வங்கள் காதில் விழவில்லை என்றால்
உங்கள் காதிலுமா விழவில்லை.

எந்நேரமும் சொல்லுவீர்கள் உங்களுக்காகத்
தான் வாழ்கிறேன் பிள்ளைகளே – என்று
நீங்கள் போகும் போது இந்த பிள்ளைகளை
தனியாக தவிக்க விட்டு போகிறேன் என்று நினைக்கவில்லையா

மூத்தமகள் நான் என்று திருமணத்தை – விரைவில்
செய்து வைக்கும் படி அப்பாவிடம்
அடம் பிடித்தீர்கள் அம்மா எமை
எல்லோரையும் விட்டு விரைவில் செல்வதற்கா

எங்கள் சந்தோசத்திற்காகவே வாழ்ந்த
ஒரு ஜீவன் நீங்கள் தானம்மா
எங்களையே உலகம் என்று வாழ்ந்த நீங்கள் – இப்போ
எமையெல்லாம் பரிதவிக்க விட்டு எவ்வுலகம் சென்றீர்கள்.

உன் பிள்ளை உருவிலே என் அம்மா வருவாள்
என்று எல்லோரும் ஆறுதல் சொல்கிறார்கள்
எந்த உருவில் நீங்கள் வந்தாலும் – உங்கள்
உருவில் எங்கள் அம்மா போலாகாதம்மா.

அம்மா ஒரு வேண்டுதல் மறு ஜென்மம்
என்று ஒன்று இருந்தால்
எமைச் சுமக்கும் தாயாக நீங்கள்
வேண்டும் என வேண்டுகிறேன்

**என்றும் உங்கள் மகள்**
**மாக்ஷனா**

# அம்மாவே உங்கள் பிரிவால் எம் கண்கள் ஜமுனா நதியாகியதே

அம்மா அம்மாவென்று அங்குமிங்கும் தேடினேன்
அதிகாலை வேலைக்கு வழியனுப்ப ஏனம்மா வரவில்லை
வீடுவந்து சேருகையில் எனக்காய் காத்திருக்கும்
வாசலின்று வெறுமையாய் இருக்கிறதம்மா!
"வோறி" என்று எனையழைக்க நீங்கள்
இன்று வந்திட மாட்டீர்களோ அம்மா!
பள்ளி வாழ்வை உங்களருகில் கழித்தேன்
பாச வலையில் சிக்கி தாய்ப்பாசம் அறிந்தேன்
தாதியம் கற்கவென மூவாண்டு உங்களை பிரிந்து வாழ்ந்தேன்
கழிந்த பின் உங்கள் மடியே தஞ்சமென நான் வந்தேன்
விடுதி உணவு உண்டு அலுத்துவிட்ட நான்
உங்கள் கையால் உணவுண்ண ஆசையுடன் ஓடி வந்தேன்
வந்து இரு மாதங்களில் எங்கம்மா சென்றீர்கள்.

உங்கள் நோய் சீராக சிகிச்சை பற்றி அறிந்து வந்தேன்
உங்கள் ஆயுள் நீடிக்க கற்பனையும் கட்டி வைத்தேன்
சத்திரசிகிச்சைக்காய் பன்னிரண்டு இலட்சத்தை
அவசரம் அவசரமாக ஆயத்தமும் செய்தேனம்மா!
மருத்துவ சோதனைக்காய் அனுமதித்து நான் திரும்ப
எப்போது வருவாயென ஏக்கத்துடன் என்முகம் பார்த்தீர்கள்
அந்தப் பார்வை அப்போது எனக்கு புரியவே இல்லையம்மா!
இப்போது புரிகிறது எனைவிட்டு நீங்கள் பிரியப்போவது
உங்களுக்கு நன்றாக புரிந்துவிட்டது என்று
சிகிச்சை முடித்து குணமாகி நீங்கள் வீட்டிற்கு வரும்

கற்பனையுடன் சந்தோசமாக பட்டம் பெற பயணித்தேன்
பயணத்தின் இடையினில் பலதடைகள் எனக்கு நிகழ்ந்தபோதும்
இறைவன் துணை உள்ளான் என்று மீறியும் சென்றேனம்மா.
மண்டபம் செல்லும்முன் உங்கள் ஆசி பெற தொலைபேசி
எடுத்த எனக்கு கிடைத்த செய்தி அம்மா கதைக்க மாட்டார்
உங்கள் நிலையை எனக்கு எல்லோரும் மறைத்தார்கள்
புரியாமல் தவித்தேன் கதறித் துடித்தேன்
அக்கணம் முதல் உங்களைக் காணும் வரை
என்நிலை எனக்கு புரியவே இல்லையம்மா!
இருபத்து நான்கு மணிநேரம் நடைப்பிணமாய் வந்தேனே
வந்து பார்த்த எனக்கு இதயமே நின்றது
முள்குத்து தாங்காமல் துடிக்கும் உங்கள் மீது
எத்தனை குழாய்கள் எப்படித் தாங்கினீர்கள்
நீங்கள் நினைவிழக்கும் அந்நொடியில் அருகினில்
நானில்லாமல் போனேன் என்று பக்கம்வந்து கதறினேனம்மா!
என் கதறல் உங்கள் காதினில் கேட்கவில்லையோ அம்மா?

என் அம்மாவைக் காப்பாற்ற இறைவனை மண்டாடுங்கள்
என்று எத்தனைபேர் கால்களில் விழுந்து கதறினேன்
இரவு பகல் பாராது நான்கு நாட்கள் ஆலயம்
தேடி கதறி வேண்டினோமே
ஊண் உறக்கம் இன்றி ஒரு நொடியும் விலகாமல்
அருகிருந்து இறைகவசம் ஓதினார்களே அப்பாவும் தம்பியும்
இறைவன் இதயம் இரங்கவே இல்லையம்மா!
அம்மா இறந்துவிட்டார் என்று எல்லோரும் கூற
இது பொய்யென்று நிரூபிக்க இறைவனைக் கெஞ்சினேன்
இறைவனும் கல்லாகிப் போனானே அம்மா!

நீங்கள் ஒருநாள் சுகவீனமுற்றபோது
வேலைத்தளத்தில் வெளிஉணவு உண்டேனென்று
சாப்பாடு போதுமா? நன்றாக இருந்ததா? என்று
கண் கலங்கிக் கேட்டீர்களே இனி.. என்ன செய்வேனென்று
நீங்கள் சிந்திக்கவே இல்லை ஏனம்மா?
உங்கள் அழகில் பாதியைக் கூட எங்களுக்கு
நீங்கள் தரவில்லையே என்று நாம் கேட்டபோதெல்லாம்
உங்கள் அழகிற்கு என்ன குறையென்று மிடுக்காக கூறுவீர்கள்
இன்று எம்முகம் களையின்றி வாடுகிறதே அம்மா!
நீங்கள் கரையொதுங்கும் வரை நான் வாழ வேண்டுமென
அடிக்கடி கூறுவீர்களே இன்று – நீங்கள்
எமையெல்லாம் விட்டு ஒதுங்கியது ஏனம்மா?

எத்தனை கஷ்டத்திலும் சிரிப்பொலி கேட்கும் எம்வீடு
இன்று கண்ணீரால் நிறைகின்றதே
விலை மதிப்பற்ற எம் செல்வம் உங்களை நாம் இன்று
தொலைத்துவிட்டு ஏழைகளாய் ஏங்கியே நிற்கின்றோம்
பொன், பொருள், பணம் என்று கோடி செல்வம் சேர்ந்தாலும்
அம்மாவே உங்கள் முன் அவை எல்லாம் தூசுதான்
தாய், பிள்ளை போலன்றி நண்பர்கள் போல்
ஊர் புதினம் கதைப்போமே இனி யாருடன்
கதைப்போமம்மா வந்து விடுங்கள்
நாள் முழுதும் பிறருக்காய் பணி செய்யும் உங்கள் பிள்ளை
நான் இன்று உங்களுக்கு பணி செய்யும்
பாக்கியத்திற்காய் ஏங்குகின்றேன்.

ஆயிரம் உறவுகள் அருகினில் இருந்தாலும்
பெற்றதாய் நீங்கள் அருகினிலிருப்பது போல் வருமா?
சிறுபிள்ளை போலெம்மை முன்னின்று தண்டிக்காமல்
கொடிய தண்டனை தந்து எங்கம்மா சென்றீர்கள்?
"தாதி" என்று பட்டம் பெற்று நான் நிமிர்ந்து நிற்கும் வேளை
"தாயில்லாப் பிள்ளை" என்ற பட்டத்தை ஏனம்மா தந்தீர்கள்?
எமக்கு உயிர் கொடுக்க உங்களைப் படைத்த இறைவன்
பாதியில் எம் உயிரை பறித்துச் சென்றானே
பூமிக்கே நோகாமல் பாதம் வைக்கும் உங்களை
பாதி வயதினில் கொண்டு செல்ல காலனுக்கு மனம் வந்ததோ
யார் என்ன சொன்னாலும் யாரெதிர்த்து நின்றாலும்
மௌனமே உருவாக பொறுமையாய் நிற்பது கண்டு
பூமாதேவியே என் தாயென்று பூரித்து நிற்பேனே
உங்களை துன்புறுத்திய இறைவனும் கொடியவனே.

இரவினில் அருகினில் தடவியே பார்க்கிறேன்
ஒரு தடவை என்னருகே வந்துவிடுங்கள் அம்மாவே!
அம்மா! அம்மா! என்று நான் அழைக் வேண்டும்
என்முன்னே வந்து நின்றிடுங்கள் அம்மா!
இனியும் ஒரு ஜென்மம் வேண்டும் அப்போதும்
உங்கள் மகளாய் நான் பிறக்க வேண்டுமம்மா!
இங்கு விட்டுச் சென்றதெல்லாம் நாம்
அங்கு தொடர வேண்டுமம்மா!
அம்மா! எத்தனை கற்பனை எத்தனை ஆசைகள்
நிறைவேற்ற ஓடி வாருங்கள் அம்மா!

**உங்கள் அன்பு மகள்**
**வோறி**

# அம்மாவென்று நானழைக்க எங்கு நான் போவேனோ!

அம்மாவென்று நானழைக்க எங்கு நான் போவேனோ?
யாரை இனி நானழைத்தால் உமதன்புக்கு ஈடாகும்
தம்பி என்று எனையழைக்கும் உங்கள் குரல்
இன்னும் காதில் கேட்குதம்மா!
மெதுவாக போய்வா தம்பி என வேலைக்கு
வழியனுப்ப வரவில்லை ஏனம்மா?
வேளைக்கு சாப்பிட வா தம்பி என சொல்லி
அனுப்பும் உமது பரிவு எங்கோ?
உமது பக்குவம் பாசம் இன்று
நான் உண்ணும் உணவில் இல்லையேயம்மா!

கோழியின் இறைக்கைக்குள் குஞ்சுகள்
போலெமை வளர்த்தீர்களே!
சில காலம் ஏழ்மையும் பசியும் எமை வாட்ட
பாசத்துடன் தைரியத்தையும் ஊட்டினீர்கள்.
கஷ்டங்கள் பல தாங்கி எமக்காக நீங்கள் வாழ்ந்தீர்களே!
உமையுருக்கி எமை வளர்த்தீர்கள்
உமதாசை கனவுகளை நிறைவேற்ற
அவகாசம் இன்றி எனைவிட்டு எங்கு சென்றீர்?
உமைதேடி பார்க்கின்றேன் எனது
கண்களில் படவில்லை ஏனம்மா?

ஒரு வித புன்னகையுடன் தலையசைத்துச் சென்றீரே!
எனைவிட்டு செல்லபோவதன் சமிக்கையென
நானறியாமல் வழியனுப்பி வைத்தேனோ?

சத்திரசிகிச்சைக்காக பரிசோதித்து பார்க்கவென
வைத்தியசாலை சென்றீரே!
உமைப் பார்க்க வைத்தியசாலை நான் வந்தேனே!
உமது உடல்நிலையில் மாற்றம் கண்டு
தங்கையை உதவிக்கழைத்தேனே
உங்களுடன் இது இறுதி வார்த்தையென
தெரியாமல் விடைபெற்று விட்டேனே!

எமை நீங்க மனமின்றி நீங்கள் தவித்த நான்கு நாட்கள்
கோயில்கள் பலவேறி வழிபாடு பல நூறு நான் செய்தேன்
அங்கிருப்பது கல்லென்று அறியாதது என் தவறோ?
என் தெய்வத்திற்கணிந்து அழகு பார்க்க ஆசையாக நானிருந்தேன்
அணியும் முன்னமே அதுவே உம் படத்திற்கு மாலையானதுவே
எனை துயரத்தில் ஆழ்த்த விதி செய்த விளையாட்டிதுவோ?

எத்தனை பிறப்பு இனி எனக்கிருந்தாலும்
உங்கள் மகனாக நான் பிறந்திட வேண்டுமம்மா!
உம்நினைவுகள் தினம் வரவே ஆழத்துயரில் தவிக்கின்றேன்
பாசக்கரம் நீட்டி ஆறுதல் தரமாட்டீர்களா அம்மா!
உங்கள் அன்பை இழந்து தவிக்கின்றேன்
மறுபடியும் என் முன்னே வந்திட மாட்டீர்களா அம்மா!

**அம்மா உங்கள் அன்பை**
**இழந்து தவிக்கும்**
**உமதருமை மகன்**
**கபேஷ்**



# அம்மா என்றும் உங்கள் நினைவுகளுடன்

அம்மா,

என்னை தவிக்கவிட்டுச் சென்றதன்
காரணம் என்னம்மா?
என்னை நடக்க பேசக்
கற்றுக் கொடுத்தீரே – உமைப்
பிரிந்து வாழும் கொடுமையை
சொல்லவில்லையே – நான்
எப்படியம்மா வாழப் போகிறேன்.

சிறியதோ பெரியதோ நல்லதோ கெட்டதோ
எந்த வொரு விசயமாக இருந்தாலும் – பிறகு
என்ற வார்த்தைக்கு இடம் கொடுக்காமல்
உமைத்தானே தேடி வருவேன் – இன்று
என் மனதில் பொங்கும் வேதனைகளைச்
சொல்லி அழ யாரையம்மா நாடி நிற்பேன்.

வெளியில் செல்லும்போது கூட
"அம்மா போயிற்று வாறேன்" என்று
உமைத்தானே தேடிச் சொல்வேன்
பதில் இல்லை என்றாலும் மறுபடியும்
"அம்மா" என்ற அழைப்புக்கு
அனுமதிக்குரல் கொடுப்பீரே – இன்று
எனை வழியனுப்பி வைப்பது யாரம்மா?
உங்கள் நினைவுகளும் எனது கண்ணீருமே.

வீட்டில் அக்காவும் சின்னாவும் இல்லாத நேரம் நானே
வீட்டு வேலைகளை தனியாக செய்வதைப் பார்த்து
அடிக்கடி ஒரு வார்த்தை சொல்லுவீர்களே!
"எளியவளாகப் பிறந்தாலும்

இளையவளாகப் பிறக்கக் கூடாது"
இப்படி எனைப் பிரிந்து போவதற்காகவா?
இப்போ இந்த இளையவளோட
தவிப்பை தணிப்பது யாரம்மா?

பாடசாலை செல்லும் காலத்திலிருந்து இப்போ
வீட்டில் இருக்கும் வரைக்கும் – எனக்கு
இரட்டை ஜடை போட்டு விடுவீர்களே – என்
அம்மா என்கூட இருக்கின்றா என்ற
நம்பிக்கையில் நானும் பின்னல் பழகாமல் இருந்தேனே – இனி
எனக்கு இதையெல்லாம் செய்வது யாரம்மா?

அப்பா வீட்டில் இல்லாத நேரம் நாம்
ஐவரும் சேர்ந்து பலவற்றைப் பேசி
சிரித்துக் கொண்டோமே – அப்பா
வந்து என்ன என்று கேட்டால்
அவர் மேலுள்ள மரியாதையில்
ஒன்றுமில்லை என்று அமைதியாகி விடுவோமே – இன்று
எமைத் தனித் தனியாக சிந்திக்க விட்டு
சிரிப்பை மட்டும் எடுத்துச் சென்றீர்களோ.

செல்லமாக நான் யமு, யமுனா
என்றழைக்கும் போதெல்லாம் – என்
வயதை ஒத்த சினேகிதி போல கதைப்பீர்களே!
இவையெல்லாம் மறக்க கூடிய நினைவுகளா?
கனக்கிறதம்மா என் இதயம்
சிறு சிறு விடயமாக இருந்தாலும்
"அம்மா" என்ற சொல்லுக்குள்
பலவற்றைப் புகுத்தி விட்டேன்
பிரித்தெடுக்க முடியாமல் தவிக்கின்றேன் அம்மா.

மாதுரியனுடன் விளையாடும் போது உங்களை – அவன்
என் அத்தை என்பதும் இல்லை அது – என்
அம்மா என நான் சொல்வதும் அவனுக்காய்
உங்கள் மடியில் தலை வைத்துப் படுத்த போது
என்னை தள்ளிவிட்டு அவன் படுப்பதும்
இப்போதும் என் கண்களில் நிற்கிறது அம்மா
இனி என் அம்மா என யார் மடியில் படுத்திடுவேன்.

உங்களை வைத்தியசாலையில் அனுமதித்த போது
உங்களுடன் இரவு நான் தங்கும்போது
வீட்டில் இருந்து போன் வந்தபோதும் கூட
பெண்பிள்ளைகள் இரவு கதைத்தால் தப்பாக
நினைப்பார்கள் "இனி போன் பண்ண வேணாம்
என்று சொல்" எனக் கூறினீர்களே!
"எனக்கு ஏலாமல் இருக்கு பனடோல்
வாங்கி வா றொமி" என்று கூறி
"அங்காலை ஆம்பிளயல் வோட் கவனம்" என
அக்கறையாக கூறினீர்களே
இது தான் உங்களது கடைசி
வார்த்தை என அறியாமல் போனேனே!

நீங்கள் கோமா நிலைக்கு போகும்போது
அருகில் நான் இருந்தும் – நீங்கள்
நித்திரையாகி விட்டீர்கள் என்றல்லவா
நான் இருந்து விட்டேன்
நான் கொஞ்சம் கவனத்துடன் இருந்திருந்தால்
உங்கள் கோமா நிலையை கலைத்திருப்பேனே
என்னை சின்னப்பிள்ளை சின்னப்பிள்ளை என
நான் வளர்ந்தும் சின்னப்பிள்ளை ஆக்கிவிட்டீர்கள்
இதனால் தான் விபரம் புரியாமல்
இருந்து விட்டேனோ!

இரவு  தூங்கும் போது கூட
உமதருகாமையில் தூங்குவேன் – இன்று
அவ்விடத்தில் உமதம்மா இருந்தும்
எனதம்மா உமைப் போலாகுமா?
வலிக்கிறதம்மா நெஞ்சம்.

நீங்கள் வைத்தியசாலையில் இருந்தவேளை
எத்தனை கோயில்களுக்கு சென்றேன்
எத்தனை தெய்வங்களை வேண்டினேன்
எத்தனை முறை மன்றாடினேன்
எத்தனை நேர்த்திகளை வைத்தேன்
அத்தனையும் பொய்யானதே!

கடவுளின் உருவம்தான் கல் என்றால்
அவன் மனசும் பாறைகளானதுவே
உங்களை என்னிடமிருந்து பிரித்து – எனைத்
தாயில்லாப் பிள்ளை என மற்றவர் சொல்ல – விதி
செய்த விளையாட்டு என்றால் என்னால்
ஏற்க முடியவில்லை அம்மா – அந்த
விளையாட்டை கடவுளும் தானே
வேடிக்கை பார்த்தான் – இனி
எப்படியம்மா கடவுளை தேடிப் போவேன்.

உமையிழந்து மனம் துடிக்குதம்மா
பிள்ளைகளுக்குப் பெற்றவங்கள் தான்
முதல் தெய்வம் – எனக்கு
நீங்க தான் ஒரே தெய்வம்
இவ்வுலகை விட்டு பிரிந்து விட்டீர்கள் என்பதை
நம்ப மறுக்கிறது என் மனம் – இருந்தும்
திரும்பி எங்களிடம் வந்து விடுவீர்கள் என்ற
நம்பிக்கையில் காலத்துடன் நகர்கின்றேன் அம்மா

என்றும் உங்கள் நினைவுகளுடன்
தவிக்கும் இளைய மகள்
றொமி

# மதி உயர் மாண்புள்ள மனைவிக்கு

அம்மா என்ற முன்றெழுத்தில் இணைந்த யமுனா
உனக்கு என் முதல் வணக்கம்
உன்னை சிறைமீட்ட என்னை தவிக்க விட்ட யமுனா
முதலிரவை மூன்று வீட்டில் கழித்த யமுனா
தலைமறைவு வாழ்க்கையில் பங்கெடுத்த யமுனா
உறங்காத மனிதனை உறங்க வைத்த யமுனா
அடங்காத கணவனை அடங்க வைத்த யமுனா
ஓயாத அலையை ஓய வைத்த யமுனா
ஒதுங்காத கணவனை ஒதுங்க வைத்த யமுனா
தூங்காத கண்களை தூங்க வைத்த யமுனா
வளையாத நெஞ்சை வளைய வைத்த யமுனா
நிரம்பாத என் உள்ளத்தை நிறைய வைத்த யமுனா
நாஸ்தீகனை ஆஸ்தீகன் ஆக்கிய யமுனா
பள்ளி செல்லாப் பாவியை மேதையாக்கிய யமுனா
அவசரக்காரனை பொறுமைக்காரனாக்கிய யமுனா
உன் கணவரை புரியாத மனிதருக்கு புரிய வைத்த யமுனா
கூந்தலின் வாசனையை கொண்டு சென்ற யமுனா
என் திருமதியாகிய முழுமதியே யமுனா
அழகியே உன் முகம் ஒருதரம் பார்ப்பேனோ சொல் யமுனா
நான் கடல் கடந்து சென்ற வேளை நீ வடித்த வரிகளில்
ஓரிரு வரிதனை இப்போது வடிக்காயோ யமுனா
நமதன்பின் அடையாளமாய் நாம் பெற்ற செல்வங்களை
தனியாக தவிக்கவிட்டு எங்கு சென்றாய் யமுனா
மருத்துவமனையில் உன் செல்வப் புதல்வன்
வான் உயர கதறிய சத்தம் கேட்கலையோ யமுனா
உன் கணவனின் பணிகளை யாரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றாய் யமுனா

நீ போன பாதையை சொல் யமுனா
உன் இறுதிப் பயணம் இதுவென்று சைகையால் சொன்னாய்
எனக்கு புரியலையே யமுனா
நீ மிடுக்கான பயணம் சென்றாய் யமுனா
நான் மிடுக்கிழந்து நிற்கின்றேன் யமுனா
கண் கட்டா குதிரைக்கு கண் கட்டிய ஜமுனா
தொண்ணூற்றொரு நாள் பிரிவின் பின்
பெரும் புயலுடன் போராடி நான் பெற்ற திரவியமே போய் வருக
என் கண்ணின் கண்மணியே போய் வருக
முக்கனியும் சக்கரையும் தந்த கண்ணகியே போய் வருக
இரத்தத்தின் இரத்தமே போய் வருக
உனக்கு என் இறுதிப் பிரியாவிடை.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



தலைமறைவு வாழ்க்கையின் போது

# தம்பி குணசிங்கம் மற்றும் பிள்ளைகள்

கடும் சோகத்தில் இருக்கும் தங்களுக்கு,

நான் என்னத்தைக் கூறுவது, எப்படிக் கூறுவது என்று தெரிய வில்லை. யாரோ ஒருவர் கூறியதாக இரவு செய்தி கிடைத்தது. நேரத் தோடு செய்தி கிடைத்திருந்தாலும் நான் வரக்கூடிய கலந்துகொள்ளக் கூடிய உடல் நிலையில் இல்லை. படுத்த படுக்கையிலிருந்து இக் கடிதத்தை எழுதுகிறேன்.

சுமார் 2 மாதத்திற்கு மேலாக வாடகைக்கு வீடு தேடி அலைந்து கடைசியில் 10 வாடகையும் 21/2 லட்சம் அற்வாட்சுடன் வீடு கிடைத்து 23.11.2013ல் புதிய இடத்திற்குப் போனது விழுந்து கால் உடைந்து விட்டது நடமாட முடியாது. பின்பு விபரம் எழுதுகிறேன்.

குணசிங்கம் நீர் ஒரு பொதுவுடமைவாதி என்னையும் ஈர்ந்த ஒருமார்க்கம்தான். இருந்தாலும் விதி செய்யும் சதியை மாக்சீயம் ஏற்றுக்கொள்ளாது விட்டாலும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதைத்தான் வாழ்க்கையில் அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம். விதியோ, சதியோ உடன்பிறந்தவர்களை பிள்ளைகளை கூடிக் குடும்பம் நடத்திய இல்லாளைப் பிரிவதென்பது சாதாரணமானதல்ல. நாம் எத்தகைய ஆறுதல்களைச் சொன்னாலும் நேரடியாகப் பாதிக்கப் பட்ட உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏனைய உறவுகளுக்கும் தான் தெரியும். அதன் தாக்கத்தின் தவிப்பு உங்களது உங்கள் குடும்ப அங்கத்தவர்களது சோகத்தில் பங்குகொண்டு ஏதாவது ஆறுதல் சொல்ல முயற்சிக்கிறேன். **"ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்துமென்ன, வேரென நீயிருந்தாய் அதில் வீழ்ந்து விடாது இருந்தேன்"** என்றொரு வரிகள் உண்டு. அதேபோன்று இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை. என்றும் ஒரு வரி உண்டு. இவை எப்படி இருக்க கவலைப்படாமல், அழாமல், வேதனைப்படாமல் இருக்க முடியுமா? முடியாது. ஏனையவர்கள் ஆறுதல் வார்த்தைகளும் அனுசரணைகளும் மற்றும் அன்பான அரவணைப்புக்கள் ஆகியன ஒத்தடம் கொடுப்பது போன்று அமையும். காலம்தான் சோகத்தின் கோரத்தை குறைக்கும். ஆறுதலடையுங்கள் பராக்காக இருங்கள். முடிந்தால் தொடருவேன்.

**இங்ஙனம் மா.நவரத்தினம்**

# ஜமுனாவின் வெற்றிடத்தில்....
# நினைவாக சில துளிகள்

அம்மா!

நீ தாய்!!

உன் இடத்தில்

இனி யார்?

சொல்லாமல் போனாயே வெகுதூரம்

சொல்லாலே மாழுமா எம் சோகம்

ஆற்றுவார் யாரோ

ஆகுமா நீ இன்றி

இல்லாமல் போனவைக்கு

இடுவதென்றால் பட்டியல்

இயலுமா.....

ஈடாகுமா...

நீ இல்லாத நாட்களெல்லாம்

இனிச் செல்லாத நாட்கள் தான்

உன்

மடி சுமந்த பிள்ளை இன்று

கரு சுமந்து நிற்கின்றாள்

அவள் காய்க்க

பேர்த்தியை நீ தூக்க

நாள் பார்த்து காத்திருந்தோம்

ஏன் பொய்த்துப் போனதம்மா.

நான்கு
பிள்ளைகளை பெற்றவள் நீ
அவர்கள் கற்றுயர்ந்து
எல்லைகளை தொட்டெழுந்து
அரச பணி அலங்கரிக்க
ஆன பணி நீ செய்தாய்

அதிகாலை எழுந்து
பலகாரம் தேடி
பாலோடு பரிமாறி – மதிய
ஆகாரம் பொதி செய்து
கொடுத்தனுப்பி வைப்பாயே
இன்று
வெறு வயிறாய் பிள்ளைகள்
வெளிக் கிளம்பிப் போகின்றார்
வேகுகின்றான் தந்தை இங்கு
ஆகுமா நீ இன்றி.

பாட்டாளித் தோழனுக்கு
கூட்டாளி பலருண்டு
பகலிரவு எவ்வேளை
எவர் தேடி வந்தாலும்
பசியோடு அவர் திரும்பிப்
போன வர லாறில்லை.

நொடிப் பொழுதில் உணவாக்கி
விருந்தளித்து விடை கொடுப்பாய் – உன்
பெரும் குணத்தை போற்றுதற்கு
வார்த்தை இங்கு ஏதம்மா.

குலம் தழைக்க பணி செய்த
குணசிங்கன் வாழ்வில்
இடம் பிடித்த இல்லாள் நீ
இதுவரையில் உனக்கென்று – வீடு
இல்லாத குறைவிட்டு
இதயத்தில் பெரும் துயரம்
சுமக்கின்றான் அவன் இங்கு

கோவில் ஒன்று கட்டி வைப்போம்
கொலுவிருக்க நீ அங்கு
தெய்வமாய் வரவேண்டும்
தீபம் அங்கு ஏற்றி வைப்போம்
ஓடி வந்து ஒளி வீசி
காட்சி தர நீ வேண்டும்
மலர் அங்கு சூட்டி வைப்போம்
வாசமாய் மணம் வீசி
மாட்சிமைகள் தர வேண்டும்

நீ இல்லா வாழ்வெமக்கு
..........................?

இணுவையூர்
இலட்சுமி புத்திரன்

## எங்கள் விழிகளில் ஜமுனை வடிகிறதே....!

எங்கள் சோதரியே ஜமுனா....!
உங்கள் பிரிவுத் துயரை நினைக்கும் போது
எங்கள் விழிகளில் ஜமுனா நதி
பெருக்கெடுத்துப் பாய்கிறதே....!

அன்பும் ஆனந்தமும் குடிகொண்ட இல்லத்தில்
குலவிளக்காய் ஒளிவீசிய உங்கள் மீது
துன்பச் சூறாவளியை ஏவி விட்ட
காலதேவனின் கொடுமையை எம்மால்
மறக்க முடியவில்லையே....!

குன்றும் குழியுமாய் ஒடுங்கிக் கிடந்த
சமுதாய வீதியை செப்பனிடச்
சென்ற அறிவும் ஆளுமையும்
வீரமும் விவேகமும் கொண்ட
தன்னிகரில்லாத் தலைவனுக்கு
துணை நின்ற தலைவியே
எங்கள் சமூகத்தின் சார்பாக
உங்களை வணங்குகின்றோம்.

அன்பான தலைவன்
அன்பான பிள்ளைகள்
அன்பான சொந்தங்கள்
அனைத்து உறவுகளையும்
துன்பக் கடலில் மூழ்க விட்டு
நீங்கள் மட்டும் தனி வழியே

இறுதி யாத்திரை போனதை
பொறுத்துச் கொள்ள முடியவில்லையே....,!

வீரமறவன் குணசிங்கம் நடந்து வந்த பாதைகள்
ரத்தமும் ரணங்களும் தோய்ந்தவை
முட்களும் கற்களும் நிறைந்தவை
துப்பாக்கி முனைகளும் வாள் முனைகளும்
ஒலிப்பவை எனினும்
தன் வீர வடுக்களைச் சுமந்து கொண்டு
சமூகத் தடைகளை உடைப்பதற்கு
போர்க்களம் நோக்கிப் புயலாகப் புறப்பட்டார்
வெற்றிக் கனிகள் பலவும் பறித்தார்
இத்தனைக்கும் துணையாக நின்ற
ஜமுனா அன்னையின் நாமம் வாழ்கவே.

**ஆவரம் க.சின்னராஜன்**
**முகாமையாளர்,**
**மக்கள் வங்கி.**

# மரண அறிவித்தல்



## திருமதி யமுனா (வவா) குணநாயகம் (குணசிங்கம்)

வாகீஸ்வரி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், பலாலிவீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை (கோண்டாவில் டிப்போ அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யமுனா (வவா) குணநாயகம் நேற்று (11.12. 2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சீனியர் குணநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ருக்குமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சினியர்- லட்சுமி (புன்னாலை கட்டுவன்) தம்பதியரின் அன்பு மருமகளும், மாக்சனா, வோரினா (நாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), கபேஸ் (ஊடகவியலாளர் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்), றொமினா ஆகியோரின் அன்புத் தாயும், கோகுலரமணனின் (லண்டன்) அன்பு மாமியும், பிரேமராணி, ரஞ்சன், ராதாம்பாள் (ஜேர்மனி), வசந்தன் (லண்டன்), சுதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம் (கந்தையா- கனடா), நவரத்தினராசா, புஸ்பமலர், பூமலர், இரதத்தினம்மா (வெள்ளை), காலஞ்சென்ற பவானி, சிவசேகரன் (சேகர் அல்வாய்), ஞானேஸ்வரன், வசந்தி, சந்திரபாலா (ஜேர்மனி), மேரி (லண்டன்), ஜெகதா ஆகியோரின் மைத்துனியும், பாலசிங்கம், காலஞ்சென்ற யோகம்மா, நடராசா, பாலசுப்பிரமணியம், ரதிப்பிரியா ஆகியோரின் பாசமிகு சகலியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
(கோண்டாவில் டிப்போவில் இருந்து 300M தொலைவில்)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் ஜமுனா குணநாயகம்

திருமதி.ஜமுனா குணநாயகம் அவர்கள் காலமானார் என்ற சோகம் கமழ்ந்து வந்த துயரமான செய்தியைக் கேள்விப்பட்டபோது நாமெல்லோரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம். அமரர் அவர்களும் அவரது அன்புக் கணவர் குணசிங்கம் மற்றும் அவரது பாசமிகு பிள்ளைகள் அனைவரும் எமது குடும்பத்தோடு மிக நெருக்கமாக உறவாடி வந்தார்கள். அமரர் அவர்கள் சிறந்த பண்பாளர். அனைவரையும் அன்போடு உபசரிப்பவர். தன் கணவர்மீதும் பிள்ளைகள்மீதும் அளவற்ற பாசம் கொண்டவர்.

அமரர் அவர்கள் அன்பின் உறைவிடமாகவும் பாசத்தின் பிறப்பிடமாகவும் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் வாழ்ந்தவர். அன்னாரின் மறைவு அவரது அன்புக் கணவர், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் பேரிழப்பாகும்.

தோழர் குணசிங்கம் அவர்கள் ஓர் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த ஓர் பொதுவுடமைவாதி. முற்போக்குச் சிந்தனையாளர். தீவிரமான சமூக நேசிப்புக் கொண்ட போராளி. அகில இலங்கைத் தமிழ் மகாசபையின் செயற்பாடுகளின் முன்னோடி. உழைக்கும் எளிய மக்களின் தோழன். ஒடுக்கப்பட்ட மக்களின் வழிகாட்டி. இத்தகைய மனித நேயப் பண்புகள் நிறைந்த குணசிங்கம் (குணநாயகம்) அவர்களின் துணைவியாரின் பிரிவுத் துயரில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

அமரர் அவர்களின் பிரிவுத் துயரில் மூழ்கி இருக்கும் அவரது அன்புக் கணவர், பாசமிகு பிள்ளைகள், உறவினர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.சின்னராஜன் சித்திரலேகா குடும்பம்

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

# கண்ணீர் பூக்கள்

அன்னையின் மடியில் 16 - 05 - 1961



ஆண்டவன் அடியில் 11 - 12 - 2013

## அமரர் திருமதி. ஜமுனா குணநாயகம்

அன்பின் சகோதரியே ஜமுனா
ஆடம்பர வாழ்வின்றி அமைதியாய் வாழ்ந்தவளே
அன்பான கணவனிற்கு ஆறுதல் நீதானே
அவரைத் தனியாக தவிக்க விட்டு எங்கு சென்றாய்
உன் அன்பான அரவணைப்பில் வாழ்ந்த பிள்ளைகளோ - இன்று
ஆறாத்துயரில் மூழ்கி விட்டார் - அவர்களை
பண்பான பிள்ளைகளாய் வளர்த்து வந்தாய்
பாசமுடன் நேசமுடன் பக்குவமாய் வளர்த்து வந்தாய்
இன்று யார் கண்பட்டதுவோ ஈடு இணையற்ற - உனை
கரிகாலன் கவர்ந்ததேனோ!

பேரப்பிள்ளையை முத்தமிட பெரும் கனவு கண்டுநின்றாய்
பிள்ளை முகம் காணாமல் பறந்து நீ எங்குசென்றாய் - வெகு தூரம்
ஏன் சென்றாய் வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல்
நேரம் வந்ததுவோ நேர்மைக்கு அழிவு கிட்டியதோ
நேர்த்தியான உன்வாழ்வு நெகிழ்ந்ததேனோ
தாரம் இழந்து துடிக்கின்றான் உன் கணவன்
தாயைத் தேடி தவிக்கின்றனர் உன்பிள்ளைகள்
யாரையம்மா தேற்றிடுவோம் யார் யாரை தேற்றிடுவார்
யாழின் நரம்பொன்று அறுந்ததினால் அழுகின்றோம்

கரைதேறும் வழிதேடி கதறிடும் பிள்ளைகட்கு
கலங்கரை விளக்காக வந்து உதித்திடம்மா
கரையேற நல்வழி காட்டிடம்மா
காணத்துடிக்கின்றோம் கண்மணியே வந்திடம்மா.......

அன்னாரின் மறைவினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க. வைரமுத்து குடும்பம்
கோண்டாவில்

# இதய அஞ்சலி

பிறப்பு

16 — 05 — 1961



இறப்பு

11 — 12 — 2013

எனது அன்பு நண்பன் சீனியர் குணநாயகம்
அவர்களின் அன்பு மனைவி

## அமரர் குணநாயகம் ஜமுனா (வவா)

மின்னியது செய்தி விம்மினோம் - நெடிதுயர்

பின்னியது நெஞ்சில் கலங்கினோம்

என்ன இது? ஏன் மறைந்தீர்?

இறைவனுக்கு உம்மை அழைக்கும் அவசரம் ஏன்?

அன்பரீர் உங்கள் ஆன்மா சாந்தி பெற

விண்ணவனைப் பணிகின்றோம் நாம்

துயர் பகிர்ந்து கொள்ளும்

**பொன்னுக்கோன் மாயவன்**

குப்பிளான் தெற்கு - குப்பிளான்
11.12.2013

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

16 – 05 – 1961



இறப்பு

11 – 12 – 2013

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும்,
வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் குணநாயகம் ஜமுனா (வவா)

அமைதியான புன்சிரிப்பும்
ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு
கனிவு மொழி பேசும்
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததேனோ?
கண்களெல்லாம் கடலாய்ப் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அமைதியாய் மரணத் திரையினிலே
மௌனமாய் மறைந்ததேனோ?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துயரில் பங்குகொள்ளும்
குணபாலசிங்கம் குடும்பத்தினர்
11.12.2013

# கண்ணீர் பூக்கள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 1961 | | 2013 |
| 05 | | 12 |
| 17 | | 11 |



எமது சங்க உறுப்பினரும் சக ஊடகவியலாளருமான
குணநாயகம் கபேஸ் அவரது பாசமிகு தாயாரான

அமரர்

## ஜமுனா குணநாயகம்

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப்பிராத்திக்கின்றோம்.

*சாந்தி....சாந்தி....சாந்தி....*

யாழ் ஊடக அமையம்

84/A
ராசாவின்தோட்ட வீதி
யாழ்ப்பாணம்

# கண்ணீர்ப் பூக்கள்

மண்ணில்
1961
-
05
-
16



விண்ணில்
2013
-
12
-
11

கோண்டாவிலைச் சேர்ந்த

## அமரர் குணநாயகம் ஜமுனா

அன்றில் பறவைகள்
இரண்டில் ஒன்று பிரிந்ததனால்
நெஞ்சக் கூட்டில்
துயர் சுமந்து தவிக்கின்றான்
தானைத் தலைவன்
கூடு குலைந்தது
குலம் தழைக்கப் பணி செய்தோன்
கரம் பிடித்த மனையாள்
காணாமல் போய்விட்டாள்
வலக்கரத்தை இழந்த வாழ்வு
சாதனைகள் செய்த போது
சோதனைகள் வந்த போது
வேதனைகள் எதையும் வெளிக்காட்டி நில்லாது
நீ இருந்து செய்த பணி
யார் இதனை நிரப்பிடுவார்

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர்
மகாசபை சார்பாக

12.12.2013

Sri maruthy 0114 260044

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## குணநாயகம் ஜமுனா

பிறப்பு : 1961.05.16
இறப்பு : 2013.12.11

மனிதச் சுடர் விளக்காய்
மனமெங்கும் ஒளிபரப்பி
புனிதப் பெருவாழ்வை
புவிமீது வாழ்ந்து - நிதம்
பனிதரும் குளிர் நிழலாய்
பாசத்தைப் பொழிந்து மனம்
கனிவென புகழ்ந்து போற்ற
காலத்தை வென்று வாழ்ந்தாய்
நானிலம் நின் நாமத்தை
நினைத்து நிற்கும்...
வானிலம் உன்னை ஏற்று
வாழ்த்தினை பாடிநிற்கும்
தேனிலும் இனிய நல்லாள்
தெய்வமாய் ஆகிவிட்டாள்.

அதிபர், போதனாசிரியர்
2009^ தாதிய மாணவர்
தாதியப் பயிற்சிக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

Noble Printers- 021 2220386

# கண்ணீர் அஞ்சலி

மலர்வில்
16.06.1961



விண்ணில்
11.12.2013

## குணநாயகம் ஐமுனா (வலா)

அன்பினால் அனைவரின்
மனதில் நிறைந்தாயம்மா
புன்சிரிப்பாலே வாழ்நாளில்
மற்றோரைக் கவர்ந்தாயம்மா
பிறந்த மண்ணில் சிறந்தவளாய் வாழ்ந்தாயே
சென்றாயோ அம்மா விண்ணுலகம்!
கனத்த விழிகளுடன் நாம் தவிக்கின்றோம்
நின் பிரிவால் புண்ணானதே எம்மிதயம்
என்றும் மறவோம் உம்மை .... ! ! !

அம்மாவின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஆவரங்கால் கிழக்கு
புத்தூர்
12.12.2018

பிரிவால் துயருறும்.
வை.நாகராசா குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
16 * 05 * 1961



மறைவு
11 * 12 * 2013

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த

## அமரர் திருமதி.ஜமுனா குணநாயகம்

*(வவா)* அவர்கள்

அன்பின் திருவுருவாய் பாசத்தின் இருப்பிடமாய்
இன்முகம் காட்டி வாழ்ந்தீரே!
நீங்கள் எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்?
உங்கள் நினைவுகளுடன் கலங்குகின்றோம்
ஒருமுறை வந்தெம்மை பாரீரோ!
உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

*அன்னார் சிவபதம் அடைந்தமையையிட்டு எமது கண்ணீர்க் காணிக்கையை தெரிவிப்பதுடன் அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*கோண்டாவில் வடக்கு.*
*கோண்டாவில்.*

ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையம்,
கல்வி வளர்ச்சிக் கழகம்,
விளையாட்டுக் கழகம்.

# விழிநீரால் வழியனுப்பும் இதய அஞ்சலி



அன்னை மடியில்
16 . 05 . 1961

ஆண்டவன் பிடியில்
11 . 12 . 2013

எமது கல்லூரி நண்பி கு. றொமீனா அவர்களின்
அன்புத் தாயார்

அமரர்

## திருமதி இமுனா குணநாயகம்

காற்றலையில் வந்த செய்தி
காதுகளுக்குள் அக்கினிக் குழம்பாய்
நேற்றுவரை நேசமுடன் பழகிய
நினைவுகள் நெஞ்சை கனக்கிறது
கண்ணிமை கதவுகளை தட்டுகிறது
கால(ன்) நதி ஓட்டத்தில் – நீவிரும்
கரை சேரா ஓடமாய்.......
பயிலுகின்ற உள்ளங்கள் பரிதவிக்கின்றது – நீர்
துயிலுகின்ற துயரம் கண்டு.........

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

துயருறும்
யாழ் பேராதனை நண்பர்கள்
2012 GAQ
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம்.

## திருமதி யமுனா (வவா) குணநாயகம்



பிறப்பு இறப்பு

பிறந்த இடம்:
கோண்டாவில்

வாழ்ந்த இடம்:
உரும்பிராய்

வாகீஸ்வரி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், பலாலிவீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை (கோண்டாவில் டிப்போ அருகாமை) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணநாகம் யமுனா (வவா) நேற்று (11.12.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் *சீனியர்* குணநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ருக்குமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்காள *சீனியர்*, லட்சுமி (புன்னாலை கட்டுவன்) தம்பதியரின் அன்பு மருமகளும், மாக்சனா, வோரினா (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), கபேஸ் (ஊடக வியாலாளர் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம்), றொமினா ஆகியோரின் அன்புத் தாயும், கோகுலரமணனின் (லண்டன்) அன்பு மாமியும், பிரேமராணி, ரஞ்சன், ராதாம்பாள் (ஜேர்மனி), வசந்தன் (லண்டன்), சுதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தர்மகுல சிங்கம் (கந்தையா கடை), நவரத்தினராசா, புஸ்பமலர், பூமலர், இரதத்தினம்மா (வெள்ளை), காலஞ்சென்ற பவானி, சிவசேகரன் (சேகர் அல்வாய்), ஞானேஸ் வரன், வசந்தி, சந்திரபாலா (ஜேர்மனி), மேரி (லண்டன்), ஜெகதா ஆகியோரின் மைத்துனியும், பாலசிங்கம், காலஞ்சென்ற யோகம்மா, நடராசா, பாலசுப் பிரமணியம், ரதிப்பிரியா ஆகியோரின் பாசமிகு சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

# கண்ணீர்த் துளிகள்



மண்ணில்

16 . 05 . 1961

விண்ணில்

11 . 12 . 2013

# அமரர். குணநாயகம் ஜமுனா

<u>அன்புடன் அண்ணிக்கு இளையமைத்துனரின் இதயக்கீறல்கள்</u>

என் சிறுவதில் தாங்கள் பெற்றெடுத்த செல்வங்களுடன் என்னையும் சேர்த்து வளர்த்தீர்கள்.
உம் பணியை யாம் மறந்து எட்டு வருடங்கள் புத்தி கெட்டு
எட்டி இருந்து விட்டேன்! நான் ஒரு பாவி.

புத்தி தெளிந்த வேளை - உன்
மூத்த செல்வத்தின் திருமண நாளில் - நான்
அழையா விருந்தாளியாகிலும் - உன்
பாதம் பணிந்து மன்னிப்புக்கேட்டேன்!

மீண்டும் நாம் கூடி மகிழ வாய்ப்பளித்த
இறைவனென்று நன்றியும் சொன்னோமே!
எம் வீட்டு வாசலுக்கு தங்களின் வரவை எதிர் பார்த்து
காத்திருந்தோமே!
நாங்களும் வர எண்ணிய போதெல்லாம் - உமை
வருத்தி இறைவன் மகிழ்ந்தானோ!

அது புரியாமல் நாம் உமக்கு சத்திர சிகிச்சை மூலம்
இன்னுமொரு ஜென்மம் வாங்கையல்லவா எண்ணியிருந்தோம்!
இந்த ஜென்மமே இத்தோடு போதுமென்று - நீங்கள்
எண்ணியதை யார் அறிவார் ?

உங்கள் வீட்டு முற்றத்தில் பந்தல் போட்டு - நாம்
எல்லோம் கூடியுள்ளோம், நீங்கள் தான் எங்குள்ளீர்கள்
எந்த முகவரிக்கு நான் என் மடலை அனுப்ப

## திக்குற்று நிக்கிறோம் ! திரும்பி வரமாட்டீர்களா ?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கும் உறவினர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்

## ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

S. சேகர்


கண்ணீர் அஞ்சலி
திருமதி. ஜமுனா குணநாயகம்
தோற்றம்
16.05.1961
மறைவு
11.12.2013
எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
அறிவொளி சனசமூக நிலையம்



கண்ணீர் அஞ்சலி
திருமதி
குணநாயகம் ஜமுனா
தோற்றம்
16.05.1961
மறைவு
11.12.2013
தகவல்:குடும்பத்தின


கண்ணீர் அஞ்சலி
மலர்வு
1961.05.16
உதிர்வு
2013.12.11

உ
சிவமயம்



# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்!

கடந்த 11.12.2013 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் இல்லத்தரசி

## அமரர் திருமதி.ஜமுனா (வவா) குணநாயகம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 12.01.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பலாலி வீதி,*
*உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.*
*(கோண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து 300 M தொலைவில்)*

"நன்றி"


**இங்ஙனம்**
**சீ.குணநாயகம்**
**(குணசிங்கம்)**





# நன்றிகள் நவில்கின்றோம் நன்றே!

ஆருயிர் அருமை யானோர்
அகிலவாழ் வொழித்த போது
நேருயர் நினைவ தோடு
நெருங்கியே அருகாய் வந்து
ஒருயர் உள்ள மாக
ஒன்றியே உதவி நின்றோர்
சேருயர் செப்ப மோடு
செப்புமஞ் சலியே செய்தோர்
உற்றவர் உறவி னாளர்
உடன்துணை நட்பி னாளர்
மற்றவர் மருந்தி னாளர்
மாண்புறு கிரியை யாளர்
கற்றுயர் கருத்தினோடு
கடமையில் கலந்து கொண்டோர்
நற்றவர் நலத்தோர்க் கெல்லாம்
நன்றிகள் நவின்றோம் நன்றே!



**இவ்வண்ணம்**
**கணவரும்,**
**பிள்ளைகளும்.**

